[illegible]

[illegible]

[illegible]

T.D.R.C. 3471

RANo 73-2-76

116250

கடவுள் துணை.

தைரியநாதசுவாமிகளென்னும்

வீரமாமுனிவர்

அருளிச்செய்த

# அர்ச். கித்தேரியம்மாளம்மானை.

இஃது

இராயபுரம் அர்ச். இராயப்பராலயத்தில்

மகாசங்கைக்குரிய குரு

தே. மரி. ஞானப்பிரகாசநாதசுவாமிகள்

உதவிபெற்று,

மேற்படிகோவில் தமிழ் கல்விச்சாலை உபாத்தியாயர்

பவழை

வை. தே. ம. சின்னசாமிசெட்டியாரவர்களாற்

பார்வையிடப்பட்டு

மயிலை

பொன்னுசாமிமுதலியாரவர்களால்

சென்னை

இலக்ஷ்மீவிலாஸ அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1876.

(*Copy Right.*)

## விளம்பரம்.

இதனடியிற்கண்டிருக்கும் புத்தகங்களெல்லாம் இராயபுரம் அர்ச். இராயப்பர்கோவில் விசாரணைக்குரு இராஜரிஷி சங். தே. மரி. ஞானப்பிரகாசநாதசுவாமியாரிடத்திலும், மேற்படிகோவிலுக்குத் தென்னண்டைவீதியிலிருக்கும் ம-ா-ா-ஸ்ரீ, ம. பொன்னுசாமிமுதலியாரிடத்திலும் வாங்கிக்கொள்ளலாம்.

### கடித மெழுதிக்கொள்ளுகிறவர்கள்.

இராயபுரத்தில் மேற்படி கோவிலுக்குத் தென்னண்டைவீதியிலிருக்கும் புத்தக வியாபாரஞ்செய்யும் ம. பொன்னுசாமிமுதலியாருக்குக் கொடுப்பதென் றெழுதவும்.

| புத்தகம். | அணா. | பை. | தபால். |
|---|---|---|---|
| * பூபாலம், தேவசிந்து... | 1 | 0 | 1 |
| * மரியன்னைமாலை ... | 1 | 0 | 1 |
| மாதாவுலா ... | 1 | 0 | 1 |
| சலப்பிரளயம் ... | 1 | 0 | 1 |
| மெய்ஞ்ஞானக்கும்மி ... | 1 | 0 | 1 |
| மாணிக்கமாலை ... | 2 | 0 | 1 |
| கிறீஸ்தினுள் அம்மானை ... | 2 | 0 | 1 |
| நடுத்தீர்வையுலா ... | 2 | 0 | 1 |
| பேரின்பக்காதல் ... | 2 | 0 | 1 |
| சர்வேஸ்வரன்சதகம் ... | 2 | 0 | 1 |
| அலசம்மானை ... | 4 | 6 | 1 |
| தேவசகாயசிகாமணிமாலை ... | 8 | 0 | 1 |
| ஞானத்திருப்புகழ் ... | 0 | 0 | 1 |
| கித்தேரியம்மாளம்மானை ... | 8 | 0 | 2 |
| மரிகருதம்மாளம்மானை... | 10 | 0 | 2 |

மேற்கண்ட புத்தகங்கள் தலைவிலிருந்து இனத்திற் கொருபுத்தகங் கேட்பவர்களுக்கு தபாற்கூலி அணா ஆறில் அனுப்பப்படும்.

பன்னிரண்டுபுத்தகம் மொத்தமாய்க்கேட்பவர்களுக்கு ஒருபுத்தகம் இலவசமாய்க் கொடுக்கப்படும்.

மேற்கண்டபுத்தகம் மொத்தமாய்ச்சேர்த்து வாங்கப்பட்டவர்களுக்குத் தபாற்கூலி சாசமாயிருக்கும்.

மாதாஅம்மானை, கொஸ்தந்தினம்மானை, இஸ்தாக்கியாரம்மானை, அந்தோனியாரம்மானை, ஞானமதியுள்ளான் இவையாவும் வேலைகள் நடக்கின்றமையால் விரைவில் வெளிப்படும்.


# சிறப்புப்பாயிரம்.

இராயபுரம்

ச. ஜெகராவுமுதலியாரவர்க ளியற்றிய

நேரிசையாசிரியப்பா.

பூமலிதொடர்ச்சி பொதுளியகற்பகக் *
காமலிகேணிக் கம்பலைப்பைங்கூழ் *
தம்மனைப்பழிச்சி தகைமுடிநெரித்து *
வெம்மனைவருகென விளிப்பபோல்வளங்கெழீஇ *
சீருடைச்செல்வன் செய்திறந்திறம்பா *
நீருடைமகளணி சிரப்பியபேழை *
எனுமுலுசித்தா னியநன்னாட்டின் *
மனுமுறைநடாத்திய மன்னன்பிதாக்கண் *
வான்முடிபாந்து வளர்பிறையணிந்து *
தான்முடிபாந்த தாய்மகனிமித்தம் *
பொன்முடிவாய்ந்தொளிர் பொம்பேர்பறம்பிற் *
றன்முடியீந்தொளிர் சாய்ந்தகித்தேரி *
கோதையைப்புகழக் குணக்கடலாடிக் *
காதையையோரம் மானையாக்கினன் *
முன்னூல்விளக்க முழுதொருங்குணர்ந்து *
தொன்னூல்விளக்கந் தொகுத்தவோர் நாலுந் *
தேம்பாவணிமலர் சேரோமுனிக்காத் *
தேம்பாவணியெனச் சிறந்தகாப்பியமும் *
காவலூரனைக்குக் கலம்பகமொன்றும் *
தாவருமெய்ப்பொருட் சதுரகராதியும் *
அன்னையழுங்க லந்தாதியொன்றும் *
பின்னையாப்பதித பேதையர்க்காக *
வேதவிளக்கமும் வேதியரொழுக்கமும் *
பேதகமறுத்தலும் பேசியவிதரணன் *
பிராஞ்சிலுந்தமிழ்மொழி பெயர்த்தகராதியும் *
புராணமாய்லத்தின் புகழையுமின்னும் *
பன்னூற்பகர்ந்த பாண்டித்தியனாய் *
எந்நூற்பொருளு மினிதுணரறிவினன் *

பொய்க்குருகரிக்குழூஉ புதைந்திடுபேறு *
மெய்க்குருவீர மாமுனிப்பெயரினன் *
பொன்மணிவிளக்கப் புரிசைசெப்புடைசூழ் *
நன்மணிராய மாநகரொழுந்த *
மாதவன்ஞான வடிவுருவாய்ந்த *
ஆதவன்வேத வாழிதோ யந்தணன் *
அறவாழிபெருமா னடியிணைத்துணையை *
மறவாதசிந்தை மாண்பினர்நண்பன் *
நாதன்சற்குரு ஞானப்பிரகாச *
நாதன்செய்த நயத்தகுமுதவி *
பெற்றுப்பவழைப் பெருநகர்க்கண்ணன் *
கற்றுப்பிறர்க்குக் கழறுந்திறமையன் *
மனுவேல்பயந்த மாதவக்கொழுந்து *
மனுவேல்பரந்த வாழ்வினன்சின்னச் *
சாமியெனும்பெயர் தாங்கியசேடன் *
பூமிகுணாளன் புரிந்தவம்மானையைப் *
பன்முறையாய்ந்து பார்த்துளங்களித்து *
நன்முறையென்ன நவின்றிடக்கேட்டு *
நீர்வளநிலவள நெல்வளஞ்சுரந்த *
தார்வளநிறைந்த தனயனாக்கொண்ட *
மயிலைமாநகரன் மாசுரநதியன் *
அயிலைவேலாயுதன் அற்புதக்குணாளன் *
பொன்னுச்சாமி புண்ணியவிசாலன் *
என்னும்பூபன் எழுதாவெழுத்திற் *
பதிப்பித்துலகம் பரந்திட *
மதிப்பினுயர வாய்ந்தனன்மாதோ. *

சர்வேஸ்வராயநம:

அர்ச்சியசிஷ்ட

# ஒத்தேரி அம்மாளம்மானை.

## சிறப்புப்பாயிரம்.

### விருத்தம்.

கார்கொண்டவானுமேத்தக் கசடெதிராவுநீக்கி *
நேர்கொண்டதுணைநீத்தொன்று நிமலனைப்பணிந்துபோற்றிப் *
பார்கொண்டசிறப்பின்மிக்கோர் பயன்மருஞ்சரிதைபாடச் *
சீர்கொண்டதொடைப்பாத்தானே திருத்தெனவடிமேற்கொள்வாம். (க).

ஒப்பருஞ்செல்வத்தோங்கு முலுசித்தாணியனுற்ற *
மைப்பொருமலையுட்சீரால் வளர்பொம்பேரென்னுங்குன்றிற் *
செப்பருங்கீர்த்திதன்னைச் சிறந்தஒத்தேரிகாதை *
தப்பருமுரிமையூன்றித் தரணிமேல்வழங்கச்சொல்வாம். (உ)

தங்கையினல்லோர்யாருந் தரணிமேற்பணிந்துவாழ்த்தச் *
செங்கையிற்கொய்ததன்பூஞ் சிரமெடுத்தேந்திப்போன *
நங்கையின்கதையம்மானை நவின்றுளோர்நவிலக்கேட்போர் *
சங்கையினுயர்ந்துவான்மேற் றகுங்கதிவழிபெற்றுய்வார். (ங.)

### அம்மானை.

பார்முதலாய்த்தான்படைத்த பல்லுலகமத்தனையும் *
வேர்முதலாய்ப்பேர்த்தசைக்கும் வீரதனிக்கோலான். (க)

மூவாளொருபொருளாய் முற்றும்பகாப்பொருளாய்த் *
தேவாதிதேவனவன் சேவடியைச்சேர்ந்தேத்தி. (உ)

வானுவப்பமண்ணுலகின் மன்னுயிர்கள்வாழ்ந்தோங்கத் *
தானுவந்துதந்தசயத் தன்மையெழுகன்னிகையின். (ங)

காதையுரைத்தம்மானைக் கட்டாய்விளையாடப் *
பேதையர்க்கோரம்மானைப் பேதையுநான்றந்திடுவேன். (ச)

பொய்வழிநூனீத்தொழியப் பூதலத்திலோர்மகனாய் *
மெய்வழிநூலோதிநமை மேவியளித்தாண்டபிரான். (ரு)

கன்னியருத்தாயாய்க் களித்தின்றருட்சேவடியைச் *
சென்னியருமாலையெனச் சேர்த்தியோனன்றுழ்ந்திறைஞ்சி. (சு)

தேவகன்னித்தாயடிக்கோர் தேன்றொடையாய்மற்றவனை *
மேவுகன்னிக்காதைநலம் வெள்ளையாய்ப்பாடுகிற்பேன். (௭)

வானீங்காநீர்பொழிய மண்விளைவுமூன்றுகுப்பத் *
தேனீங்காப்பூமலராத் தீங்கமழ்வாய்க்காவிழற்ற. (௮)

நோய்மெலியச்சீர்மலிய நூல்தெளியவேதமெழப் *
பேய்மெலியமெய்ம்மலியப் பீடையெலாமுற்றொழிய. (௯)

கற்பழியாமாட்சிமிகக் கைக்கொடையோடன்புமிகத் *
தொற்பழியாம்பாவந் துறந்தகலநாம்வாழ. (௧0)

ஈங்குதித்தாடங்காமே லேந்தியதன்பொற்சிரத்தாள் *
ஓங்குரத்தாள்வெற்புநலா ளொப்பிலசித்தேரியென்பாள். (௧௧)

இமிழ்வாழும்பொம்பே ரெனுமலைமேலாண்டனளே *
தமிழ்வாழுந்தென்மலைமேற் றன்றனயையால்வந்தெழுந்தாள். (௧௨)

அன்னமலைவாழ்புலவ ராய்ந்தபுகழ்ப்பாமுழங்க *
இன்னசிறுவம்மானை யேத்தியசொற்கேளாதோ. (௧௩)

வாய்க்கசப்பென்றாலு மருந்துகொள்வாரென்னிளஞ்சொற் *
காய்க்கசப்பென்றாலுங் கதையினிதென் றுண்ணாரோ. (௧௪)

நீர்துவரென்றுங்குடைய சித்திலமேபூண்டணிவார் *
சீர்துவவொன்றீங்குறைத்த தெய்வபயன்கொள்ளாரோ. (௧௫)

அறிவிலனென்றாலு மன்புடையென்சொற்பிதற்ற *
மறுவிலராய்நூற்புலவீர் வாய்ச்சினங்கொண்டெள்ளுவீரோ. (௧௬)

கண்டகுறைதீர்த்தணிபூங் கைச்சிரத்தாடன்பெருமைக் *
கொண்டகுறையற்றகதை கூறுதற்குநன்மைகொள்வீர். (௧௭)

பொருட்செல்வம்போர்ச்செல்வம் பூணிலுசித்தானியநா *
டருட்செல்வக்கன்னிகளா லாய்ந்தரியகீர்த்திபெற. (௧௮)

அந்நாளிலந்நாட்டை யாண்டவற்கேமக்களொ *
எந்நாளுமொப்பரிதா யீன்றநவமினனைய. (௧௯)

என்பாவடையா வெழின்முகத்தநங்கையரோ *
ஒன்பானொருபிறப்பா யோர்நாளுதித்ததுவும். (௨0)

நித்தியநற்றேவகிலை நீத்ததந்தைதாய்பகைப்பச் *
சத்தியநல்வேதநலந் தாமரிதிற்பெற்றதுவும். (௨௧)

பெற்றதந்தைதாய்பிரிந்து பேதையராய்நின்றதுவும் *
அற்றசிந்தையாசையெலா மாங்கொழியவாழ்ந்ததுவும். (௨௨)

தந்தையறிந்தாங்கவரைத் தான்சிறையிற்போட்டதுவும் *
சிந்தையறிந்துஞ்சிலநா ளிந்தியனைவாழ்த்தினதும். (௨௩)



ஆளனவோர்வானவன்வந் தச்சிறையைநீத்ததுவும் *
மீளவுமோர்சித்தேரி வேந்துகையிற்பட்டதுவும். (௨௪)

குறித்தமணமின்னவளே கோன்முன்வெறுத்ததுவும் *
வெறுத்ததனாற்சங்கிலியும் வெண்டளையுமிட்டதுவும். (௨௫)

அச்சிறையில்வானரசா என்போடிறங்கினதும் *
மைச்சிறையும்வெங்கதிருர் வானெனவில்வீசினதும் (௨௬)

மீன்முடியாள்பல்வரங்கண் மேவருளாற்றந்ததுவும் *
வான்முடியைச்சூடமலை வந்திருக்கவேவினதும். (௨௭)

தோழியராறைந்துந் தொடர்ந்துமலையேறினதும் *
வாழிலாராங்கிருந்து மாதவத்தைச்செய்ததுவும். (௨௮)

மறைமறுத்தவோர்குறுங்கோன் மன்னனையன்றற்புதங்கள் *
முறைமறுக்கமாட்டாமன் மூதுரையாண்மீட்டதுவும். (௨௯)

இவையறிந்ததந்தைசினந் தேவியபல்வேலினர்போய் *
நவையறியாமானெனவந் நங்கையரைவெட்டினதும். (௩0)

மற்றவருட்சித்தேரி வானுலகம்வாழ்த்துரைப்ப *
இற்றசிரங்கையிலெடுத் தேந்திநடந்தேகினதும். (௩௧)

வான்புகழமண்வியப்ப வந்தசயத்தாண்டவரைத் *
தான்புகழக்குன்றினுச்சித் தன்சிரம்வைத்திட்டதுவும். (௩௨)

நான்முடியாப்பேருவகைத் தாழ்கடலுண்மூழ்கினதும் *
வான்முடியைச்சூடிவர மட்டிலகொண்டோங்கினதும். (௩௩)

இவ்வாறுமுற்பிரிந்த வெண்மருயிர்த்தந்ததுவும் *
அவ்வாறுமட்டிலபல் லற்புதங்களாயினதும். (௩௪)

இங்கிவையேபத்துறுப்பி னெல்லையுடனடக்கி *
அங்கிவையேயான்பாடி யாய்ந்தறைவேனம்மானை. (௩௫)

சிறப்புப்பாயிர முற்றும்.

---

## பிறப்புக்காதை.

### விருத்தம்.

பார்விளைசிறப்பின் மிக்கதாயிப்பார் படர்நிலத்தொருமுகமாகச் *
சீர்விளைசிறப்பிற் பூமகளணிகட் சேர்த்தியசெப்பெனவாகப் *
போர்விளைசிறப்பிற் பூதலத்தாண்மைப் புக்குறைநல்லரணாக *
ஏர்விளைசிறப்பிற் பொருவிலதாகு மிலுசித்தானியவெனுநாடே. (௧)

இத்திறநாட்டி லுயர்மதிற்பிராக மென்னுமாநகரில்வீற்றிருந்து *
பொய்த்திறத்தேவர் புகழ்கெடவணங்கிப் புகைச்சினக்காயனேயென்பான் *
மெய்த்திறச்சுருதி பகைத்தகோனவற்கே விலப்பிலோர்சாத்திலேயொன்பான் *
கைத்திறத்தரிதிற் கடைந்தநன்மணிபோற் கன்னிகள்பிறந்தனவாறும் (௨)

கொடும்பகைகளைத்து நதியிடத்தெறியக் கொடியதாயேகியவாறும் *
அடும்பகைக்கஞ்சி சிலதியென்பா ளருமறைப்படுத்தியவாறும் *
கடும்பகைவிளைத்த தீவினைதீத்த கன்னிகளோங்கியவாறும் *
படும்பகைநமக்கே பயன்றரச்செய்யும் பரமனைவாழ்த்தியிக்ரூரைப்பாம். (௩)

## அம்மானை.

கன்னியருளோர்விளக்காங் கன்னியங்கித்தேரியம்மாள் *
மின்னியருண்மிக்கருளி வீற்றிருந்தநன்றடே. (௧)

அவ்வுலகிற்சேர்ந்துவப்ப வாய்ந்தவர்க்குமோர்வழியாய் *
இவ்வுலகிலொவ்வா விலுசித்தாணியநாடே. (௨)

நீதமொருங்கன்புதவை நின்றுபுடைக்காத்திருப்ப *
வேதமொருங்காண்டினிதில் வீற்றிருக்குநாடதுவே. (௩)

எண்டிசைக்குஞ்சத்தியசொல் லேந்தியமெய்வேதமுறைக் *
கொண்டிசைக்குநாடெனவான் கோன்புரக்குநாடதுவே. (௪)

ஓராழியாண்டவரை யோதமரக்கலங்கள் *
நீராழியெங்குமரு ணேர்ந்துவிடுநாடதுவே. (௫)

பாரிலெங்கும்பாவவினை பாய்ந்தவிருணீத்திரவி *
நேரவெங்கும்வேதவொளி நீட்டியொளிர்நாடதுவே. (௬)

எங்நாடுமொப்பிலதா யீறுமிலாமட்டுமிலா *
அந்நாடுமண்டியசீ ராய்ந்துரைப்பவல்லவரார். (௭)

எவ்வரசர்போர்ப்படையு மேத்தியவாளொப்பின்னி *
அவ்வரசர்கோமுரசொத் தார்த்திடிப்பகுன்முகிலே. (௮)

மெய்யாமறைப்பயன்போன் மேய்ந்தகடனீருமிழ்ந்து *
பொய்யாமழையாற் பொலிசைபொய்யாநாடெனவே. (௯)

தாகுந்திக்கோடையினுந் தான்குறையாப்பொன்கொழிப்ப *
வாகுந்தீவாய்ப்பொருளு மண்டியெழுநாடெனவே. (௧௦)

பங்கயமேலோதிமங்கள் பார்ப்பொடுநெற்பள்ளியுறப் *
பொங்கயநீர்ச்சங்கார்ப்பப் பூங்கழனிபூத்தனவே. (௧௧)

தேனிரம்பும்பூங்கரும்பின் செல்வமொடுகாய்த்தசெந்நெல் *
கூனிரும்பாறகொய்திடும்போர்க் கொள்வதலாற்போரிலதால். (௧௨)

மெய்கலந்தபொய்விலக்கு மேன்மையர்போல்வன்பகட்டால் *
வைகலந்நெற்றெழித்து மாறுதவன்பருளால். (௧௩)

ஆங்கிரப்போர்க்கீந்தனபின் னன்பால்விருந்தோம்பத் *
தாங்களெடுத்திகைவளர் தீழ்வறியாவாழ்வுளரே. (௧௪)

ஆங்கவர்தம்மன்பருள்போ லார்ந்தனைத்துஞ்சூழ்பிழற்ற *
ஓங்கவர்தம்வீரமென வோங்கியபூஞ்சோலைகளே. (௧௫)



வண்டார்ப்பப்பூவரும்ப மஞ்ஞைமகிழ்ந்தாடியொலி *
கொண்டார்ப்பவார்க்குங் குயில்குயிலக்காக்களிப்ப. (௧௬)

தோடணிந்தமாகமொனத் தொங்குகனிக்காவணிய *
நாடணிந்தசெல்வமெலா நான்புகழுந்தன்மையதோ. (௧௭)

கார்நிகருங்கைக்கொடையே கன்னிகருங்கற்பியலே *
போர்நிகரும்வெம்படையே பூநிகரும்பல்லறமே. (௧௮)

தார்நிகருஞ்சீர்தொடர்பே தாய்நிகருமன்னவனே *
பார்நிகரும்வெண்குடையே பார்நிகராநாடதுவே. (௧௯)

ஞானம்வழங்குவர்வாய் நாளுமடங்காதனபோல் *
தானம்வழங்குவர்கை தாழுமடங்காதனவே. (௨௦)

கல்லாரில்லாம்படிநூற் கற்றேகரைகாண்பார் *
இல்லாரில்லாம்படியாங் கிகைகரைகாணார். (௨௧)

பொன்மாரிபெய்திரப்போர் புன்மைதுடைத்தாற்றினராய் *
வின்மாரிபெய்தெதிர்ப்போர் வெம்பகைமுற்றீர்த்தனரால். (௨௨)

அன்னார்குனித்தனவில் லாங்கொருகாற்கண்டெதிர்த்தீ *
ஒன்றாருயிர்கொடுமற் றோர்முறையுங்காண்பரிலார். (௨௩)

கடைந்ததயிரல்லாற் கலங்குவனவங்கணிலை *
குடைந்தசுழிநீருமலாற் கோணிச்சுழன்றதில்லை. (௨௪)

காயுமெனக்கண்டதுலை காயமெனக்கண்டதுள்ளி *
மாயுமெனக்கண்டதுநாண் மாறுமெனக்கண்டதலை. (௨௫)

சாயுமெனக்கண்டதுசூழ் சாலிநெடும்பொற்கதிரோ *
தேயுமெனக்கண்டதுகை தேய்த்துரைத்தசந்தனமே. (௨௬)

தாழ்வனவாங்கில்லை தவத்தினலோருள்ளமலால் *
வாழ்வனவாங்கல்லதில்லை மறிவலவாழ்நாடதுவே. (௨௭)

போர்வணங்கும்வேற்படையாற் பூவணங்குங்கோன்மையதே *
பார்வணங்குஞ்சீர்தொடையாற் பாவணங்குநாடுமதே. (௨௮)

பூமாதணிமுடியாம் பொற்புறுமந்நாடணிசீர் *
பாமாபுலவருந்தாம் பாடுவரோவம்மானை. (௨௯)

அந்நாடெழின்முகமோ வாய்முகத்தோர்சுட்டியதோ *
இந்நாட்பொருவா தெழும்பிராகமாநகரே. (௩௦)

நீர்க்கடனேர்பேரகிழு நீர்முகினேர்பாய்மதிலும் *
சீர்க்கடனேர்மாநகர்முன் சீர்முகநேர்கோபுரமும். (௩௧)

பொன்மணியேசெய்யொளியாற் பூம்புகையேசெய்யிருளால் *
மின்மணிக்காற்றுங்கியபொன் வெற்பிணையாமாளிகையும். (௩௨)

ஏந்திமிகுமாளிகையே விட்டமணிமின்னொளியாற் *
காந்திமிகும்வான்விற் கவிந்ததெனத்தோரணமும். (௩௩)

நூலினுநேர்பாய்ந்தோடி நோக்ககன்றவீதிகளும் *
பாலினுநேர்பாகினுநேர் பாடுவர்சொற்சாலைகளும். (௩௪)

நூல்பயிலுஞ்சாலைகளு நோயகலுஞ்சாலைகளும் *
வேல்பயிலுஞ்சாலைகளு மெய்த்தவத்தோர்சாலைகளும். (௩௫)

பொன்மணியாற்றூணிரைத்துப் போதிகையுமுத்திரமும் *
நன்மணியாலேற்றியெழு நானிலைப்பன்மண்டபமும். (௩௬)

வானிறையோன்வீற்றிருப்ப மன்னுயிர்தீதற்றுவப்ப *
மீனிறையோர்வான்பலவாய் வேய்ந்தனபல்கோயில்களும். (௩௭)

பொன்மலையேவண்சிறகாற் பொங்கிப்பரப்பனபோல் *
நன்மலைநேர்தோளார் நடத்தியபொற்றேர்த்திரளும். (௩௮)

காற்றெனவேபோம்விசையாற் காரெனவேபொங்கொலியாற் *
கூற்றெனவேசெய்கொலையாற் கோட்டுமதமாத்திரளும். (௩௯)

கோலெனவேயோடினவுங் கூத்தெனவேயாடினவுஞ் *
சேலெனவேபாய்ந்தனவுஞ் சீர்த்தபரிமாத்திரளும். (௪0)

கற்பிழையார்கண்ணிறையக் காட்டியவாக்கட்டழகும் *
பொற்பிழையார்தோட்பொருநர் பொங்கியெழுமாட்சிமையும். (௪௧)

இத்தொகையாற்பற்பலவு மென்றொகைபுட்கொள்வனவோ *
முத்தொகையாற்செந்தமிழு முற்றடையாப்பான்மையவே. (௪௨)

கண்டாருளம்வியப்பார் காணாருளத்துணரார் *
உண்டானசெல்வர்கட்கொப்பிலையாலம்மானை. (௪௩)

அந்நாளிலந்நகரி லந்நாட்டையாண்டிருந்தான் *
எந்நாளுங்குன்றா தெழும்பெருஞ்சீர்க்காயனென்பான். (௪௪)

கோலியலுஞ்சீரியலுங் கொண்டபகைப்போர்நடுக்கும் *
வேலியலுமொப்பிலதாய் வீற்றிருந்தானக்கோமான். (௪௫)

கோல்வளையச்சீர்மெலியக் குன்றுக்குணத்தனியோர் *
மேல்வளையையேந்திறையோன் மேவாப்பகைத்தனனால். (௪௬)

ஆசைவழிவந்தனபொய் யாரணமென்றுண்டவர்வாய் *
ஓசைவழிவந்தனநூ லுண்மறந்துநீக்கினனால். (௪௭)

தான்பகைத்தவேதந் தரணியெலாநீத்திகழ *
வான்பகைத்தபுல்லறிவான் வன்முராசாலேவினனால். (௪௮)

நூல்வழியேவந்தமறை நுண்மையறிந்துட்படுவார் *
வேல்வழியேயாவிவிட வெஞ்சினத்தாற்கொல்லுவனால். (௪௯)



தீயாகவெஞ்சுரத்துச் செங்கமலம்பூத்தனபோல் *
சேயாகக்கன்னியொன்பான் சேர்ந்திவற்கேயன்றுதித்தார். (௫0)

அன்னான்மனைவியகத் தச்சமுறப்பார்வியப்ப *
உன்னுதொருசுரமா யொன்பதுமாதீன்றனளால். (௫௧)

இதையறிந்தாரெள்ளுவரே யென்றுளத்துநாணியதாய் *
அதையறியாமன்னவற்[illegible]றொளித்துத்தீ துணர்ந்தே. (௫௨)

தேர்ந்தபலபாங்கியருட் சீலதியென்பாளொருத்தி *
ஓர்ந்தவளைவாவெனநா னேயாதங்கைதைபெற. (௫௩)

தாயிவரைப்பெற்றேன் றரணியிலோராளறியார் *
நீயிவரைக்கொண்டோடு நீரிலெறிகென்றுரைத்தாள். (௫௪)

வேங்கையினுந்தீக்கொடியாள் வெஞ்செ[illegible]மந்தனள்போல் *
பூங்கையிலம்மாதரையோர் போர்வையினுட்கொண்டகன்றாள். (௫௫)

மெய்ம்மறைதான்கொண்டதனால் வெங்கொலைக்கேயஞ்சினளாய் *
அம்மறைதான்செய்பயனை யன்னவமாதன்றடைய. (௫௬)

அன்னணினைத்தே யருமேற்றிராணியர்க்கு *
முன்னாயினவனைத்து முன்னிறைஞ்சிச்சாற்றியபின். (௫௭)

மறையொளித்தமாதரைமுன் வைத்தனள்சென்மப்பாவக் *
கறையொளிக்கவையவெனக் கைதொழுதுவேண்டினளால். (௫௮)

உற்றவற்றைக்கேட்டனபின் னோங்கியுருமுற்பலவும் *
நற்றவத்தோன்றானுணர்ந்து நாதனைத்தாழ்ந்துள்ளுருகி. (௫௯)

தாயேயுணர்ந்தபகை தன்னாலருணினைத்த *
நீயேயிவரைநவ நித்திலம்போற்பூண்டணிய. (௬0)

திருவுளமானாயோ தெளிந்தினியுன்னாரணத்தால் *
வெருவுளவாளாயிவர்தாம் வீந்திரத்தஞ்சிந்திடவே. (௬௧)

செவ்வாய்நவக்கமலஞ் சேர்த்தியவோர்மாலையென *
அவ்வாவுன்சேவடிக்கே யாவாரெனப்பணிந்தார். (௬௨)

ஊதியுரித்தாம்பருவத் துள்ளிரதமிட்டதனாற் *
கோதிரும்பும்பொன்னாகக் கொள்வருளரென்பவரால். (௬௩)

ஓதிமறைநன்முறையா லூற்றியநீர்கொண்டுசென்மத் *
தீதிலதாயன்னார் தெளிநலமீன்போலநின்றார். (௬௪)

ஓத்தேரிபாசிலி கேடிலசெனேவுரியே *
வித்தோரியெப்பேமி வீறலிபிருத்தையுடன். (௬௫)

செருமானிமாரினை சீர்மாட்சியாளெனவே *
அருமானகாமமுற்று நந்தவபூமெல்லியலார். (௬௬)

தந்தையன்னைக்கோவிழந்த தன்மையினால்வானுலகாள் *
முந்தையன்றனெல்லாமாய் மோட்சவுரியாரானார். (௬௭)

தேவருளொன்றில்லாதார் சீர்பெருகப்பெருபாப் *
பூவருளுஞ்செல்வமெலாம் பூளையினும்பட்டொழியும். (௬௮)

பொருணலமும்பாய்ப்பரியும் போர்க்கரியுந்தேருநன்னூல் *
தெருணலமுமென்னாகுந் தீவினையுள்ளாயினக்கால். (௬௯)

நல்லவையுந்தீயெனவா நல்லமுதுநஞ்செனவாம் *
அல்லவையுநின்றறிதென் றுவிபகைத்துற்றனக்கால். (௭௦)

ஊழ்வினையாஞ்சென்மத் துறும்வினையைநீத்தவன்றார் *
வாழ்வினையாராயகர்க்கே மக்களினிதாயினரால். (௭௧)

போற்றியுலகன்றுவப்ப பூமேற்பிரான்பிறந்த *
நாற்றிருபத்தாண்டிலன்ன துண்ணிடையார்தோன்றினரால். (௭௨)

ஒவ்வாவரங்கொண் டொருநவமீன்போலிலங்கி *
இவ்வாறுலகொளியா யிங்குதித்தாரம்மானை. (௭௩)

பிறப்புக்காதை முற்றும்.

---

## பாலமாட்சிக்காதை.

### விருத்தம்.

பானலாருட்டிய பாலோடாரணை *
ஞானலாருட்டலி னுண்ணிலாவலவ *
மீனலாங்கரிலா விளங்குமேன்மையால் *
வானலாருவப்புற வளர்ந்தவாறுமே. (௧)

சீருடைச்சிறுமையிற் றிரண்டபோறம் *
பேருடைப்பெருமையைப் பெறுவித்தன்னவர் *
பாருடைத்திசையெலாம் படர்ந்தகீர்த்தியால் *
நேருடைத்துயர்தவ நினைத்தவாறுமே. (௨)

பெற்றருமணமிலாப் படாதகன்னிமை *
முற்றரும்பாமுகை முதல்வர்க்கிட்டிடச் *
சொற்றருந்துறவொடு அணிந்தவாறான் *
பெற்றருஞ்சிறப்பினை பிரித்துப்பாடுவேன். (௩)

### அம்மானை.

ஒளிபெருகத்தான்பெருகு மொண்மதியின்கூன்பிறைபோல் *
களிபெருகவன்னைவக் கன்னிகளுந்தாம்வளர்ந்தார் (௧)

பாலொடுமெய்நூற்சுருதி பாலபெத்திலுண்டனராய் *
[illegible]லுடையநாயகனை மேவிடாக்கைதொழுதார். (௨)



காண்டார்க்கரியெனவுங் கண்டாலினியெனவும் *
ஆண்டவர்க்கீர்கண்டுமுளத் தாசைபுகாத்தாங்கடந்தே. (௩)

உலகனைத்துந்தானே யுளவாக்கிக்காத்தருளி *
அலகனைத்துங்கீத்தவரை யந்தமிலாவாழ்த்துவரால். (௪)

அன்னான்றிருநாம மன்றியுமற்றொன்றறியார் *
என்றுமெந்நாளுமதை யேத்திப்புகழுவரால். (௫)

காலைக்கமலமெனு கர்த்தர்புகழ்வாய்மலர *
மாலைக்கமலமெனு வந்தடியிற்கைகுவிய. (௬)

முப்பொழுதுமோர்பொழுதாய் முற்றறிந்தநாயகனை *
எப்பொழுதுமோர்பொருளா யெண்ணினிருதுவரால். (௭)

எக்குரலுமெக்குழலு மின்பமல்லதேவபுகழ் *
அக்குரலொன்றின்பமென வன்புமிகக்கேட்பவரால். (௮)

தேன்வாய்மலர்பூத்த சீர்கண்டிவைபடைத்தோன் *
வான்வாயிற்கட்டழகெம் மாண்பளவோவென்பவரால். (௯)

கந்தமலர்ச்சூழ்ந்தவண்டு கவ்விமொய்க்குமாசைகண்டே *
எந்தையடிமேவேமோ வெவ்வளவாவென்பவரால். (௧௦)

பாண்மருளச்சோலையிற்புட் பாடவின்னதேவபுகழ் *
கேண்மையுறக்கல்லாருங் கேளாரோவென்பவரால். (௧௧)

நவைபடைத்தோர்க்கிவ்வழகு நாயகனிக்காக்கினக்கால் *
இவைபடைத்தோன்விட்டினழ கெவ்வளவோவென்பவரால். (௧௨)

கண்டதெலாங்கர்த்தாவைக் காட்டியகண்ணாடியெனக் *
கொண்டதெல்லாமெய்ஞ்ஞானங் கூறியவாயாயினவே. (௧௩)

உயிர்க்கொலையாம்பாவமுளா முட்புகுதாக்காத்தருளிச் *
செயிர்க்கணுகாத்தெய்வந் தினம்வேண்டுங்காப்பிதுவே. (௧௪)

மணியாகவிங்கிறைவன் மாண்டிறைத்ததேவிரத்தம் *
அணியாகப்பூண்பதவ ராடினசெங்கீரையிதே. (௧௫)

மறைநூலும்வானிறையோன் வாழ்த்துமிசைந்தமற்ற *
முறைநூலுங்கேட்பதின்ப மொய்த்திடுந்தாலாட்டமிதே. (௧௬)

கண்டவைகொண்டாண்டவனைக் கண்டுணர்ந்துகைகூப்பிக் *
கொண்டடியைத்தாந்தொழுதற் கொட்டியசப்பாணியிதே. (௧௭)

பட்டதிருக்காயமைந்தும் பார்த்தழுங்கண்ணீர்க்கழுவி *
இட்டதிருமுத்தமவ ரின்பமுத்தமாடினதே. (௧௮)

தாராகோநாமணியத் தந்திருத்தாளுங்கான *
வாராதோவெங்கந்தையென வாரானையாடினதே. (௧௯)

தணியாதகன்னிகைத்தாய்த் தாளணியுமம்புலிபோல் *
அணியேமோவென்றுவிளை யாடினவென்னம்புலியே. (௨0)

செழுந்தெளிநீர்ஞானமுளந் தேர்ந்தாடியின்பமதால் *
அழுங்கனிநீராட்டுவந்தா மாமபிஷேகமதே. (௨௧)

பாடுந்திருப்புகழே பஞ்சாகக்கொண்டிராவி *
ஆடும்படிவாழ்த்த வம்மானையாடினதே. (௨௨)

நிலைகொள்ளாவாழ்விதனை நின்றுசைகொள்ளாதால் *
அலைகொண்டுயிர்தளப்ப லாடியகல்லூசலதே. (௨௩)

இன்னூர்விளையாட் டிருவாகிவான்வாழும் *
அன்னூரினைந்துவிளை யாடினாலம்மானை. (௨௪)

சிற்றுடலோடன்னூர் சிறுமையிலாப்பேருணர்வு *
பெற்றுடலோடாவிநலம் பின்னடங்காதென்பதுபோல் (௨௫)

மற்றவரேயுள்வியந்து வாழ்த்தவிங்கனுப்பினைத்தும் *
அற்றவரோஞானமுறை யாய்ந்துயர்ந்தவோர்முனிவன். (௨௬)

அருளேந்துமார்பிலறி வாய்ந்துயர்ந்தவோர்முனிவன் *
தெருளேந்தும்வேதவுரை செப்பவிளித்தானருகே. (௨௭)

வெள்ளொளிவாய்த்திங்களைச்சூழ் மீனனையார்சூழ்ந்திருக்கத் *
தெள்ளொளிவாய்மெய்த்தவத்தோன் றேறியசொல்லோதலுற்றான். ()

பூவுலகத்தோர்மயங்கிப் புல்லறிவினிந்தைசொல்லத் *
தேவுலகத்தோரிறைஞ்சுந் தேவமறைக்கற்றுணர்ந்தீர். (௨௯)

வேற்றுருவங்காட்டிவினை வெம்பகைசெய்துட்புகுந்து *
சேற்றுருவமாகினபொய்த் தேவரொரீஇவெறுத்தீர். (௩0)

வானவருமுற்றுணரா மாட்சியுடைமெய்க்கடவுள் *
ஈனவருணீரதிந்தே யெந்தையடிக்கைதொழுதீர். (௩௧)

பாரொளியின்றிதினிருள் பாய்ந்தொழியாவுங்களுக்கே *
ஆரொளியினன்பகலே யாரணத்தாலாயதன்றோ. (௩௨)

மூவுலகுமுந்தொழிலான் முற்றுணருமோர்முதலோன் *
தேவுலகுமொத்துமக்கே செய்தநன்றியோராளவோ. (௩௩)

எந்தையருளொண்ணியநற் கேற்றபுகழ்கொண்டிறைஞ்ச *
சிந்தையுடனீர்பிறந்த செய்திமுறைக்கேண்மினென்றான். (௩௪)

என்பதுமோர்கோலோச்சு மிவ்வரசன்மக்களெனு *
ஒன்பதுமோர்நாளிலொன்றா யொன்றொடுயிர்வந்துதித்தீர். (௩௫)

தன்னுருவாமின்பந் தருங்கோன்மைகொண்டமொல் *
மின்னுருவாற்றோன்றிமொழி மேதினியின்சீர்விரும்பி. (௩௬)



இருட்புகைபாய்ந்துண்மயங்கி யீடேறுமென்றிறையோன் *
அருட்பெருநனாய்நல்லிருளை யன்றேவிலக்கினனால். (௩௭)

ஒன்பதுமாங்கார்சூமா யுய்த்துயிர்த்தேதநோவைத்தாய் *
அன்பிலளாய்த்தீக்கொடியா ளாற்றிதுணைவிட்டெறிய. (௩௮)

ஏவினபின்னைக்கொடுமைக் கேவியநற்சிலதியே *
மேவினவன்பாலுயிரும் மெய்ம்மறையும்பெற்றடைந்தீர். (௩௯)

தந்தையன்னைக்கோல்முடிசீர் சால்பிழந்தீரென்றுணரும் *
சிந்தைதன்னைநீத்தகற்றிச் சிற்றோர்துயர்வேண்டாம். (௪0)

ஆண்டவர்தாந்தாய்தாதை யாகியெல்லாந்தாமுமக்காய் *
மீண்டவர்தாந்தந்தவர மேன்மையினால்வாழ்ந்துவந்தீர். (௪௧)

மெய்க்கடவுளைப்பகைத்த வேந்தனிடைவாழ்ந்தனக்கால் *
அக்கடவுணீருமிழந் தாவிகொன்றழிந்தினராய். (௪௨)

பகைவழியாமன்புணர்ந்த பான்மைபுணர்ந்தாண்டவனா *
நகைவழியாலேற்றியடி நாளுநனிவாழ்த்திடுவீர். (௪௩)

சாதிநலஞ்செல்வநலந் தாங்கூற்றும்வேஷமதாய் *
ஆதிநலமேற்றியற மாய்த்தொழுதல்மேன்மையதே. (௪௪)

பிறந்தனக்காற்சீரும் பெருங்குலமுந்தேவொரார் *
இறந்தனக்காற்செய்தவறந் தெல்லையிலும்வாரசே. (௪௫)

புறத்திறந்தான்மேன்மைபுகை போலொழியும்பின்பொழியா *
அறத்திறத்தான்செல்வமென லவ்வரசின்மேலிலையே. (௪௬)

இந்தநன்றியெந்நாளு மெண்ணிமறவாமலுநீர் *
அந்தநன்றிக்கைமாறு வாண்டவனீங்காத்தொழுவீர். (௪௭)

நுரைபோலவில்வாழ்க்கை நோக்குமினீருட்சுடுந்தித் *
இரைபோலவஞ்சுமினீர் தீவினையேயென்றுரைத்தார். (௪௮)

பான்மதிவாய்த்தன்கதிர்முன் பைங்குவளைபெய்மதுபோல் *
நான்மதிவாசமுனிசொன் னுண்ணிடையார்கேட்டழுதே (௪௯)

கோன்மையிழந்தோமெனநாங் குன்றுதவானரசு *
மேன்மையடைந்தாங்கொழியா வீட்டுரியோரானேமே. (௫0)

பொன்மாரியாகவமைப் போற்றியெனிதோதியவுன் *
சொன்மாரியினுயிராய்த் தோன்றித்தனைத்தொழுதார், (௫௧)

அந்தோவரண்மனையி லாங்கிருந்தால்மெய்புணரா *
வந்தோர்பிரானுணரா மண்டியிருளாகுமந்தோ. (௫௨)

நானுள்வாழ்ந்தோமா நரகெரியின்வேகுமந்தோ *
வானுளரசிழந்தே மாறுநோயாகுமந்தோ. (௫௩)

தாய்ப்பகையுநன்மைபெறத் தப்பானேசெய்தனபின் *
நோய்ப்பகையும்பட்டாலு நுன்னைமறப்போனோமோ. (௫௪)

என்றெழுந்தநி துணர்ந்தே யின்பத்தழுதழுதே *
நின்றெழியாவீர முணர் நெஞ்சிலார்பின்பொருநான். (௫௫)

கூடியுணர்ந்திட்டநலங் கொண்டொருகைம்மாறாக *
நாடியுணர்ந்தொன்றிலந்த நங்கையவேதேறினரால். (௫௬)

தந்தையிலாத்தாயுமிலாத் தானமக்கேயெல்லாமாம் *
எந்தையலாலோர் துணையு மெம்முயிர்க்குவேண்டுவதோ. (௫௭)

மனைமொருங்குநீத்தலரா வாயரும்பின்றன்மையரும் *
குனைமொருங்குங்கொண்டகன்னிக் குன்றுமற்காங்கிலதே. (௫௮)

கைம்மாறுய்கற்பலியாய்க் காலணியுமாலையதாய் *
மெய்ம்மாறுநாயகர்க்கே வேண்டுமெனவுட்டுணிந்தார். (௫௯)

வான்றுதிப்பவன்னுர் மனத்துணர்ந்தவித்துறவு *
நான்றுதிப்பச்சொல்லெனக்கு நல்குவாரம்மானை. (௬0)

காட்லேகொரக் கருணையுடைநாயகர்க்கே *
உடலேயுயிரே யொருப்படத்தாந்தந்தனபின். (௬௧)

ஆய்ந்தநவாற்சிறையி லேம்பொறியைக்காவல்செய்து *
வாய்ந்தமனனுங்கமதே வாசலின்முன்காத்திருப்ப. (௬௨)

பூவுலகினுசைபுகாப் பூட்டியபின்பொய்யனுகாத் *
தேவுலகினுசைவிடாச் சிந்தையொடுசூழ்திரிய. (௬௩)

திருவுளமேயுட்புகுந்து சேர்த்தாளப்பாவமொன்றே *
வெருவுளமேவாழ்ந்ததனுள் விண்ணரசன்வீற்றிருப்ப. (௬௪)

ஆண்டவரேயிட்டபணி யாக்கமர்கொண்டுனைப்ப *
மீண்டவரேதந்தவரம் விண்ணவரேகொண்டுகுப்ப. (௬௫)

மண்ணவருணிற்பினுந்தாம் வாய்ந்ததவத்தாண்மையினல் *
விண்ணவருளோர்பிரிவாய் வேய்ந்திருந்தாரம்மடவார். (௬௬)

மறத்தைமறுப்பவராய் மண்வாழ்வெறுப்பவராய் *
அறத்தைவிரும்புவரா யன்பாலரும்புவராய். (௬௭)

கண்டார்க்கினியவராய்க் காணூர்க்கரியவராய் *
பண்டார்க்குரியவராய்ப் பண்பாற்பெரியவராய். (௬௮)

ஞானமுறைவாயினராய் நாணமுறைகண்ணினராய் *
தானமுறைகையினராய்த் தண்டவஞ்சேர்தாளினராய். (௬௯)

அறஞ்சேர்சுகத்தினரா யைசேர்முகத்தினராய் *
திறஞ்சேர்மனத்தினராய்ச் சேண்சேரினத்தினராய். (௭0)



ஒப்பிலாயிடிலா யொன்பதுகின்றுரெனினும் *
செப்பரியமாண்பாற் சிறந்தனள்இத்தேரியென்பாள். (௭௧)

எண்ணொளிசூழ்மதிபோ லெண்மருமுட்டாணிலங்கி *
விண்ணொளிமீனேர்விழியால் வேட்கையவித்தாற்றுவளால். (௭௨)

தாய்மொழியானேரொழுகி தொற்சுருக்கிக்காட்டுவளால் *
வாய்மொழியாலுட்குளிர்க்கும் வாய்ந்தவருள்பேசுவளால். (௭௩)

புகழினுமேனிப்பவளாற் பூவினுமேலொப்பிலளால் *
இகழினுந்தானெஞ்சிலளா லேசினுந்தான்வாழ்த்துவளால். (௭௪)

நீதியர்க்கும்பொய்யா நெறிகாட்டுநன்னடையாள் *
வேதியர்க்கும்பொய்யா விளக்கானளம்மானை. (௭௫)

பாலமாட்சிக்காதை முற்றும்.

---

## சிறைப்படுந்தகாதை.

### விருத்தம்.

குன்றுநெடுநெற்றியின்மேற் கூர்ந்தெரிவாய்ச்சுடர்போல *
நின்றுநெடுமாட்சியினு னேமியெங்கும்புகழ்படவே *
அன்றுநெடுங்கோலரச னம்மடவார்தம்மக்கள் *
என்றுநெடுங்காலறியா திகன்றலைழக்கின்றவாறும். (௧)

மாவினம்போல்வந்தெய்தி மறையமுங்குமாட்சிலம் *
மீனினம்போற்றெளிந்துரைப்ப வியர்ந்தவக்கோமான் *
வானினம்போலன்னவர்தம் மக்களொனமார்பனைப்பக் *
கோனினம்போற்றெழுவெலருள் கொழுஞ்சிறப்பாயினவாறும். (௨)

பொருவழிக்கும்பெருஞ்செல்வம் பூத்தனக்கானல்லறிவின் *
கருவழிக்குமெனினுமவர் கன்னெஞ்சரெனக்கலங்கார் *
உருவழிக்குஞ்சினஞ்செயினு முணர்ந்தமறைவிடார்களெனச் *
செருவழிக்கும்வேல்வேந்தன் சிறைப்படுத்தவாறுமுப்பாம். (௩)

### அம்மானை.

இருநால்வயதா யிருநான்கோர்மங்கையரே *
ஒருநாவிரட்டியிங்க ளுள்ளதிசைக்கொப்பிலரால். (௧)

தூயோரனைவருமே சூழ்புகழ்ந்துவாழ்த்திடவே *
தீயோர்சிலச்சிலரே தேறுதிகழ்ந்தகன்றார். (௨)

செங்கமலம்விண்டுவப்பச் செங்கதிரோன்றோன்றியகாற் *
பங்குவனைநொந்ததெனப் பாதிலேயைக்கூம்புமன்றே. (௩)

நோயுடையகண்ணொளியை நோக்கப்பொறுதனபோல் *
தீயுடையபாவிகளுஞ் சீர்த்தவறந்தாம்பகைப்பார். (௪)

சலம்பகைத்தோர்நல்லொழுக்கந் தஞ்சிறுமைக்காட்டுமென *
நலம்பகைத்தோர்நீசகுண நண்ணுவர்பாரெங்கணுமே. (ரு)

இவ்வாறிவரிகழ வேந்தறிவோர்மேற்புகழ *
அவ்வாறரசனுந்தா னன்னசெய்தியன்றறிந்தான். (சா)

தினத்திருளை நீக்கியெழுந்தேரிரவியிங்கொளித்தால் *
மனத்திருளை நீத்திலங்கு மங்கையருமாங்கொளிப்பாம். (எ)

மெய்ம்மறையிறைமுதல் வேண்டாதழித்தொழிப்பக் *
கைம்முறையினொன்றுணராக் காயனெனுங்கோற்கொடியான். (அ)

அந்நவமாக்கன்னிகளா லாந்தெலாங்கேட்டனக்கால். *
இந்நவமேதென்னுட்டி லென்றுபகைக்கொண்டெரிந்தான். (கூ)

செங்கமலப்பள்ளியின்மேற் சேர்ந்துறங்குமோதிமங்கள் *
வெங்கதமுற்றெய்தொழிப்ப வேடன்பகைத்ததுபோல். (க0)

நான்மறுத்தவேதமுறை நண்ணினராய்நானேந்தும் *
கோன்மறுத்தவம்மடவார்க் கூய்கொணர்மினீங்களென்றான். (கக)

தோகைமயிற்போனடந்து தோன்றியமின்போலிறைஞ்சி *
ஓகைமுகமானினம்போ லோங்கியகோன்முன்புகின்றார். (கஉ)

மானேக்கும்வேங்கையைப்போன் மாசினத்தம்மங்கையரைக் *
கோனோக்கிவீழிடியுங் கூசவதிர்ந்தார்த்தனனால். (கங)

பழியாகவென்னுட்டிற் பண்டிலதோர்நீசருரை *
வழியாகக்கேடணைத்து மண்டியெங்குமீண்டுமிக. (கச)

மூளைத்தமதத்துள்ளாகி முன்னுன்விலக்கினுநீர் *
திளைத்தசினத்தஞ்சாத் திரிவதுமெய்யோவெனத்தான். (கரு)

மெய்ம்மறையாய்வான்வழியாய் மெய்யோர்பிரானுரைத்த *
அம்மறைநாமாய்ந்தே யனுசரித்தலுண்மையென்றார். (கசா)

நானிறைஞ்சுநானுரு நாடுமுழுதிங்கிறைஞ்ச *
வானிறைஞ்சுந்தேவனாநீர் மற்றிறைஞ்சாவாறெனவோ. (கஎ)

நன்றேயறியா நலதலவேயொன்றறியா *
இன்றேமுளைத்தி ரிளஞ்சிறிதோர்பேதையராய். (கஅ)

தேவகுணத்துள்ளுரிமை தேவமறைநூலுரிமை *
ஆவதெனவாராய்ந் தறிபவரோநீங்களென்றான். (ககூ)

கல்லாதனைத்தையுந்தான் கற்றவனுங்காதுணரச் *
சொல்லாதுளத்தனைத்துஞ் சொல்பவனுந்தான்குருவாய். (உ0)

உணர்த்தியகாற்பேதையரு மொன்றறியாமூடருந்தாம் *
புணர்த்தியுநாற்கற்றவரைப் போல்வதெளிதாகுமென்றார். (உக)



இத்திறத்தநூலுடையீ ரென்றுரைனுங்கடவுள் *
மெய்த்திறத்ததைச்சொன்மின் விரித்தெனக்கோன்கூறுதலால். (உஉ)

தீங்குரல்வாய்வீணைமொழி செவ்விதழ்வாய்ச்சித்தேரி *
பூங்குரல்வாய்விண்டவனைப் போற்றியுரைக்கொண்டனலாள். (உங)

வானரசர்குழ்ந்திங்கி வாய்ப்பணிகேட்டேத்திநிற்பத் *
தானரசர்க்கோரரசாய்த் தானனைத்துமாண்டிருப்ப. (உச)

ஒளிவாயால்வான்சுடரு மொண்மணியுந்தாம்புகழக் *
களிவாயாற்புள்ளினங்கள் காவிடத்தோயாப்புகழ. (உரு)

வையகத்தோர்வானகத்தோர் வாழ்த்திறைஞ்சநாமிறைஞ்சும். *
மெய்யகத்தோர்தேவனிலை மேவினலோய்கேட்டருள்வாய். (உசா)

ஆதியிலானந்தமிலா னக்கையிலானெப்பொருளும் *
ஓதியிலாவாய்ந்தறிவா னோர்பொருளாயெங்குமுளான். (உஎ)

ஆக்கமிலனக்காக்கமிலன வற்றொழியநீக்கமிலன *
மூக்கியவிம்முத்தொழிலான் மூவுலகாளோர்முதலோன். (உஅ)

ஞானமருணீதிநிற நற்குணமெல்லாமுமொன்றாய்த் *
தானெவையுமாகியொன்றாய்த் தற்பரனேயொப்பிலனால். (உகூ)

மூவாதியெல்லாமாய் மூவாளாய்த்தான்றனியோர் *
தேவாதிவானுந் தெளியாவொளியுருவான். (ங0)

பொருளனைத்துநிற்பான் பொருளழியத்தானழியான் *
இருளனைத்துநிற்பா னிருளொழியத்தானிருளான். (ஙக)

வினையுமிலாதெல்லா வினைமுடிக்குங்காரணனாய் *
நினைவுமிலாத்தான்மறவாய் நீதித்தனிக்கோலான். (ஙஉ)

வெகுளாமுனிந்தழித்தோன் வேலுருவாய்ப்போரில்வென்றோன் *
முகுளாமலர்ந்தளித்தோன் மூப்புமிலாதென்றுமுளோன். (ஙங)

ஓர்மொழியான்மூவுலகு முண்டாகவாக்கினனே *
ஓர்மொழியான்மூவுலகு முண்ணடுக்கியாட்டினனே. (ஙச)

சொரிமழையாலிவ்வுலகந் தொன்றொழித்தனனே *
எரிமழையாலைம்புரங்க ளெல்லாமெரித்தனனே. (ஙரு)

அடிக்காணமாகடலை யற்றுப்பிரித்தனனே *
மடிக்காணவொன்னலர்மேன் மற்றுங்கவிழ்த்தனனே. (ஙசா)

சோலையெனப்பொங்கியதீச் சூளைகுளிர்ந்தாற்றினனே *
மாலையெனவுர்சியொளி மங்கவிருளாக்கினனே. (ஙஎ)

செஞ்சுடரோரேழடியின் செல்லவிழுந்துய்த்தனனே *
வெஞ்சுடரோர்நாளசையா வின்மேனிறுத்தினனே. (ஙஅ)

வானவருந்தேருமல் வாழ்த்திடத்தாமஞ்சிசிறப்ப ※
ஈனவருணனே விசைத்ததறையுந்தன்மையென்றுள். (௩௯)

இன்னசிறப்பெல்லாநீ யின்மொழியாய்க்கூறியபின் ※
அன்னவனேபட்டிறந்த வாண்மையுங்கூறுமலென்றே. (௪௦)

நகைப்பவுலகெல்லாமு நாளுக்குலந்தெவரும் ※
பகைப்பவுலகன்றறியப் பாரச்சிலுவையின்மேல். (௪௧)

நோவவறையுண்டவனை நும்மதத்தார்தாழ்ந்திறைஞ்சும் ※
தேவனென்றேவென்றரசன் செப்பிநகைத்தானகைத்தான். (௪௨)

நகையேந்துமிச்சொன் னடுங்கவவர்கேட்டனக்கால் ※
முகையேந்துந்தேன்போன் முளரிவிழிநீர்ததும்ப. (௪௩)

தேவாசைதாண்டச் சினந்ததெனத்தேறியசொல் ※
மூவாசையற்றுண் மொழியத்துணிந்தனளே. (௪௪)

வெல்லாதவொன்னலர்மேல் வில்வளைத்தாற்றுதோடி ※
வல்லார்நகைப்ப வடுமுதுகிற்பட்டனனே. (௪௫)

திருடியவெண்ணெய்யாற் சினந்தபலவார்சியரோ ※
வருடியமெய்யெல்லாம் வடுவாய்க்கிடந்தனனே. (௪௬)

பிறமனைவிதீண்டப் பிறருணாத்தசாபமதால் ※
அறமனைவிநோசவடு வாயிரமேகொண்டனனே. (௪௭)

காமவுருக்காட்டியெங்குங் காட்டகந்தையன்றுபொருந் ※
தாமவுருமாதவரோ தாஞ்சபிக்கப்பட்டனனே. (௪௮)

இன்னவைதான்செய்திறந்தா னென்றுலோர்தேவனென ※
அன்னவனையேத்தினரு மன்னவன்போனீசொன்பாய். (௪௯)

தஞ்சமெமக்காகவந்த தற்பரன்வானஞ்சவுந்தான் ※
அஞ்சவுமெய்க்காரணநான் சொல்லவினிக்கேளரசோய். (௫௦)

இன்பமிகுமாசையினு லிவ்வுலகங்கெட்டதெனு ※
துன்பமிகுங்காரணமாந் தொற்பழியைத்தீர்த்தொழிப்ப. (௫௧)

நோயுடையதன்மகனை நோகாமருந்தருந்தத் ※
தாயுடையவன்பியலாற் றனதைமுன்னுண்பதுபோல். (௫௨)

தீவினையாலான துயர் தீர்மருந்தேறற்றவமாய் ※
தூவினையான்முன்னியருந் துன்பமினிதுண்டனன்றுன். (௫௩)

உருவுமிலானிங்குருவா யுற்றவழிகாட்டுதற்கே ※
கருவுமிலாதோர்கருவாய்க் கன்னிமகனாயினன்றுன். (௫௪)

பழித்துணையாய்நின்றதுபோற் பாசறைகொண்டார்நவத்தின் ※
வழித்துணையாய்த்தானடந்து வான்வழியைக்காட்டினன்றுன். (௫௫)



மன்னுயிர்கள்கொண்டபழி மாற்றுவதாராரெனத்தான் ※
இன்னுயிர்தந்தப்பழியை யீர்த்தொழிப்பவோர்தனன்றுன். (௫௬)

துன்பம்வினைத்தே சுடுந்தவத்தையாமனுநி ※
இன்பம்விளைத்தனதீ தீங்கொழியப்பட்டனன்றுன். (௫௭)

மன்னுயிரேமாசொழிந்து வான்கதிமேல்வாழ்ந்துவப்ப ※
தன்னுயிரேயொன்னலர்கைத் தந்திமைந்துமாய்ந்தனன்றுன். (௫௮)

இத்திறத்தான்வாய்ந்தவனை யேத்துதலுந்தீதெனவோ ※
அத்திறத்தன்யாருமறிந் தாண்டாரோவென்றழுதாள். (௫௯)

யாழ்குரல்வாய்சொல்லியசொல் யாருமறிந்துள்ளருந்த ※
தாழ்குரல்வாய்வேந்தனின்னந் தன்பகையைக்காட்டிடவும். (௬௦)

அவ்வுரையினசையினு லாங்கவளைத்தாண்டிடவும் ※
இவ்வுரையைக்கொண்டா னிமிர்ந்தளிசூழ்மாலையினன். (௬௧)

தேன்மறுக்குந்திங்குரலாய்ச் செப்பினவைமெய்யெனினும் ※
வான்மறுக்குந்தீயோர் வலித்தடிப்பமாய்ந்திறந்து. (௬௨)

தன்பகையைநீத்தடக்காத் தன்னுயிரைக்காணவந்தான் ※
என்பகையைநீத்தடக்கி யென்னுயிரைக்காப்பவனே. (௬௩)

நீசனெனத்தாங்கா நெடும்பகையாற்பட்டவனை ※
ஈசனெனநான்றொழுதா லீனமென்றேவென்றுரைத்தான் (௬௪)

தன்பகையைத்தாங்காதென் றற்பரனைப்பட்டனென்றாய் ※
உன்பகையைத்தாங்கியரு ளோர்ந்ததைகேளென்றிசைப்பாள் (௬௫)

முகைமுகத்தாலோர்மகவாய் முன்னைசித்துராடுங்கால் ※
பகைமுகத்தா லுட்சினந்து பார்த்தனன்றன்றுண்மையினல். (௬௬)

பொய்யானதேவருரு பொற்கோயிற்றேருமெலாம் ※
நொய்யானதூசியெழ நூறித்தகர்த்தனன்றுன். (௬௭)

ஐயாயிரர்பசியை யாற்றவுலகேர்ந்தியதன் ※
கையாலைந்தப்பங் களித்தேந்தியிந்தனன்றுன். (௬௮)

கண்மிசையேமண்டடவிக் கட்குருடுதீர்த்தனன்றுன் ※
மண்மிசையேபோவதுபோன் மாக்கடன்மேற்போயினன்றுன். (௬௯)

ஒழுகவெனக்கான்முடவ ரோடவார்த்தனன்றுன் ※
எழுகவெனச்செத்தவரை யீண்டெழுப்பிவிட்டனன்றுன். (௭௦)

நன்னணியதன்றென்னலர்க்கு நானெனவோர்சொல்லுரைப்ப ※
எண்ணிலவேல்வீரரங்கே யேங்கியகைவீழ்த்தனன்றுன். (௭௧)

தானருளியோர்மரமேற் றன்னுயிரைத்தந்தனக்கால் ※
வானிருளைநன்பகலு மாலையெனவாக்கினன்றுன். (௭௨)

அன்றுலகங்கூசமலை யாட்டிப்பிளந்தனன்முன் *
வென்றுலகம்வாழ்ந்தெழப்பேய் வெம்பகைமுற்றீர்த்தனன்முன் (எங)

தயைவயத்தான்மாய்ந்தனபின் முனையெழுந்தனன்முன் *
இயைவயத்தாற்றுனக வேந்தியவானேறினன்முன். (எச)

அத்திறந்தான்கொண்டிருக்க வன்றுபகைத்தாங்கிலனுய்ச் *
செத்திறந்தானென்பாயோ செல்வகலோயென்றிறைஞ்சி. (எரு)

தேனிகரும்வாய்மொழியுந் தேனிகருங்கண்டுளியும் *
தானிகருந்தன்மையிலா டந்துநின்றுளம்மடவாள். (எசு)

பேதையிவளித்தனையும் பேருணர்விற்கற்றனளோ *
கோதையிவளல்லளெனக் கூர்ந்தெவருஞ்சூழ்வியப்ப. (எஎ)

துஞ்சாச்சினந்தணியச் சொல்மதுவைக்காதருந்தி *
அஞ்சாத்துணிவுங்கேட் டாண்டகையுமுள்வியந்து. (எஅ)

நான்மறுத்தநீசமத நண்ணிமுழுதஞ்சிலரென் *
கோன்மறுத்தநீங்களெவர் கூறுகென்க்கேட்டனனுல். (எகூ)

உன்னநேசமேவினரா யுன்சினமேயஞ்சினராய் *
என்னநீசேபொய்யுரைப்போ மென்றுணரவேண்டாமே. (அ0)

காதலிலாவச்சமிலாக் கண்டவுண்மைக்காட்டுநவ *
மாதரெலாமுன்றன் மகவாமெனத்தொழுதார். (அக)

நயப்புமுனிவுள்வெறுப்பு நாணமிவையுட்கடுப்ப *
வியப்புமுகங்காட்டியன்ன வேந்தனிவைக்கேட்டுசிறப்ப. (அஉ)

அங்கையிரண்டொத்திறைஞ்சி யன்றுரைத்தாளன்னநவ *
மங்கையருண்முன்பிறந்த மாதெனச்செனேவுரியே. (அங)

அணிவாய்க்கவிசியனு டாண்டிருக்கநீயரசி *
பிணிவாயொருங்குநமைப் பெற்றுநனிநாணினளாய். (அச)

எள்ளுவரென்றஞ்சிநமை யீன்றெறியவேவினளே *
கொள்ளுவரில்லாயினக்காற் கொண்டருளைச்செய்யிறையோன். அரு

தந்தையெனுத்தாயுமெனுத் தாமுயிரைக்காத்தளிப்ப *
சிந்தையிலாவாழ்ந்திருந்தோஞ் செவ்விதெனக்கைதொழுதாள் (அசு)

சொன்னவையேயாய்ந்தனக்காற் சொன்னபடியந்நாளில் *
அன்னவையேயாயினவென் றுங்கரசன்றேறினபின். (அஎ)

எவர்க்குமறிவுண்மருட்ட வின்பமொருமாய்கையெனு *
உவர்க்குமுனிவாற்றினனு யொன்பதுந்தன்மக்களெனு. (அஅ)

முகமலரவன்பருளி முற்றவரைமார்பணைத்தே *
அகமலரவுட்கொணர்ந்தா னுங்கரசனம்மானை. (அகூ)



தோகைமயிலொன்பதுசூழ் தோன்றியரிபோவதுபோல் *
ஓகைமயில்சூழ்நரச னுள்ளிறைவிமுன்விடுத்தான். (கூ0)

ஈன்றபொழுதன்பிலதா யின்னவைகேட்டின்னவர்முன் *
தோன்றிமுழுஅள்ளுருகித் தாவியகண்ணீர்ததும்ப. (கூக)

கலாபமயிற்றன்பார்ப்புக் கைச்சிறைக்குட்சேர்ப்பதுபோல் *
இலாபமெனக்கென்றெருங்கு மின்பமிகக்கைதழுவி. (கூஉ)

தழுவாநின்றன்புடனே தாவியுடன்மேனனைப்ப *
அழுவாள்வெவ்வேறனைப்பா ளன்றிரக்கமுள்ளியதாய். (கூங)

பூங்கமழுநீராட்டிப் பொங்கியபாலாவியெனத் *
தேங்கமழும்பூம்புகைதோய்ச் சிற்றுடைமேலுடுத்தி. (கூச)

தேனரும்பும்பூந்தொடையுந் தேர்ந்தமணிப்பல்லணியும் *
கானரும்புநானங் கமழ்கூந்தற்சூழணிந்தே. (கூரு)

மீனனையசூழ்திருவில் வீசுமணிச்சுட்டிகளும் *
மானனையநோக்கியகண் மாண்புறச்சூழஞ்சனமும். (கூசு)

தொங்கியொளிவீசியவெண் டேய்தாளஞ்சூழசையப் *
பொங்கியொளிகண்கூசப் பூத்தனபொற்காதணியும். (கூஎ)

பிள்ளைமதிவான்மேற் பெயர்ந்தசலாடுதல்போல் *
வெள்ளையொளிதந்துலவும் வெண்டாளத்தாவடமும். (கூஅ)

விண்ணிடையேதோன்றியமின் மின்னிறைக்கட்டுதற்போல் *
நுண்ணிடையேசூழ்ந்தமணி நொய்யொளிசெய்மேகலையும். (கூகூ)

தெளிமணிவண்டார்த்தலர்ந்தச் செங்காந்தட்சூழ்ந்தனபோல் *
ஒளிமணிவாய்விட்டொலிக்கு மோவியம்போற்கைவளையும். (க00)

மணிச்சுரும்புவிள்ளா வனசமணிந்தார்த்தனபோல் *
பணிச்சிலம்போடார்த்தொலிசெய் பங்கயத்தாட்கிண்கிணியும். (க0க)

மீனினமேசூழ்ந்தாவ வெண்மதிபோலித்தனையும் *
மானினமேபோன்றநவ மங்கையர்க்குப்பூண்டணிந்தார். (க0உ)

பூங்கமழ்வாய்நாறுப் புகைகாட்டிமொட்டலராத் *
தேங்கமழ்வாய்ப்பூந்தவிசிற் சேர்த்தினர்பற்பாங்கியரே. (க0ங)

கான்பொழிந்தமாலைசிலர் காற்கமலஞ்சூடுவரே *
தேன்பொழிந்தநீர்ச்சிலர்மேற் றீம்பனிபோற்றூற்றுவரே. (க0ச)

பூங்குழலார்கைபொருந்து பொற்கொலியாழார்க்குவரே *
தீங்குழலார்போற்றகுரற் றேங்குயிலார்பாடுவரே. (௱ரு)

துன்னிச்சிலச்சிலரே தோடசையக்காதிலங்க *
மின்னித்துயில்விரிய மின்னின்மொத்தாடுவரே. (க0சு)

முரசுமுதலார்த்தொலிப்ப முற்றிணையாவின்பமிக *
அரசுமுதலர்நகரோ யன்றுவந்ததம்மானை. (க0எ)

சிலநாளிவ்வாறே திருநாளெனநடந்து *
பலநாளவ்வேதம் பகைத்தனக்கோன் றீதுணர்ந்தான். (க0அ)

அனைத்துயிருமுண்மயங்க வாந்திருவேமாய்கையென *
நினைத்துயிருஞ்சுட்டெரிய நேரிலசொல்லுற்றுரைத்தான். (க0கூ)

தந்தையெனவாமென்னன் றரணியொடுநான்மகிழ *
உந்தையொடுநீரிவ் வுலகைனைத்துமீண்டடைந்தீர். (கக0)

கொண்டநயங்குன்றுது கோதெனுநுந்தேவனிலாப் *
பண்டெமதுதேவர் பணிந்தனுகநீருமென்றான். (ககக)

தந்தையெனநீயுவந்து தந்தபணிசெய்வனாம். *
முந்தையெனமெய்க்கடவுண் முற்றுமினிநீக்குவமோ. (ககஉ)

விண்ணரசோமுற்றிழந்து மெய்யறமோபோக்குவராம். *
மண்ணரசோயிக்கொடிய மாற்றமினிநீரிதியென்றார் (ககங)

மறைகளிலார்சாதியிலார் மற்றவொருமாட்சியிலார் *
முறைகளிலார்கல்வியிலார் முற்றிகட்சிகொள்புலையர். (ககச)

சென்றொழுகுநீசவழி சீர்த்தியகோன்மங்கையர்நீர் *
நின்றொழுகுந்தன்மையினி நீதியதோசொன்மினென்றான். (ககரு)

பேரறமேயல்லாற் பெருமையுமொன் றீங்கிலையே *
ஈரறமேநீப்பதறு வினுமொன் றீங்கிலையால். (ககசா)

விண்ணுள்வான்கோல்நாவே மீண்டவரைமுற்றிறைஞ்சா *
மண்ணுள்வான்றான்பகைத்தல் மாட்சிமையோசொல்லுகென்றார். ()

கிழோர்நெறிச்சுருதிக் கேட்டமைந்துபொன்முடியைச் *
குழோர்கிகரிலருந் துன்னுதலோமாட்சியென்றான். (ககஅ)

ஈசருமற்றந்தனரு மேத்தியபின்றேவர்களை *
நீசருமற்றேத்திலரோ நீயுரையாய்மன்னவென்றார். (கககூ)

தந்தைபணிகேட்கிலிரோ தங்கரியகோனகைத்தால் *
சிந்தைபிணிகாவலடி நீர்படவோநல்லதென்றான். (கஉக)

பாரொருங்குங்கைக்கொளினும் பாடொருங்குமொய்த்திடினும் *
சீரொருங்குமீயினுஞ் சென்றொருநக்குமோயினுநாம். (கஉஉ)

முன்னுயிரோதந்தினிநா முற்றொழியக்காண்பையலால் *
இன்னுயிராமெய்க்கடவு ளிங்கொழியோமன்னவென்றார். (கஉஉ)

கேசமெனமுற்றெவரு நீத்தவிழ்க்கக்கூடாத *
பாசமெனத்தாயுமன்று பட்சமிகக்காட்டியசு. (கஉங)



நகையனையீர்கோன்சினமே நைந்தொழியக்கேட்டொழுகீர் *
முகையனையீர்நீசமறை முற்றொழிகவென்றனைப்பாள். (கஉச)

அன்றீன்றபோதிலெம்மே லன்பிலளாய்நாங்கெடவோ *
இன்றீன்றதாயெனவன் பெய்தினள்போல்வந்தியென்றார். (கஉரு)

நறையிடுமென்கூந்தலார் நையலரிதென்றிவரைச் *
சிறையிடுமினீண்டெனக்கோன் சீறியகன்றேகினனால். (கஉசா)

தாயழவேபாங்கியருந் தாமழவேயின்பமிக *
வாயழவேவாழ்த்தினரம் மாதருவில்வீரநெஞ்சார். (கஉஎ)

அழுவதெளிதாவிபிறந் தாவதெளிதுற்றதுன்பம் *
வழுவிலவோரின்பமென வாழ்த்தலரிதம்மானை. (கஉஅ)

சிறைப்படுத்தகாதை முற்றும்.

---

## பிரிவின்காதை.

### விருத்தம்.

செல்லாதனவோர்திருச் சென்றவுஞ் செகமேசெகோன் *
புல்லாதனவோர்பொருட் புல்லினவும்பொருவச்சிறையில் *
கல்லாயினநெஞ்சினராயின வங்கருணை படைகார் *
இல்லாதனவின்ப மினைய்நதி லெல்லையு மில்லையன்றே. (க)

மருளாயினமன்னவனே மருவாதன பாடுணர்கால் *
இருளாயினயாமவிராவினி தோர்யக லாகவரும் *
தெருளாயின தேவொளிசிந்தியது தொருவானவன்வந் *
தருளாயின வாதரவோதின னச்சிறைநீக்கினனால். (உ)

விரியாதனபூமுகையார் மெலியாதன வீரலார் *
முரியாதனதம்மனமே முரியத்துயரெய்தியமுத் *
தெரியாதனவுந்தெரிவா னரசன்செயு மேவலினும் *
பிரியாதன பேதையரன்று பிரிந்தனவாறிடுவாம். (ங)

### அம்மானை.

சிறைப்படுமோர்செல்வமுற வென்னலுளத்தோங்கிலராய்ச் *
சிறைப்படுமோர்போதுமஞ்சி சிந்தைகலங்காதவரோ. (க)

திருவிரும்பாவாழ்ந்தனராய்ச் செய்சிறையில்வந்ததுயர் *
உருவெருவாநன்மணநா ளுற்றனர்போல்வாழ்ந்தனரோ. (உ)

சிறையடைத்தமின்னார் சிறைப்புடைத்தமஞ்ஞைகளோ *
அறையடைத்தவன்னு ரறைந்தடையாவாழ்ந்தெடுத்தார். (ங)

திருநாமமாயிரமுஞ் சென்றிசைபாடினரால் *
ஒருநாமமாயினுமுற் றுரைத்திலநாய்மென்மையினார். (ச)

நீதியொழிந்தன்றுசெய்த சிந்தைபொருவொந்ததெனச் *
சோதியொழித்தாழ்கடலுட் டோய்ந்திருண்மேற்போர்த்ததுவே. (௫)

காலையிவர்நல்வதனங் காட்டிமலர்செங்கமலம் *
மாலையிவர்பாடறிந்து வாசலடைத்தஞ்சினவே. (௬)

அறம்பகைத்தவேந்தனுளத் தந்தரம்போனண்பகலின் *
திறம்பகைத்தமாலையிருட் சேர்ந்துலகமூடினதே. (௭)

இவருளகேசொன்றிருளை யீர்த்துலகந்தான்விளக்க *
உவருளநீர்மொய்க்கடன்மே லொண்மதியந்தோன்றினதே. (௮)

தன்னினமாமின்னார் தருந்துயர்காண்வானழுது *
மின்னினமார்கார்த்துளிபோல் வீழ்ந்தபனிமிக்கெனவே. (௯)

கோடைவெயிலொப்பக் கொடுஞ்சினத்துவேகுநெஞ்சான் *
பீடையிரவொப்பவிருட் பெற்றபர்ந்துதீதுணர்வான். (௧௦)

தந்தையெனநான்மகிழத் தாம்பிறர்போலுள்ளசையார் *
சிந்தையெனநானிகழ நெஞ்சிலொருநாணமிலார். (௧௧)

அணியளிப்பவெண்ணமிலா ரன்புரைப்பவுண்மகிழார் *
பிணியளிப்பவச்சமிலார் பேதமிலாவோர்மனத்தார். (௧௨)

நான்பகைத்தநீசமறை நண்ணினராய்நாணமிலார் *
வான்பகைத்தநீசரொடு வானவரைத்தாம்பகைப்பார். (௧௩)

சென்றுதித்தவொன்பதுமோர் சிந்தைபிடித்தொன்றுமெண்ணார் *
இன்றுதித்தபூவனையா ரோழுக்காங்கல்லகத்தார். (௧௪)

பொருண்மறுத்தார்கோன்மறுத்தார் பூரணமாய்க்காட்டியவென் *
அருண்மறுத்தார்தாமினியென் னார்ந்தசினந்தாங்குவரோ. (௧௫)

மீட்டவர்கேளாரெனிலவ் வேதவழிமுற்றடையக் *
கேட்டவரேகூசவுயிர் கெட்டிறப்பார்காணையென்றான். (௧௬)

என்றழன்றநெஞ்சினுளோங் தேந்தியதன்கோபமிக *
நின்றழன்றவாய்ப்புகைபோ னித்திரையேகொண்டயர்ந்தான். (௧௭)

வெஞ்சுடர்க்கேயோர்பழியாய் வெற்பினுச்சியேற்றியபுல் *
அஞ்சுடர்க்கேயொத்தவிங்க ணண்டகுறுங்கோலரசன். (௧௮)

மூவுலகுமாளிறையோன் மொய்த்திறத்தினையெதிர்த்து *
பூவுலகுந்தாமுணர்ந்த புன்றிறத்தாலாட்டுவரோ. (௧௯)

மருளுடையமன்னவனிவ் வாய்க்கொடுமையோர்ந்துறங்க *
அருளுடையவானரச னன்புணர்ந்தானம்மானை. (௨௦)

நல்யாழ்நரம்பிசைபோ னாயகனைப்பாடியுற்ற *
அல்யாமமுற்றறியா வம்மடவாருட்களிப்ப. (௨௧)



கானரும்பவேனில்வருங் காலமெனவோர்வானோன் *
வானரும்புஞ்செங்கதிரை வாய்த்தவுருக்காட்டிவந்து. (௨௨)

வெள்ளமெனமொய்த்தகதிர் வீசினதாலம்மடவார் *
உள்ளமெனவச்சிறையு மொப்பவொளியாயினதே. (௨௩)

மாசைமலிசெங்கதிரும் வாசமலிபூந்தொடையும் *
ஆசைமலிவானுருவு மன்னவர்கண்டுள்வியப்ப. (௨௪)

எந்தைபிட்டவேவலினு லிச்சிறையைநீக்கவந்தேன் *
சிந்தைவிட்டுநீங்களென்னைச் சென்றொருக்கும்வம்மினென்றான். ௨௫

இறந்தளித்தவாண்டவர்க்கே யீங்கடியேமெம்முயிரைத் *
துறந்தளித்தாலர்காதோ செல்வநலோயென்றழுதார். (௨௬)

அழுதிரங்கல்வேண்டா மருட்கடவுணீங்கடனைத் *
தொழுதிரங்கற்கேட்டினிநீர் தொன்மறைசையப்பற்றியுயிர். (௨௭)

தந்திறப்பக்கேட்டவரந் தந்திடுவாராயினுநீர் *
வந்திறப்பக்காலமின்னம் வந்தனமந்ததில்லையென்றான். (௨௮)

என்றிரவிகைப்படவே யேடவிழ்செந்தாமரைப்போல் *
அன்றிரவினவ்வுரைக்கேட் டச்சிறைதானுய்த்திறந்து. (௨௯)

குகைநீங்கித்தோகைமயிற் கோடையகன்றெய்வதுபோல் *
பகைநீங்கிப்போனார் படுஞ்சிறைவிட்டம்மடவார். (௩௦)

இடியாமன்மின்னினதா லிரதமலைசாய்ந்ததுபோல் *
அடியாமலந்தமின்னா ரண்டியபோதோசைபடா. (௩௧)

கார்தவழுங்கோட்டைக் கதவகலத்தாமகன்று *
நீர்தவழுஞ்சங்கின்ற நித்திலத்தின்மாலையென. (௩௨)

ஒருநாளிற்றோன்றினரா யோருணர்விலொத்தனராய் *
வருநாளில்வேறுபட வந்துநின்றாரம்மானை. (௩௩)

சிறைநீத்தவானவனுஞ் சேர்ந்துநிற்பவானினின்று *
குறைநீத்தவெட்டமரர் கூடவங்கேதோன்றினரால். (௩௪)

பேரிறையோன்சித்தமிதே பேரிழையீர்கேண்மினென *
நேரிறையோனேவியமுன் னின்றவிண்ணோனீண்டுரைப்பான். (௩௫)

பாரிலெங்குமேத்திப் பாப்பியபன்னல்விளக்கே *
நேரிலங்கத்தன்றிறத்தா னீங்களுயிர்த்தந்திறப்ப. (௩௬)

திருவுளமேயானதினாற் றேறுணர்வீரென்மொழியால் *
வெருவுளமேகொள்ளாமல் வேறுயினிப்பிரிவீர். (௩௭)

இவ்வொருத்திக்கொவ்வொருவ னுற்றதுணைவானவனும் *
அவ்வொருத்திக்கித்தவழி யச்சமிலாவம்மினென்றான். (௩௮)

இவையுணர்ந்தபூங்கொடியா ரீத்தமலர்ப்போற்குழைந்து *
சுவையுணர்ந்ததீங்குரலாற் றூமொழியைச்சொல்லினரால். (௩௯)

முக்காலமுங்கடந்து முற்றனைத்துநோக்கினனாய் *
எக்காலமுஞ்சலியா தென்றுமெலாமாள்திறத்தோன். (௪௦)

பின்செலநாமச்சமுண்டோ பேருயிராய்க்காத்தபிரான் *
முன்செலநாமவ்வழியே முற்றொழுகலின்றறிதோ. (௪௧)

ஆயினுமேநாமினிவே றுய்ப்பிரிதலெங்களுயிர் *
வீயினுமேலாற்றரிதாம் வேதனையீதென்றுகின்றார். (௪௨)

இல்லாதினிப்பிரிவிர் நீள்குழலீரென்பவின்னோர் *
எல்லாருமவானிறையோ னேவலதென்றுட்டுணிந்து. (௪௩)

மின்னொடுமின்பின்னலென மென்கொடிகடம்மொடுதாம் *
பின்னலெனமுன்னடவாப் பின்னகலாப்பின்னிநிற்க. (௪௪)

ஒருநாகுமுத்துகட்போ லோர்கொடியின்பூமுகைபோல் *
ஒருமாதுருல்வயிற்றி லோர்கரத்திற்றோன்றினநாம். (௪௫)

ஒருநாட்பிரியாம லோபிரிவோநாமினியோ *
வருநாட்பிரிந்தனபின் வந்தினிநாங்கூடுவமோ. (௪௬)

காய்ந்துடலேயீர்த்தலெனக் கண்மணியேநீங்கலென *
ஐந்துயிரேபோதலென வுட்பிரிவோநாமினியோ. (௪௭)

பல்லுடற்கொள்ளோருயிராய்ப் பன்மலர்கொய்யோர்கொடியாய் *
நல்லுயிர்கொண்டிங்கிருந்தின் னாட்பிரிவோநாமினியோ. (௪௮)

விரிமலரும்வாசனையும் விட்டுப்பிரியினுமோ *
பிரியாதனவும் பிரிவோயினிமேலா. (௪௯)

இனிப்பிரிவோமாபிரிவே யிடுமிலாதிகொடிதே *
தனித்திரிவோநாமினியோ தாம்பிரிந்துய்வோமினியோ. (௫௦)

என்றாழுதா ரிறுகவுடற்றுன்றழுவி *
நின்றுருயிருட லு ணின் றூசலாடுதற்போல். (௫௧)

பிரிவேவியாதன் பின்னுளத்தைத்தேற்றவந்த *
தெரிவையரேயுட்டெளிந்து தேறியிவைவேண்டினரால். (௫௨)

ஒருபிறப்போடோர்மறையோ டொன்றாய்ப்பிணித்தனைநீ *
இருபிறப்போய்மீண்டுநமை யின்றேபிரித்தனைநீ. (௫௩)

பிரிந்தனநாமுன்றாட் பிரியாமன்மெய்ம்மறையைத் *
தெரிந்தனநாமெங்குருதிச் சிந்தவருட்செய்திரங்காய். (௫௪)

என்றிறைஞ்சிதாம்பிரிந்தா ரெங்கையருட்சேர்ந்தவளை *
ஒன்றினதாலன்றே யுயிர்பிரியாத்தாம்பிரிந்தார். (௫௫)



அன்போடியிருமொன்றா யன்னார்வழிவேறாய்ப் *
பின்போர்நாட்சேராப் பிரிந்தனரன்றம்மானை. (௫௬)

பிரிவின்காதை முற்றும்.

---

## மணமறுத்தகாதை.

### விருத்தம்.

சிறைநீங்கியம்மடவார் இரண்டகன்றாரெனமன்னன் செப்பக்கேட்டு *
சிறைநீங்கிச்சினம்பொங்கத் திசையெங்கும்பற்பலரா தேடப்போக்கி *
குறைநீங்கிச்சிறந்தவொரு இத்தேரியகப்படுத்திக் கொணர்ந்தார்கோமான் *
முறைநீங்கிச்சினங்காட்டா தோர்மகளாய்வாழ்தியென மொழிந்தவாறும். (௧)

அருட்கண்டுவஞ்சமென வஞ்சினனாயாண்டவரன் பருளித்தந்த *
தெருட்கண்டுதேறினளாய்த் தேருணர்வும்வயதுமொரு சிராய்த்தன்றோ *
டிருட்கொண்டவாசையில விளமாறைநந்தினைவயலர் யினிநிற்சேர்த்தி *
மருட்கொண்டசெல்வமயன் மனம்புகுதாசகோன்மனையில் வளர்ந்தவாறும். (௨)

பாலேக்துங்தேன்மொழியாள் பற்றியகல்லுணர்வழிக்கப் பலநாட்போக்கிக் *
கோலேந்துங்கோமானுட் கொண்டவஞ்சஞ்செலுத்தமணங் குறித்தானத்தை *
நூலேந்துங்காட்சிநலாண் மறுத்ததனுன்மிகுசினந்து நொந்துசீறி *
வேலேந்துங்கொடுங்கோலான் மீண்டுசிறைசெய்ததுவும் விளம்பலுற்றும். (௩)

அம்மானை.

நெகிழ்ந்ததுபோற்கோன்கொடுமை நீங்கினரம்மாதரென *
மகிழ்ந்ததுபோற்பேரொளியாய் வாய்த்திரவியன்றுதிப்ப. (௧)

அன்னகொடுமன்னனுளத் தக்கியானமென்றிருளை *
இன்னம்விடியாம லேந்தியசெங்கோல்வளைய. (௨)

மெய்ம்மறைமேற்கொண்டபகை வெந்தெரியவம்மடவார் *
அம்மறையைவிட்டிலரே லன்றுகொல்லவுட்டுணிந்தான். (௩)

இன்னவைதானுள்ளியகா லெய்தியவோர்சேவகனே *
அன்னநவமாதர்சிறை யற்றகன்றாரென்றிறைஞ்ச. (௪)

தீயெனவுட்பொங்கியெழுஞ் சீற்றமுடன்சீறினனாய்ப் *
போயெனதாரெவ்விடதும் புக்காராய்ந்தோடவென்றான். (௫)

ஓடினரேயெவ்விடத்து முற்றாராய்ந்தக்கரில் *
தேடினரேயெவ்விடத்துந் தேடிற்காணாததினால். (௬)

அப்புறமுமெய்ந்நா டனைத்திலும்போய்ப்பற்பலரே *
எப்புறமுநாடுகென்றா னெண்ணாச்சினக்கோமான். (௭)

நாடவினச்சேவகரு நாலுவழிபிரிந்து *
தேடவின்பநறெண்ணமா திருவுளமேகாந்தொளிப்ப. (௮)

கிளர்சிறப்பிற்பொற்புயர்ந்த சித்தேரியென்றொருத்தி *
வளர்சிறப்பிற்பூத்தவனம் வந்தனுகக்கண்டறிந்தார். (௯)

உளமானைக்கண்டபுலி யொத்தவர்மேன்மொய்த்ததிரிப்ப *
இளமானையுட்கலங்கா தெய்தியதென்சொன்மினென்றாள். (௧௦)

எங்கோமானுன்றுதை யேவியுனைக்கூவுகென்றான் *
நங்காய்வாவென்றார் நடமினெனமுன்னடந்தாள். (௧௧)

அகங்குழையாவுட்களிகூர்ந் தாண்டவரைநம்பினளாய் *
முகங்குழையாவில்வீசி மொய்த்தவருட்போயினக்கால். (௧௨)

கேழரக்குண்டாமரைவாய்ச் சித்தேரியன்றுகண்டால் *
குழரக்கர்கச்சிறையாஞ் சூரியன்றன்பிள்ளையென்பார். (௧௩)

தேனொழுகுங்கோதையனுள் சென்றுறவச்சேவகரே *
ஊனொழுகும்வேலினன்முன் னுய்த்துவிட்டாரம்மானை. (௧௪)

வெஞ்சினத்துள்ளன்பும் விழிப்படத்திற்றோன்றமன்னன் *
எஞ்சினத்துண்மற்றவெண்ம லெங்கேசொல்லென்றதற்கே. (௧௫)

தன்னைப்படுத்தார்க்கிறையோன் றனொளியாய்த்தான்மறைவாய் *
என்னையிதோகாட்டினர்மற் றென்மனத்தான்காத்தொளித்தார். (௧௬)

எஞ்சாச்சினத்திறையா யின்றொருத்தியின்றேனே *
அஞ்சாதவதையொருத்தி யாற்றுகிற்பேனுமென்றாள். (௧௭)

என்றுதைத்தாற்போலுரைத்த வெவ்வுரைக்கேட்டுண்ணுணி *
நின்றுதைத்தாற்போற்சினத்தை நெஞ்சிலொளித்தாங்காசன். (௧௮)

வஞ்சமுளத்தோர்ந்தே மனம்வேறுவாய்வேறாய்த் *
தஞ்சமுளத்தோர்ந்ததுபோற் சாய்ந்தவளைத்தான்றழுவி. (௧௯)

என்மனமேவெந்தெரிய வெட்டுமக்களின்றிழந்தேன் *
உன்மனமேசொல்லுதினி யோர்மகளாய்வாழுதி நீ. (௨௦)

நின்மறையுநின்னுணர்வி னேடியநின்றெய்வதமும் *
உன்மறையும்பற்றிநிற்பா யுன்றெனுநான்வாழவென்றான். (௨௧)

தஞ்சமிதோவன்புருவாய்த் தந்தையுளந்தின்றொளித்த *
வஞ்சமிதோவென்றுளத்து வாடிநின்றாளம்மானை. (௨௨)

அஞ்சினளாய்க்குன்று வருணதன்றாளிறைஞ்சித் *
துஞ்சினளாய்நெஞ்சுறுத்துந் துன்பமறவேண்டினளால். (௨௩)

தாதைநீதாய்நீ தயாபரநீயெல்லாநீ *
பேதைநானுன்னடிசெய்ப் பேறுமலாலொன்றிலனேன். (௨௪)

மெய்யறியேன்பொய்யறியேன் மேவியெனைக்காத்தனவுன் *
கையறிவேன்மற்றையொன்றுங் காசினிமேல்யானறியேன். (௨௫)



தந்தைமுகத்தன்புயிர்த்துச் சாற்றியசொல்லன்புதுவோ *
சிந்தைமுகத்தின்றொளித்த தீப்பகையோநானறியேன். (௨௬)

வெஞ்சினவாள்வாளிவளை வின்மழுவேலென்றிவற்றை *
அஞ்சிலனுனுன்சே வடிபிரிதற்கஞ்சுகிற்பேன். (௨௭)

உன்றாட்பிரியாம லுன்றனையியாற்காத்தருள்வாய் *
என்றாளழுதா ளைந்துரிகியேங்கினின்றாள். (௨௮)

நெஞ்சானுமன்பிறையோ னீர்பொழிகண்ணாட்கிரங்கி *
அஞ்சாதஞ்சாதெனவுள் ளாதரவையோதினனால். (௨௯)

அன்றுணர்ந்ததாய்ப்பகைமன் னுக்கமுனக்கானதுபோல் *
இன்றுணர்ந்ததந்தைபகை யென்றிறத்தானன்மையதாம். (௩௦)

வஞ்சமுனக்கிவ்வுலக மாக்களெலாஞ்செய்யினுநான் *
தஞ்சமுனக்காயினக்காற் றாழ்வுறுமோவென்மகளே. (௩௧)

மனங்கெடவுள்ளாசைபுகா வாசலைத்தாங்காத்தடைத்துச் *
சினங்கெடவுண்ஞானமிகு சீலநிலைபேணுவையால். (௩௨)

சீலமுளத்தெஞ்சிலதேற் சீறியெழுநீர்க்கடற்போல் *
ஞானமுளவெப்பகையு நண்ணினுமென்செய்யுமென்றார். (௩௩)

வனத்தகத்துள்வாழ்தவமே மன்னவனுனிவ்விடத்துன் *
மனத்தகத்துள்வாழ்ந்தாளவந்தழைத்துக்கொள்வாயே. (௩௪)

மனத்துட்டவிளக்கே வாய்ந்தெறிப்பச்செல்வமிகும் *
தனத்துட்புதையிருளின் சால்பொழியவுண்மைபங்காய். (௩௫)

தீயவைசெய்யின்பமெலாந் தீயினுமேலஞ்சினளாய்த் *
தூயவைசெய்துன்பமெலாந் தோற்றொழியாவின்பமென்பாய். (௩௬)

பகைமுகத்திற்கோட்டையெனப் பன்னுறுங்காவல்விடா *
நகைமுகத்திலச்சமுமெய்ஞ் ஞானமுங்கைவிட்டகலாய். (௩௭)

வினைப்பகையொன்றல்லால் வெருவுருக்குமொன்னலர்செய் *
எனைப்பகையொன்றஞ்சாதே யென்றுசொல்புனைத்தார். (௩௮)

உரைத்தவற்றைப்புட்பயக்கு மோர்கடவுட்செய்திறத்தால் *
நிரைத்தவத்தைக்கொண்டுயர்ந்தா ணேரிலளாயம்மானை. (௩௯)

முந்தையருளுள்ளிவிடா முன்வளைத்தவேலினின்றே *
தந்தையருளுள்ளிவிரி தாபவலைப்பட்டிலளால். (௪௦)

கோன்மனையுட்கோன்மகளாய்க் கொண்டதிருமுற்றுணரா *
வான்மனையும்வான்றவமும் வாழ்வெனத்தானுடையளால். (௪௧)

தீங்கதிர்வாய்ப்பூண்கலன்க டச்சினந்துளேருவிழு *
ஆங்கதிர்வாய்மேகமுமி ழார்தமின்னென்பாளாலோ. (௪௨)

விணாயகப்பூத்தமலர் மீண்டுமென்றேவாடுதலால் *
புணாயகப்பூத்தசெல்வம் புன்மையிதென்பாளாலோ. (௪௩)

ஆய்ந்தமலர்ச்சேக்கைசுடு மாங்கெனத்தானீக்கிமண்மேல் *
சாய்ந்தமலன்கையமளிச் சார்பிடைவீழ்வாளாலோ. (௪௪)

தேனமுதத்தீ துருக்குந் தீயவெனப்போக்கினளாய் *
வானமுதன்றுருக்கு மாதவமென்பாளாலோ. (௪௫)

காற்றுறுங்காற்காயுங் கழிந்துதிரும்போலிளமை *
கூற்றுறுங்கான்மாயுமெனக் கொள்தவநீங்காளாலோ. (௪௬)

நகைநாடித்தீதியக்கு நாணுயமருந்தாய்ப் *
பகைநாடிதென்றுதவப் பற்பணடவிடாளாலோ. (௪௭)

மின்னொளிபோற்பூமணம்போல் விட்டுரைக்கு ஞானமொரு *
வானொளிபோலிங்கெவரு மாண்புறச்செய்வாளாலோ. (௪௮)

மண்ணரசுவீற்றிருக்கு மாளிகையிலன்றுமுதல் *
விண்ணரசுசெய்தவமே வீற்றிருந்ததம்மானை. (௪௯)

தன்னையகன்றெண்மரும்போய்த் தான்றனித்தநோயாற்றுப் *
பின்னையகன்றுரிடமாய்ப் பேதைகளோரையாறே. (௫0)

தன்வயதுந்தன்னுணர்வுந் தாங்கிழையார்ச்சேர்த்தினளாய் *
புன்வயதுள்மூதுணர்வு பூண்டெழுஞ்சித்தேரியன்றே. (௫௧)

தேன்றுடங்கவின்பமெலாஞ் சேர்ந்திணையாவாங்கெவரும் *
நான்றுடங்கத்தேவபுகழ்ச் சாற்றுவரெந்நாளுமன்றே. (௫௨)

மீனினஞ்சூழ்வெண்மதிபோல் வேய்ந்தனளாய்மேல்வீட்டில் *
வானினஞ்சூழ்செல்வியென வாழ்ந்தநிலைச்சாற்றுவரார். (௫௩)

தவமுலையுண்குழவித் தன்மையவரென்பேனோ *
தவமலைமேலாடுமயிற் றன்னினம்பார்ப்பென்பேனோ. (௫௪)

முந்தையுவந்தீங்கணிந்த முத்தாரமென்பேனோ *
சிந்தையுவந்தாங்கிணைந்த சீர்மடவாரம்மானை (௫௫)

அன்னோருமந்நா ளடுத்திணைந்தமற்றவரும் *
பன்னாளுமும்பரொத்த பான்மையொடுவாழ்ந்தனபின். (௫௬)

மென்கொடியைவாட்டமுதிர் வேனிலெறிந்துற்றதெனத் *
தன்கொடியவஞ்சனைக்கோன் றுன்செயுநாள்வந்ததுவே. (௫௭)

கோன்மையுடைசெல்வநலங் கூர்ந்தவொருமாய்கையென *
மேன்மையுடையாரறிவும் வென்றிருட்டினாடோறும். (௫௮)

குன்றமனைத்தாசைசெய்தீதிக் கொற்றவொருபொற்றலைகள் *
ஏற்றமணத்தின்பமொருங் கெய்திநிற்பாரியாவரென. (௫௯)



மனத்தெழுஞ்சித்தேரியுந்தான் வச்சிரக்கன்றொத்தெனினும் *
தனத்தெழுங்கோன்வாழ்க்கைநலஞ் சாலபலநாளுந்தி. (௬0)

கோனினத்தின்மாண்புயர்ந்தோன் கொண்டமனத்தாற்பிணிப்பத் *
தானினத்தின்றென்மறையிற் சாய்ந்தமைவாளென்றரசன். (௬௧)

சூழ்ந்தவட்கேதாட்பணிசெய் தோழியரைத்தானழைத்துத் *
தாழ்ந்தவளேயிம்மணத்திற் சம்மதிக்கச்செய்மினென்றான். (௬௨)

ஏவியசொற்பாங்கியர்கேட் டேரிழையாளின்றுமணம் *
மேவியசொற்கேட்டால் வெகுண்டுரைப்பாளெம்மையன்றோ. (௬௩)

வாடாத்தவத்தரசாள் வாழ்க்கையெனும்பெயர்முதலாய் *
நாடாத்தவிர்த்தனளாய் நாமணச்சொற்கூறினக்கால். (௬௪)

பொறுப்பாளோவுள்வருந்திப் பொற்கொடியாடன்னுயிர்த்தான் *
வெறுப்பாளோவென்றுற்று வேற்கணலாரஞ்சிநிற்ப (௬௫)

வேலேந்துங்கன்னனைத்தி மென்மொழியாளென்றொருத்தி *
பாலேந்துஞ்சொல்லேந்திப் பாங்கியரேகேண்மினென்றாள். (௬௬)

நாஞ்செயுமோர்வெற்றியிதே நாண்மலர்க்கோலந்தொருங்கும் *
தாஞ்செயுமோர்வெற்றியிதே தப்பிலிதுமற்றிலையால். (௬௭)

பரிகரிதேரொன்றிலனாய்ப் பைங்கரும்பேவிற்படையாய் *
வரியளியேநாணியொன்றாய் வாசமலரங்கணையாய். (௬௮)

தானுமனங்கனுமாய்த் தானமர்ச்செய்திவ்வுலகும் *
வானுமேனைவென்றடைந்த மாரனைநான்கூவுதென்றாள். (௬௯)

கூவியவக்காமனுந்தான் கொய்தெனவந்தெய்திமன்னன் *
ஏவியவக்காதையுங்கேட் டெதரிதோவென்றுநக்கான். (௭0)

பார்வணங்குங்கோலினரும் பாவணங்குநாவினரும் *
போர்வணங்கும்வேலினரும் பூவணங்குந்தேவருந்தாம். (௭௧)

நான்றொடுத்தகோல்வணங்கி நாளுமென்கட்படுவார் *
தேன்றொடுத்தவெங்கணைக்கோ சீரியவிவ்வெற்றியென்பீர். (௭௨)

இவ்விரதமங்கையின்றே யென்விரகமங்கையுமாய் *
செவ்விரதநீத்தழிக்குந் தேன்கணையைத்தாங்குவளோ. (௭௩)

பட்டகணையாற்றுப் பதறியழுமோதையினால் *
இட்டகணைவீரநல மெண்ணுகவென்றேகினனால். (௭௪)

விள்ளாமுகைமுகத்தில் வெல்லாவயிரநெஞ்சாள் *
உள்ளாயினவிடத்தி லுற்றவன்போயாவதெலாம். (௭௫)

துன்னியவர்க்காதுதரத் தோற்கரியமன்மதனே *
கன்னியவளோவிதாயக காட்டியபல்லோதையுடன். (௭௬)

கூகூவென்றார்த்தலறுங் கூக்குரலுங்கேட்டனதாம் *
ஓஓவென்றஞ்சினரா யுற்றதேதோவென்றிருக்க. (௭௭)

வாயடுக்கிமார்பதுக்கி வாய்த்தவில்லுங்கோலுமின்றி *
நோயடுக்கிவிம்மியழ நொந்துமதனோடிவந்தான். (௭௮)

மாதிவளோவன்றுயிரை மாந்தியவோர்கூற்றெனவே *
போதிவளோவன்றனைத்தும் போக்கியெரிதீயெனவே. (௭௯)

மானிவளோவன்றுசினம் வாய்த்தகொடுஞ்சிங்கமதே *
தானெவளோநானறியேன் றைத்தவடுவொன்றறிவேன். (௮௦)

ஒன்றியுறவைங்கணையு மோர்சரமாயேற்றியவில் *
கன்றியறவில்லொடுநான் கானடுங்கநைந்துகின்றேன். (௮௧)

நோக்கினளேயென்றிறத்தை நூக்கினளேதானொருத்தி *
தாக்கினளேவில்லுமம்புந் தன்புருவக்கண்ணெனவே. (௮௨)

எவ்வுலகும்வென்றவென்னை யிங்கொருத்தியின்றுவென்றாள் *
அவ்வுலகுமுற்றிணையா வற்புதமாமாதிவளே. (௮௩)

பேதையவர்க்கெல்லாம் பெருந்தேவனுனுமிந்தக் *
கோதையென்றுங்காமன் குலதேவியென்றகன்றான். (௮௪)

பழியிதுவேநீதொடுக்கும் பைஞ்சரஞ்செய்நோயறிய *
வழியிதுவேபோவெனவம் மாதர்நகமாரனழ. (௮௫)

தோகையொழிமஞ்ஞையெனத் தோழியர்முன்னுணினனாய் *
ஓகையொழிகாமனொளித் தோடினனாலம்மானை. (௮௬)

மன்மதன்கண்ணுனதெலாம் வாய்நகைப்பக்கண்டனபின் *
மென்மதர்க்கண்மங்கையர்தா மீண்டுதமக்குஞ்சிரிநின்றார். (௮௭)

யாமினிச்செய்தன்மையென்னே வன்றுனாத்தசொற்படியே *
நாமினிச்செய்யாதுவிடி னுதநம்மைக்காய்ந்திடுவான். (௮௮)

கனிவாய்மொழியாளைக் கண்டுமணச்சொல்லுரைக்கில் *
குனிவாய்விற்காமனைப்போற் கூற்றடியாம்பட்டழுவோம். (௮௯)

என்றுபலவெண்ணியவ ரென்னினைவோகண்டளப்ப *
ஒன்றுபலரெண்ணியொருங் கொத்ததற்கேதாந்துணிந்தார். (௯௦)

தாதூதும்வண்டொலிப்பத் தாதூறுந்தேனொழுகத் *
தூதூதும்வாசமெழத் தூய்நிறப்பற்பூவெடுத்தே. (௯௧)

கோல்வரிந்தசித்திரம்போற் கூருகிராற்பன்னிறப்பூ *
வேல்வரிந்தகண்ணார் விசித்திணைத்தமாலையென. (௯௨)

ஒருங்கேந்திப்பூம்புகையு மோதைகிளர்வீணைகளும் *
மருங்கேந்திப்பொற்சிலம்பு வாய்ச்சிலம்பப்போயினரால். (௯௩)



போயிழையாள்சீறடியைப் போற்றிநறுமாலையிட்டே *
ஆயிழையார்திங்களைச்சூ ழாருடுப்போற்சூழ்ந்துநின்றார். (௯௪)

பூம்புகையேகாட்டுவரும் பூம்புனலேதூற்றுவரும் *
தீம்புகழேபாடுவருந் தீங்குழலேயூதுவரும். (௯௫)

வெண்கவரிமாற்றுவரும் வீணையொலியேற்றுவரும் *
கண்கவருஞ்சீரழகாற் கண்டெவரும்பேணுவரால். (௯௬)

செங்கமலத்துள்ளலர்ந்து தேனொழுகுநீலமிரண் *
டங்கணிருகாந்தளொழுந் தன்றுமறைத்திட்டனபோல். (௯௭)

சுகத்திருப்பாலாயவையச் சுந்தரிகண்டேங்கியழ *
முகத்திருகண்கையிரண்டான் மூடினளிதேம்பினளால். (௯௮)

வீறுயுடற்பேணி வெந்துளையுமென்னுயிரைப் *
பேறொருவருமிப் பேருலகிலென்றழுதாள். (௯௯)

அயிர்மருட்டுமென்மொழியா யாதரவற்றிங்குளையுன் *
உயிர்மருட்டும்வெந்துயரை யோதுதிநாமாற்றவென்றார். (௧௦௦)

ஊனொழுகும்வேலெனவுள் ளூற்றதுயராற்றிடநீர் *
தேனொழுகும்பூங்குழலீர் செய்கருமமல்லவென்றாள் (௧௦௧)

உன்னோய்நாமாற்றிலமோ வுன் றுணையாய்ச்சேர்ந்துழுவோம் *
பன்னோய்தாமோர்துணையாற் பன்னுணுமாறுமென்றார். (௧௦௨)

விழிக்கயலீரோர்த்துணையை வேண்டியன்றோகாணுமல் *
வழிக்கயலேதேம்பியழ வாடுமெனதாவியென்றாள். (௧௦௩)

ஊனயிலார்கண்ணு யுயிர்த்துணையைச்சேர்ந்தடைய *
மானியலார்க்கெல்லாம் வழித்துணையாந்தோழியென்றார். (௧௦௪)

நானுமத்துணையை நண்ணியடைமெய்வழியைத் *
தேனுறும்பூந்தொடையீர் தேர்ந்தறியீர்நீங்களென்றாள். (௧௦௫)

சுழிக்காட்டுநீரனையாத் தோன்றுதுணைச்சேர *
வழிக்காட்டுமுந்தையன்றோ மட்டிலநீவாழவென்றார். (௧௦௬)

எந்தையருளல்லதெனக் கேதுமுண்டோவாயினுந்தன் *
சிந்தையருள்செய்யவின்னஞ் சேர்ந்ததில்லைகாலமென்றாள். (௧௦௭)

அக்காலம்வந்ததுநீ யன்பின்றுணையடைய *
இக்காலத்துன்மணமே யேவுகென்றான்வேந்தனென்றார். (௧௦௮)

இம்மணச்சொற்கேட்டெழுந்தே யென்னரசனேவலிலால் *
அம்மணச்சொற்கூறியிங்கே யாருயிர்க்கொண்டுய்வரென்றாள். (௧௦௯)

காதற்றுணையொருவர் கர்த்தரெனக்கேனையவர் *
சாதற்றுணையெனப்போய்ச் சாற்றுமினீரென்றகன்றாள். (௧௧௦)

ஏற்றியவின் ஞணிமுறுக் கிற்றெதிரேமாறினுந்தான் *
சாற்றியசொன்மாறாத தன்மையினட்காய்ந்தகடை. (௧௧௧)

ஒருத்திமுகமற்றொருத்தி யோவெனப்பார்த்தெஞ்சியஞ்சி *
அருத்திமுகத்தியனையத் தோன்றியெழுநாணமிக. (௧௧௨)

நின்றனபின்றேறு நிருபனுறைமாளிகைப்போய்ச் *
சென்றனபின்பொன்னிலங்கு சேவடிமுன்றாழ்ந்திறைஞ்சி. (௧௧௩)

மணிமுகினேர்வில்லோய் மணமினிநீயோர்தனையேல் *
பணிமுகினேர்ப்பூங்குழலாட் பட்டிறப்பாளன்றெனவே. (௧௧௪)

ஆயவைமுற்றோதவுங்கேட் டாய்ந்தாய்ந்தெழுஞ்சினத்தில் *
தீயவைமுற்றோர்ந்தரசன் சிறைமையாட்கூய்மினென்றான். (௧௧௫)

காரகன்றகோடையிலே காய்ந்தமுல்லைப்பூங்கொடியாள் *
சோகன்றநோயருந்தி நீர்ப்பொழிந்துகண்சிவப்ப. (௧௧௬)

கன்னியொருமாலையெனக் கர்த்தாடிப்பூண்டவத்தைச் *
சென்னியொருமாலையெனச் சேர்த்தியேதான்வேண்டிநிற்ப. (௧௧௭)

போர்முரசின்பேரொலிபோற் போயொருத்திசென்றிறைஞ்சி *
வார்முரசின்வேந்தனுன்னை வாட்கணலாய்க்கூய்வினென்றாள். (௧௧௮)

அஞ்சினன்முன்பின்றேறி யாண்டவசொல்கருணை *
எஞ்சிலவுன்றாட்டுணையா மென்றெழுந்துபோயினளால். (௧௧௯)

பொற்சிலம்புங்கின்கிணியும் போகாதேவஞ்சமென *
வற்சிலம்பிதாட்பிணிப்ப மன்னவன்முன்னங்கைசென்றாள். (௧௨௦)

தேன்சுவைத்துநாறியபூஞ் சிறடியாள்போற்றிநிற்ப *
ஊன்சுவைத்தவேலோ னுழைநோக்கும்வெங்கையொத்தான். (௧௨௧)

சுடுகாட்டுமாலையெனத் தொண்டர்மறைச்சேர்ந்தனையே *
படுகாட்டுநின்னைதயுநீ பட்டழியவுன்னினைவோ. (௧௨௨)

தந்தையெனவேந்தனென்னத் தந்தபணிக்கேளாத *
சிந்தையுனக்குன்வேதஞ் செப்பியதோர்கற்பனையோ. (௧௨௩)

தீவினையேயஞ்சினீ செப்பியவென்சொன்மறுத்தல் *
தாவினையோவாயினுமென் றோள்வலியுமஞ்சிலையோ. (௧௨௪)

கொடிகளெலாமூன்றுகொழு கொம்பிலதால்வீழுமிளம் *
பிடிகளெலாமப்படியிப் பேதமைநீக்கவென்றான். (௧௨௫)

கோதையின்வாய்த்தேன்பொழிவேற் கோமானையன்புணர்ந்து *
பேதையின்வாய்ச்சொற்கேட்டுப் பின்சினத்தனீதியென்றாள். (௧௨௬)

தந்தையெனைமுற்றறியாத் தாய்ப்பகைத்துவிட்டெறிய *
முந்தையெனவானிறையோன் முன்பெனைக்கைக்கொண்டனன்றான்.



இன்புகுக்குந்தாய்தாதை யீங்குணரத்தாழ்விலளாய் *
அன்புகுக்குந்தேவதிரு வங்கையின்மேல்யான்வளர்ந்தேன். (௧௨௮)

அந்நாளின்முற்றெனைக்காத் தாதரித்தநாயகன்றான் *
எந்நாளுமுற்றெனையாண் டென்னுயிரோடென்னுடலும். (௧௨௯)

தானொருவன்கைக்கொளவுந் தந்தேனென்றானுமினி *
நானொருவனுள்ளனென நாயகன்கைப்பற்றினனால். (௧௩௦)

அன்றவர்கைக்கொண்டபொரு ளாசையுடன்மற்றொருவன் *
இன்றவர்கையிற்பறிப்ப வெப்திலினியாவனுண்டோ. (௧௩௧)

தானும்விடான்முன்னவர்க்கே தந்தபொருள்பின்னெவர்க்கும் *
நானும்விடேனீதிலோ ஞாயமன்றோகூறவென்றாள். (௧௩௨)

மந்துக்கலத்திற்கூறியசொல் வாய்மறுக்கலாற்றாதான் *
புதுக்கலத்திற்பொங்கியபாற் போல்வெகுண்டுகோனுரைப்பான். ()

பேதையெனத்தான்மிதற்றும் பேருணர்வுகேண்மினின்றே *
தாதையெனநானெனவுந் தன்மையெலாங்கேளாயேல். (௧௩௪)

நானேபகையுனக்கு நானுவிதத்திலென்கைத் *
தானேயுனைவருத்தித் தந்தவுயிர்நான்பறிப்பேன். (௧௩௫)

நீவணங்குநாயகனை நீக்கிமணந்தின்றமைந்தால் *
பூவணங்குமென்மகளீ போய்மறுத்தாலென்பகைநீ. (௧௩௬)

என்றுதந்தையார்த்ததிர வென்னுயிராநாயகனும் *
அன்றுதந்தகன்னியுநா னற்றொழியேனென்றுமென்றாள். (௧௩௭

அடிபடுமோர்வேங்கையனு ளார்த்தெரிவெஞ்சீற்றமெழ *
இடிபடுமோர்வன்குரலா லீண்டுசிறைசெய்மினென்றான். (௧௩௮)

மெய்யொருங்குஞ்சங்கிலியும் வெண்டளையும்பூட்டியவள் *
பொய்யொருங்கும்விட்டிலதாற் புழுத்தழிவாளென்றகன்றாள் (௧௩௯)

இன்பமிகவுண்மருளா ளின்றுவிரும்பாதாள் *
துன்பமிகவுட்கலங்காச் சூழ்ந்துயர்க்கஞ்சிலளால். (௧௪௦)

மணவாசைநீங்கா மணவறையீதென்றுவந்தே *
தினமாசைநீங்காச் சிறைபுகுந்தாளம்மானை. (௧௪௧)

மணமறுத்தகாதை முற்றும்.

# மலையடைக்காதை.

## விருத்தம்.

வையகத்தோர்வானகத்தொருணர்விற்கெட்டா
  வலத்திறையோன்செய்திறத்திற் குன்றுநெஞ்சாள்
மெய்யகத்தோரேந்துமழு வனைவாள்வில்வேல்
  முற்றனைத்துந்திரண்டதிரக் கண்டஞ்சாதாள்
பொய்யகத்தோருள்ளியபல் வஞ்சத்தஞ்சிப்
  பூவினுநொய்க்கன்னிநலம் படுமோவென்று
வையகத்தோரையமிகச் சிறையிற்பன்னாள்
  நாயகனைவேண்டிவிடா தொர்ந்தவாறும். (௧)

வானேந்தும்பிறையேந்த வெழுந்துவில்செய்
  மலர்ப்பதத்தாண் மனத்திரங்கிச் சிறையிற்சேர்ந்து
தேனேந்துமென்மொழியா ளுளத்தைத்தேற்றித்
  தேங்கமழ்பூநறும்வாசமன்னிராட்டித்
தானேந்துஞ்சிறுவையொடு மணிப்பொன்னாழி
  தந்துசயந்தரும்பண்டயீதென்றுகூறிக்
கானேந்தும்பொம்பேரு மலைச்சேர்ந்தங்கண்
  கதிரிமைக்குமுடிகொள்வா யென்றவாறும். (௨)

மலையின்றமணிப்புயத்தோர் வானோன்விட்ட
  வாயில்வழியச்சிறைதா னீத்தவாறும்
கலையின்றமெய்யுணர்வின் முன்னர்ச்சேர்த்த
  கன்னிகளாறைந்தும்வழி சேர்ந்தவாறும்
கொலையின்றவேலரசன் கொடிதாய்ச்சீறிக்
  குழைந்துளையவன்னவர்போய்த் துளித்ததேனூர்
இலையின்றமிழற்கவ்விப் பூத்தபொம்பே ரென்னுமலை
  யொருங்கடைந்த வாறுஞ்சொல்வாம். (௩)

## அம்மானை.

சிறைப்படுமோர்இத்தேரி செங்கமலக்கைகாலும் *
நிறைப்படுமோர்சங்கிலியால் நேராமனலுக்கம். (௧)

கட்டிலதாலுட்கலங்காக் காட்சிநலாளோர்குறையும் *
பட்டிலதாய்த்தேவபுகழ்ப் பாடிமகிழ்ந்தோங்கினளாய். (௨)

இருளார்ந்தமங்குலிடைத் திங்கதிர்வாய்த்திங்களைப்போல் *
அருளார்ந்தநங்கையற மச்சிறையிற்றோன்றினதே. (௩)

உலையினுந்தீச்சுடவே யொள்ளொளிகொள்பொன்னனைய *
கொலையினுமச்சிறையுட் கோமகளுமிக்குயர்ந்தே. (௪)

வானுவப்பமண்புகழ மாட்சியடைந்தச்சிறையில் *
தானுவந்துமன்னுநற் தாழ்விலநின்றவெளினும். (௫)



நாப்பரியநொய்யவற்றுட் கன்னிநலநொய்யதென *
நீப்பரியவையமுட னெஞ்சிலென்றுமஞ்சுவளால். (௬)

பெண்பிறந்தாருட்டளர்வார் பெண்ணுமன்றிப்பேதையுநான் *
மண்பிறந்தார்வஞ்சகராய் மன்னுலகிலஞ்சேனே. (௭)

கோனேவன்பாண்மைமினங் கொண்டிவற்றுற்சூழ்பகைப்ப *
நானேவயதுவலி ஞானமிலாப்பேதையன்றோ. (௮)

கன்னியதோவாவிபடக் கண்ணுடிபோற்குழையும் *
உன்னியதோவஞ்சகமே யோர்துணையுமற்றிலதேல். (௯)

இப்படிநானெனதுணைநா னீ்கொருத்தியோர்ப்பொருவேன் *
அப்படிநானிற்பினுங்கோ ற்ண்மைவலித்தாங்குவனோ. (௧௦)

வேலினர்வாளின்னவுடல் வீழ்கிலெனக்கச்சமிலை *
கோலினர்வாய்வஞ்சமிகக் கொல்லாமைக்கஞ்சுவனே. (௧௧)

வானோர்க்கமுதியலே மண்ணோர்க்குயிர்நிலையே *
ஈனோர்க்குறுதுணையே யென்னரசேமாமரியே. (௧௨)

கல்லார்க்குநாற்கடனீ காவலிலார்க்கோரரணீ *
இல்லார்க்குமேற்றிருநீ யெல்லார்க்குமெல்லாநீ. (௧௩)

கனியின்றகன்னிகையே கன்னியர்க்கெல்லாந்தீபயே *
இனிதின்றகன்னியெனு மென்மேலிரங்கிலையோ. (௧௪)

இருளீர்த்தவெண்பிறைமே லேறியொளிர்மெல்லடியாய் *
மருளீர்த்தநானிருளா வாய்த்தவழிக்காட்டிலையோ. (௧௫)

மனங்குளிர்க்குஞ்செங்கதிரை வாய்ந்துடுத்தமேனிநலாய் *
இனங்குளிர்க்குமோர்கதிரா யின்றெனக்குநல்கிலையோ. (௧௬)

வேடர்கையிலோதிமமோ வேங்கைகையின்மானெனவோ *
மூடர்கையிலின்னகன்னி முற்றழியாவாற்றினதே. (௧௭)

என்றுருகாநின்றழுதா ளிட்டதனைதாமுமற *
அன்றுருகாதென்று லரசனுளத்தொத்தனவே. (௧௮)

நொந்தாளென்றுண்டவளு நொந்ததெனவுள்ளிரங்கி *
வந்தாளைவந்தபடி வாழ்த்தலரிதம்மானை. (௧௯)

வானவர்போற்காட்டுருவ மொண்பகற்போல்வில்வீச *
வானவர்பல்லாயிரரோ வந்தடியைச்சூழ்ந்துதொழ. (௨௦)

முன்வருவாராயிரரும் மொய்த்தணிவாராயிரரும் *
பின்வருவாராயிரரும் பேரணியாய்மண்டிவர. (௨௧)

போர்முரசுந்தூரியமும் பொன்முழவுந்துந்துமியுஞ் *
சீர்முருடும்பற்பறையுஞ் சேர்ந்தொலிப்பமுன்னொருபால். (௨௨)

பூங்குரலானூதுகுழற் பொங்கொலியாழ்வீணையிவை *
தேங்குரலார்பாவினெடு சீர்ப்படுமாலாங்கொருபால். (௨௩)

வெண்கொடியையேந்துவரும் வெண்கவரிவீசுவரும் *
தண்குடையைத்தாங்குவருந் தானெருங்கச்சூழ்ந்தொருபால். (௨௪)

பூமாரிபெய்தொருபாற் பூங்கமழ்நீர்பெய்தொருபால் *
பாமாரியார்த்தொருபாற் பாலெவையுமார்ந்தனவே. (௨௫)

மீனையணிந்தனளாய் வெண்மதிமேற்ருன்றினளாயப் *
பானையுடுத்தனளாய்ப் பைம்முகிற்றேறேறினளாய். (௨௬)

வான்முழங்கமண்ணடங்க வானவர்சூழ்தாள்வணங்க *
தேன்வழங்கவின்பமிகச் சேர்சிறையுஞ்சூழ்விளங்க. (௨௭)

கன்னிகெடாத்தேவகனிக் காய்த்தீன்றவானரசாள் *
கன்னிகெடாக்கித்தேரி கண்டுவப்பத்தோன்றினளே. (௨௮)

நோக்கினளேநோக்கியதன் ஞெக்கருளால்வெண்டலையை *
நாக்கினளேகட்டவி: த நொய்யமலர்க்கைக்கூப்பி. (௨௯)

கோமகளுங்வீழ்ந்திடஞ்சி கூர்க்களிக்கண்ணீர்த்ததும்பப் *
பாமகளும்போற்றுதிகட் பாடியின்பகீர்க்குளித்தாள். (௩௦)

காலணிந்தவெண்கதிராற் கட்குவளைபூத்துவப்ப *
மேலணிந்தசெங்கதிரால் விண்டவுளத்தம்புயமே. (௩௧)

நெஞ்சுயிரன்பொன்ருக நின்றிறுகத்தாய்த்தழுவி *
அஞ்சுயிரன்ருண்மைபெற வஞ்சேலஞ்சேன்மகளே. (௩௨)

தாயுனக்குநானிருக்கத் தாழ்வுனக்கொன்றுண்டாமோ *
நீயெனக்குநன்மகளாய் நின்றுசயங்கொள்வையென்ருள். (௩௩)

என்றுயர்வானின்றுவந்த வின்கமழ்பூகோட்டிச் *
சென்றுயர்வானேரிவட்கே தேவணிகட்பூட்டினரால். (௩௪)

ஞானமிருகாதணியாய் நாணமுலைக்கோர்வடமாய் *
தானமிருகைவளையாய்த் தாட்கியிருதாட்சிலம்பாய். (௩௫)

ஊக்கநுதற்சுட்டியதா யோதுமறைப்பொன்முடியாய் *
ஆக்கநுதற்கின்றதவ மாங்கிடையிற்பூண்டணிந்தார். (௩௬)

உம்பரினத்துள்ளொருத்தி யொப்பவின்றகித்தேரி *
இம்பரினத்துள்ளிணையா யின்பமுற்ருளம்மானை. (௩௭)

வானினமாய்நின்றவளை வானரசாண்மீண்டணைத்தே *
ஊனினமாயிவ்வுலகி லுற்றுதித்தவென்புதல்வன். (௩௮)

தன்பகைவென்றெவ்வுயிருந் தான்காத்தவோர்படையாய் *
உன்பகைவென்றேங்கவுநீ யொன்படையீதாகுமென்றே. (௩௯)



தானேந்துமோர்சிலுவைத் தந்தனளேபோற்றியதை *
தேனேந்துமென்மொழியாட் சேர்த்தினடன்மார்பணியாய். (௪௦)

மீட்டரிதாங்கன்னிநிலை மீளாதுநிற்குமெனக் *
காட்டரிதாமோர்குறியாக் காக்குமிதேயென்றுரைத்தோர். (௪௧)

பொன்ஞழிபூவிரலிற் போட்டனபின்னுன்சிலுவை *
உன்ஞழிநிற்பவுனக் கோர்ந்தபகைக்கஞ்சாதே. (௪௨)

ஆயினுமின்றிவ்விடம்விட் டார்வமிகநான்றருமோர் *
தாயினுமன்புற்றதுணை தந்தவழிச்சென்றெழுகி. (௪௩)

வெம்பேய்வினையொழிய மீளாத்தவமாளும் *
பொம்பேரெனுமலைமேற் பொற்கொடிபோற்பூத்துறைவாய். (௪௪)

ஆங்குளதாம்போர்க்களமு மாங்குமுடிபூண்டணிவாய் *
பூங்குழலாய்போவெனத்தாய் போயொளித்தாளம்மானை. (௪௫)

கரைகாணுத்தேங்கடலுட் கன்றிநின்றகித்தேரி *
வரைகாணுவின்பமுண்டு வாழ்ந்தவசைவொன்றின்றிநிற்ப. (௪௬)

ஆங்கேவழித்துணையா யண்டிநின்றவானவன்ருன் *
இங்கார்ச்சிறைதிறந்து செல்லெனப்பின்சென்றகன்ருள். (௪௭)

காருலவுங்கோபுரவாய்க் கற்கதவுதான்றிறப்ப *
நீருலவுமேகமின்ன நேரிழையாள்போய்நுழைய. (௪௮)

முன்ருன்மறையுமொப்ப மூத்தோர்தவமுமொப்பக் *
குன்றுமுறைசேர்த்தக் கோதைகளாறைவரன்றே. (௪௯)

தத்தமுறைக்காவலராஞ் சம்மனசுகூட்டிவர *
ஒத்தநிறைநெஞ்சினரா யோர்பொழுதிற்சேர்ந்தடைந்தார். (௫௦)

கண்டாள்கித்தேரியுநீர்க் கண்டதும்பக்கட்டினளாய்த் *
தண்டாளெழுங்கமலத் தாரெனச்சேர்ந்தொன்றினரே. (௫௧)

கார்ப்பருவமண்டியகாற் கண்டகலுமன்னமெனச் *
சூர்ப்பருவமொய்த்தநகர்த் தூயிழையார்சேர்ந்தகல. (௫௨)

அன்பமிகநொந்தழுவோர்த் தூக்கியருட்செய்யிறைவன் *
இன்பமிகச்செய்தயைக்கண் டேத்திப்புகழ்பாட. (௫௩)

குன்ருத்தவத்தரசாள் கோமகள்கித்தேரியைச்சூழ் *
பொன்ருத்தகைமடவார் போயகன்ருரம்மானை. (௫௪)

ஆயினவைக்கேட்டரச ஞர்த்தெரிவெஞ்சீற்றமுடன் *
போயினவரைத்தடுப்பப் போக்கியபற்சேவகர்போய். (௫௫)

எவ்விடமுநாடியென்ன மேரிரவிநண்பகற்செய் *
அவ்விடமுமுற்றிருளா மாண்டவர்தாமுன்மறைத்தால். (௫௬)

ஆண்டவர்கைக்காத்தொளிப்ப வாங்கவர்தோன்றுத்திறல் *
மீண்டனரச்சேவகரு மின்னவரும்போயகன்றார். (௫௭)

கஞ்சமலர்வாவிகளுங் கஞ்சமலர்ப்பல்வயலும் *
பஞ்சமலர்ச்சோலைகளும் பற்பலவும்போய்க்கடந்தே. (௫௮)

கார்தவழுமென்முடியுங் கான்மலர்ச்சூழ்ப்பூத்தகரை *
நீர்தவழுஞ்சாரலுங்கொண் ணீண்டமலைக்கண்டனரால். (௫௯)

கண்டமலைவானவனே காட்டியிதேவுங்காதல் *
உண்டமலையாகிவிண்மே லோங்குபொய்போமிதென்றான். (௬௦)

மெல்லியலார்கேட்டுவந்து மெய்க்கடவுளேவலினால் *
சொல்லியலாவெற்றிதரச் சூழ்ந்தமலைதானிதுவோ. (௬௧)

ஒண்டவஞ்சேரால்யமே யொன்னலர்வெற்போர்க்களமே *
விண்டலஞ்சேர்செவ்வழியே வெற்றிதரும்பொம்பேரோ. (௬௨)

என்றேதொழுதா ரினிதேமகிழ்ந்துவந்தார். *
சென்றேநடந்தார் சிறுமானின்தனையார். (௬௩)

அம்மலையுநின்றமலை யாய்ந்தறியத்தான்றனியே *
எம்மலையுஞ்சேராம லீடிலதாய்வீற்றிருப்ப (௬௪)

கைக்கடந்தநின்மணிபோற் காசிமுற்றும்வட்டமலை *
மைக்கடந்தமின்னலென வந்தருவிபாயுமலை. (௬௫)

பூமகளேசேர்த்திநீயுதன் பூண்கலன்கொள்பேழையென *
கோமகளேசேர்ந்ததனாற் கோதிலமாசெல்வமலை. (௬௬)

நானமுதனைப்புழுகு நாண்மலருந்தேங்கமழ *
வானமுதற்கம்மெனவே வாசனைசூழ்வீசுமலை. (௬௭)

விண்டிண்டியோங்குதரு விள்ளலரும்பன்மணியும் *
கண்டுண்டிசெய்யொளியாற் காந்தியெங்கும்வீசுமலை. (௬௮)

தேன்றுளிப்பப்பொங்கிபநீர்ச் சிந்துசிந்தப்புள்ளொலிப்ப *
மான்றுடிப்பவாடமயின் மாற்றொலிகொண்டார்க்குமலை. (௬௯)

ஓர்நிலைத்தேரொத்தமலை யோங்கியதன்கோட்டினுயர் *
சீர்நிலைத்தேர்மேற்பரப்புச் செய்ததெனமேலகன்ற. (௭௦)

பச்சைமணியாற்பலஞ்கப் பாய்ந்ததின்மேற்பன்மணிபோல் *
பொச்சைமுடியார்ந்தபசும் புல்லிடைப்பூப்பூத்தனவே. (௭௧)

பொன்னுரத்துண்மணிபோற் பூத்தனவக்கோட்டினடு *
மின்னுமொருகோயின் மெய்க்கடவுட்கன்றுள்ளதால். (௭௨)

மானினமோதோகை மயிலினமோலம்மடவார் *
வானினமோர்காவலொடு வந்தடைந்தாரம்மலையே. (௭௩)



ஆசைமுதற்பல்வினையே யற்றொழிப்பப்போர்க்குறித்துப் *
பூசைமுதற்கொண்டிறைஞ்சிப் பூங்குழலார்தேறியன்றே. (௭௪)

கைதவத்தின் றீதொழியக் கண்டமலைபானையின்மேல் *
செய்தவத்தின்பாசம்விடாச் சேர்ந்தடைந்தாரம்மானை. (௭௫)

மலையடைகாதை முற்றும்.

---

## தேவருளாசைகாதை.

### விருத்தம்.

பொம்பெருச்சிலைகொண்டு பொய்யாஞானக்காட்சிலார் *
நம்பேமுலகின்வாழ்வெனவெக் நாளும்பொருந்தவவாளால் *
வெம்பேய்முதன்மூப்பகைச்செருத்து வேரோடறமற்றாசையெலாம் *
தம்பேருளத்திற்றேவாசைத் தானார்த்தினிதுண்டனவாறும். (௧)

கோதையனையச்சித்ரேரி குறுங்கோல்வேந்தன்மனைமறுத்தக் *
காதைகேட்டுப்பொறுமனத்திற் காதற்கடுப்பவேயஞ்சா *
ஓதையதிர்ந்தன்னுன்றிரும்ப வுறுதிகூறக்கதம்பொங்கிப் *
பேதையுரைதான்பொறுதவளைப் பிணித்துச்சிறைசெய்தனவாறும். (௨)

சிறைநீத்தகன்றகோமகளைச் சினங்கொண்டன்னுன்றொடர்ந்தனக்கால் *
முறைநீத்திருகண்கெட்டிருளா முடங்கக்கைகால்வீழ்ந்துபட்ட *
குறைநீத்தம்மாதவத்தரசாள் கூறுந்திறங்கேட்டொங்கேதி *
மறைநீத்திலையந்தநிதொழிப்ப வலித்தவாறுஞ்சொல்லலுற்றும். (௩)

### அம்மானை.

பூத்தமலர்தாவியதேன் பூம்புழுகுநானகர் *
நீத்தமணம்வீசியெதிர் நீங்காவிருந்துசெய. (௧)

குயில்பாடவண்டுகுழற் கொண்டினியகீதமெழ *
மயிலாடவம்மார் மயிலார்மலையேற. (௨)

அம்மலைமேற்றாமரைக்கா டன்றலர்ந்ததோவெனவே *
எம்மலருங்கண்விழிப்ப வெம்நகையும்பல்லரும்ப. (௩)

பூங்கமழ்வாய்க்கானமெலாம் பூத்தமதுப்பெய்மலனரத *
தேங்கமழ்வாய்நங்கையர்சூழ் செங்கரத்தாற்கொய்தெடுப்ப. (௪)

தீண்டியகையின்பமதாற் றேன்பொழிந்துபூத்தனவும் *
தாண்டியகைவாவெனவாய்த் தாந்திறந்துபூத்தனவும். (௫)

கொய்தனராய்ச்சித்திரம்போற் கூறுகிறார்பூந்தொடைகள் *
செய்தனராயாங்கிருந்த தேவாலயமணுகி. (௬)

வலமாகமும்முறையே வந்தனரெல்லாருமன்பின் *
புலமாகக்கிழிறைஞ்சிப் பூந்தொடைகட்சாற்றியபின். (௭)

மயிலனைய மின்னார் மதுகானுந்தேமொழியார் *
குயிலனைத்தீங்குரலே கொண்டுபுகழ்ப்பாடினரால். (௮)

## தாழிசை.

வானகத்தோர்பணிகேட்ப வையகத்தோர்பணிந்திரப்பத் *
தானகத்தோரொப்பிலனாய்த் தகைமிகுமெம்பெருமானே. (௯)

தகைமிகுமெம்பெருமானைத் தரணியெலாமறியாதேல் *
பகைமிகுமெம்முயிர்காத்த பங்கயத்தாட்பணியேமோ. (௧௦)

மண்ணுளும்வேந்தரெலா மகிழ்ந்தவன்றன்செய்திறத்தால் *
விண்ணுளுந்தனிக்கோலான் வீடருளெம்பெருமானே. (௧௧)

வீடருளெம்பெருமானை விரும்பியநாம்பிரியாதே *
கேடருளக்குறைதீரக் கெழுமலர்த்தாட்பணியேமோ. (௧௨)

நூலிலனாய்முற்றுணர நூலிலனாய்முற்றுணர்த்த *
வேலிலனாய்முற்றனைத்தும் வென்றருளெம்பெருமானே. (௧௩)

வென்றருளெம்பெருமானை வெறுத்தபகைதீர்த்தறத்தால் *
நின்றருளெம்முளம்வாழ நிமலனற்றாட்பணியேமோ. (௧௪)

## அம்மானை.

பாடுமிசைக்கோகிலங்கட் பாடமலர்க்குன்றமெங்கும் *
கூடுமிசைவாய்ப்பறவை கூவிநனிபாடினவும். (௧௫)

வெளிகூர்ந்தவண்டினங்கள் மெல்லிசையாழ்ச்செய்தொலிப்பக் *
களிகூர்ந்தவாய்மலர்ந்து கானமெலாம்பூத்தனவும். (௧௬)

வானிறையோனன்றுறும்வர் வாய்ப்புகழ்க்கேட்டுள்ளுவந்து *
கானிறையோர்வெள்ளமெனக் காட்சிவரமேற்பொழிய. (௧௭)

புதுக்கலத்திற்பொங்கியபாற் போலுயிருட்கொள்ளாமல் *
மறுக்கலத்திலுண்டவின்பம் மட்டிலதாலம்மானை. (௧௮)

மெய்த்தவமேதண்குடையாய் வெம்பகலின்கொடுமையொழிப்ப *
அத்தவமேபூவணையா யல்விரவிரேவையொழிப்ப. (௧௯)

நற்றவமேகாய்க்கிழங்கு நாடொறுந்தந்தோர்விருந்தாய்ப் *
பிற்றவமேவேண்டுவர்க்குப் பேரொளியாமித்தவமே. (௨௦)

நாமுமன்னமாதவனோர் நாடினுமோரொப்பறியோம் *
தாமுமன்னமாதர்வந் தான்றரித்தமாலையொத்தார். (௨௧)

நல்லறமேமுல்லையென நட்டருளேபந்தரிட்டுப் *
புல்லறவேசெய்தவத்தாற் புன்மையெலாநீக்கினராய். (௨௨)

காத்தபொறிவேலியினுட் காமமுதற்றீதணுகா *
நீத்தமெனநல்லொழுக்க நீரிறைப்பவம்மடவார். (௨௩)



வான்விரும்பும்வாசமது வாய்க்கமழவானரசன் *
தான்விரும்பிவந்துலவத் தாதவிழ்பூங்காவானார். (௨௪)

திருநாமமாயிரமுந் தீங்குரலார்பாடிமற்றும் *
ஒருநாமமாண்டவர்க்கே யொத்திரியவல்லவனார் (௨௫)

முப்பொழுதுந்தாண்டியெலா முற்றுணர்ந்தநாயகர்க்கே *
எப்பொழுதும்வேறுபடா தேத்திபுகழ்ப்பாடுவரால். (௨௬)

முப்பதொருநங்கையரே முப்பதிருநாகநடை *
ஒப்பதொருகூட்டமுட னொப்பவிருபோதொலிப்பார். (௨௭)

முன்னெழுந்துவைகறைத்தா முந்திமுனிந்தார்களென *
இன்னெழுந்ததேவபுக ழின்னிசையாற்பாடவவர். (௨௮)

பூங்குரலானனையபோற் புள்ளினங்களாங்கெழுந்து *
தீங்குரலாலொத்தவிசை சேர்ந்திசலிப்பாடுவன. (௨௯)

ஊட்டியதேனுண்டதும்பி பூதுகுழலொத்தினிதாய் *
தீட்டியதம்பூஞ்சிறகாற் றேமலர்மேலாட்டுவன. (௩௦)

மின்னினமென்றம்மடவார் வேய்ந்துலவக்கண்டதனால் *
தன்னினமென்றண்டிமயிற் றுளமுடனாடுவன (௩௧)

தம்பேருணர்வெழுந்த தன்மையிலம்மாதரொடு *
பொம்போடுத்தவெலாம் பூரணமாய்வாழுவன. (௩௨)

அவ்வாறந்நங்கையரா லம்மலையேவானுலகில் *
ஒவ்வாதசெல்வமொப்ப வோங்கினதாலம்மானை. (௩௩)

பூவினத்துட்டாமரைபோற் புள்ளினத்துளோதிமம்போல் *
மேவினத்துட்சேர்ந்திருப்போன் மீனினத்துளம்புலிப்போல். (௩௪)

ஆண்மையினாலொண்டவத்தா லாருளாற்காட்சியினால் *
கேண்மையினான்மற்றவருட் சித்தேரிதோன்றினளே. (௩௫)

துறவினொடுதேகமிலாத் தாயுயிர்ப்போற்றோன்றினளாய் *
உறவினொடுமற்றுயிரை யோருடற்போற்பேணுவளால். (௩௬)

பணியனைத்துமற்றவர்க்கே பாங்கியெனச்செய்பவளாய்ப் *
பிணியனைத்துங்கைப்படவே பேணியறநீக்குவளால். (௩௭)

அன்பமறவன்பருளிச் சொற்றிறத்தாலாற்றுவளாய் *
இன்பமுறஞானமுரைத் தெவ்வுயிருந்தேற்றுவளால். (௩௮)

பகைபழிநோய்பாவமச்சம் பற்றிவிடாவிவ்வுலகம் *
நகையெனவுள்ளாசைமிக நாடுவரிம்மாக்களலால். (௩௯)

சீரனைத்துமுட்குவித்த தேவனந்தவான்கதியை *
பாரனைத்தும்பார்க்கிலெவர் பற்றுவரிங்கென்றழுவாள். (௪௦)

வீழ்ந்தொழியுமிவ்வுடற்கே வேண்டுமெலாந்தேடினராய் *
வாழ்ந்தொழியாநல்லுயிரோ வாடினுமெண்ணார்களென்பாள். (௪௧)

கண்வழிவந்தோயுமின்பங் கைக்கொளநோய்க்கஞ்சிலராய் *
விண்வழிவந்தாகுமின்பம் வேண்டிவருந்தார்களென்பாள். (௪௨)

ஈக்கடிபோல்வந்தொழியு மீங்குளநோய்க்கஞ்சினராய் *
தீக்கடிதோயாநரகின் றீமையஞ்சார்மாக்களென்பாள். (௪௩)

காலைமலர்பூவனையக் காணிளமைநில்லாமல் *
மாலையுதிர்பூவனைய வாடலறியார்களென்பாள். (௪௪)

ஆசைவழிவந்தகதை யாரணமென்பார்கடவுள் *
பூசைவழிவந்தமறைப் பொய்யெனநீப்பார்களென்பாள். (௪௫)

காமமுதற்றீயவரைக் கைக்கூப்பித்தேவரென்பார் *
சேமமுதலோன்பணியச் சிந்தைகொளார்யாருமென்பாள். (௪௬)

அருட்கடற்சூழன்பிறையோ யன்றிரங்கிநீபுரந்த *
இருட்கடற்சூழிப்புவிமே லின்றுமிரங்காமலென்னே. (௪௭)

தீதொழியவுள்விளக்குஞ் செஞ்சுடரோனுன்னையென்பார் *
கோதொழியவோர்கதிரைக் கொண்டுலகிற்றோன்றாயோ. (௪௮)

தாய்தயையோடாளுந் தனிக்கோலானுன்னையென்பார் *
நீய்தயையோர்ந்திங்கரசா ணீசவெம்பேயோட்டாயோ. (௪௯)

பொய்வழிநீத்தாரணநூற் போதகுருவுன்னையென்பார் *
மெய்வழிநீத்துற்றமயல் விட்டறமெய்யோதாயோ. (௫௦)

பாரனைத்துங்காத்தபரி பாலனெனவுன்னையென்பார் *
பாரனைத்துமுன்குடைக்கீழ்ப் பட்டடங்கக்காவாயோ. (௫௧)

ஓரரசனோர்கடவு ளோர்பரமனுன்னையென்பார் *
தாரரசரோடெவருந் தாட்பணியக்காண்பேனோ. (௫௨)

என்றுருகித்தேவாசை யேந்துநெஞ்சாடியெரிநெய்க் *
குன்றுருகிக்குன்றுமெனக் கூருளைவாளம்மானை. (௫௩)

தேவுலகம்போற்றுமொரு தேவகுணத்தானவரைப் *
பூவுலகம்போற்றவுமுட் பொங்கியதேவாசைமிக. (௫௪)

கொலைக்களங்கண்டாலொழியக் கோதைநலாளிங்கனொரு *
நிலைக்களங்காணாமலுயிர் நெஞ்சிலுலைந்தாடிநிற்ப. (௫௫)

தீயெரிந்தமாலையெனத் தீய்ந்தமனமுற்றுருக *
நோயெரிந்தநெஞ்சாளோர் நூதனத்தைக்கேட்டனளால். (௫௬)

அந்நாளிலோர்குறுநா டாங்காட்புரோசனென்பான் *
முந்நாளில்வந்தடுத்த மூத்தோன்மொழிகேட்டு. (௫௭)



வானிறைந்தநாயகன்வாய் வாக்கியநூலாய்ந்துணர்ந்து *
தானிறைஞ்சிப்பன்னாளுந் தாழ்விலவுட்கொண்டொழுகி. (௫௮)

மீட்டுலகுனைசமிக வெவ்வினையோர்சொன்னவுரைக் *
கேட்டுலகின்மாய்கையினாற் கீழுணர்வோடுன்மயங்கி. (௫௯)

மெய்வழியென்றாய்ந்துகொண்ட வேதமுந்தானீத்ததலால் *
அவ்வழிநின்றாரெவரு மாய்ந்தேவருத்துகிற்பான். (௬௦)

மாலைவரும்போதொருநாள் வந்துபலரின்னவற்றைச் *
சோலைவரும்போதிவட்கே சோர்விலமெய்யென்றுரைத்தார். (௬௧)

சேயிழந்தவன்னையெனச் சீரிழந்தமன்னனெனத் *
தாயிழந்தபிள்ளையெனத் தானுமிவைகேட்டுளைந்தாள். (௬௨)

துயிலாமலுண்ணாமற் றுன்பமிகநொந்தழுத *
மயிலாளன்றேயாமல் வானிறையோனேத்திநின்றே. (௬௩)

மீளாச்சயத்திறத்தோய் மேவறிவின்மேன்மையினோய் *
ஆளாயெனையுடையோ யாரருளின்பாற்கடலோய். (௬௪)

உன்குருதிதந்துகொண்ட வுன்னடிமைமற்றொருவன் *
நின்குருதிசிந்தைபெற நின்றுண்டானன்றுனக்கோ. (௬௫)

நாம்வாழநீயிறந்து நல்குப்பலன்பேயினங்கள் *
தாம்வாழநின்றே தவிர்ந்தொழிந்தானென்றுனக்கோ. (௬௬)

நோயாகநீவருந்தி நொய்தினட்டபூவனமே *
தீயாகப்பேய்வினையாற் றீய்ந்தெரிந்தானென்றுனக்கோ. (௬௭)

நெஞ்சமுநீயாண்டிருக்க நீதுணிந்தாலொன்றறிதோ *
வஞ்சமுநீகண்டிருக்க மாற்றலுனக்கின்றரிதோ. (௬௮)

இன்றவன்றன்மீளலொன்றே யிங்கேநான்சாதலொன்றே *
என்றவடானெஞ்சழுதே யேங்கிநின்றாளம்மானை. (௬௯)

ஏங்கியவக்கோதைக் கிரங்கியருளோர்ந்தபிரான் *
ஓங்கியநின்னாசையினோ டொத்தபடியாகுமென்றார். (௭௦)

ஆயினுநீபோயுறுதி யாங்குரையாய்த்தான்சினந்து *
காயினுநீயஞ்சாதே காத்தளிப்பேனென்றுவிட்டார். (௭௧)

விழுந்தனடானேத்தியதாண் மேலணிந்துள்ளூக்கமிக *
எழுந்தனடானன்றே யெழுந்தனனுஞ்செங்கதிரோன். (௭௨)

காலைச்சுடர்ப்போற் களித்தெழுந்தாடாரகைசூழ் *
மாலைச்சுடர்ப்போலம் மாதர்பலர்ச்சூழ்ந்தேகி. (௭௩)

அவைநாணநெஞ்சொடுபோ யந்நாடன்கண்டிறைஞ்சிச் *
சுவைநாடாப்பேதையின்வாய்ச் சொல்லருளிக்கேட்கவென்றாள் (௭௪)

பொருட்புகழின்பாண்மைமற்ற பூவுலகின்செல்வமெலாம் *
அருட்புரியன்போடுனக்கே யார்ந்துதந்தவாண்டவரை. (எரு)

மருளொழியக்கண்டுணர்ந்து வாய்த்தவரேதந்தமறை *
இருளொழியமெய்யெனக்கண் டின்பொடுகைக்கொண்டனை நீ. (எசு)

விரிவானபந்தரின்கீழ் வெய்யோன்விளக்கேந்த *
அரிதானகட்டழகோ டம்புவிமேல்வைத்தநலம். (எஎ)

கண்டாக்கிக்காத்தழித்த கர்த்தர்நலங்கண்டுபுகழ் *
கொண்டேத்தியச்சருதி கொள்பயன்கொண்டோங்கினை நீ. (எஅ)

அன்றேயனுசரித்தற் கத்தனையுங்கண்டனபின் *
இன்றேமறுப்புதற்கே யென்னகண்டாய்க்காட்டுகநீ. (எகூ)

காற்றுவழிசாய்ந்தொதுங்குங் காற்றுடிபோற்கயவர் *
கூற்றுவழிதன்மனமுங் கோணிநிலைசாய்தனன்றே. (அ0)

மனம்பொருந்திவேண்டுப்படி மாறுகின்றநிலையெனு *
இனம்பொருந்தக்காரணமு மின்றிமறைமாறனன்றே. (அக)

வான்முழுதுமன்றியுள மற்றுலகம்யாவையுமாள் *
கோன்முழுதுநீத்தாற் குணமுனகென்றெண்ணினையோ (அ௨)

ஆதியந்தஞ்சாவுயிர்தா மாகியவரல்லாமல் *
ஏதிலபன்னுள்வாழ்ந் திருப்பாயென்றெண்ணினையோ. (அங)

வாழினும்பின்றீவினையான் மண்டியெரிதீநரகில் *
ஊழியும்பின்மீட்சியிலா வோய்வுமிலாவேகனன்றே. (அச)

மீளவுநீத்தமறை மேவியநல்லோர்வருத்தம் *
நீளவுநீசெய்கொடுமை நீத்தடக்குங்கோனிலையோ. (அரு)

வானிருளமண்ணடுங்க மன்னுயிரெல்லாம்வெருவத் *
தானருளிமின்முகின்மேற் சாய்ந்தெழுந்துகோபமிக. (அசு)

எண்டிசையுந்திக்குமழ லேந்தியகண்ணோக்கமதால் *
கண்டிசையும்யாவுமறக் கர்த்தர்நடுத்தீர்க்கவர. (அஎ)

தன்னையுந்தன்வாய்மறையுந் தள்ளிநின்றார்க்காக்கினையிட் *
டுன்னையுந்தான்கேட்குமிடத் துட்குழையாத்தாங்குவையோ. (அஅ)

நீதிபரன்கோபமன்று நீங்கமனத்தின்றழுதே *
ஆதிபரனோர்ந்ததயை யண்டிநிற்பாய்மன்னவென்றாள். (அகூ)

உளத்திலஞ்சாட்சொன்னதெலா முண்மையெனநாணினபின் *
களத்திலஞ்சாயானையெனக் காய்ச்சினத்துச்சீறியன்னோன். (கூ0)

தாதுமிழ்தேன்சொல்விரும்பித் தாங்கியதன்கோபமெழக் *
கோதுமிழ்வாயார்த்தவனைக் கொல்லவைவாளோங்கினனால். (கூக)



மன்னு தகாதிதென மற்றவர்முன்றுங்கவவன் *
இன்னுவுனைப்பேதை யீண்டுசிறைச்செய்மினென்றான். (கூ௨)

மும்முறையேகித்தேரி முச்சிறையைத்தான்விளக்கி *
மெய்ம்மறையைப்பார்மேல் விளக்கினளாலம்மானை. (கூங)

மருளாகவுட்புகைந்த மன்னனலான்மற்றையவர் *
தெருளாகவாங்கச் சிறுமடந்தைக்கேட்டனரால். (கூச)

பேதையிவளல்லளொரு பேருணர்வின்வரனவருள் *
கோதையிவளல்லதிவை கூறவல்லார்யாவரென்பார். (கூரு)

தேனையுண்டவாசையெனச் சிற்சிலரேயச்சிறைப்போய் *
மானையுண்டகண்மடந்தை வாய்மொழிமீண்டுண்டுவப்பார். (கூசு)

சிறைகிடந்தமாதனுகித் தேன்கிடந்தசொல்லுணர்ந்து *
கறைகிடந்தமாசொழியக் கைக்கூப்பிவாழ்த்துவரால் (கூஎ)

கான்முடவனென்றுபிறர் கையிலங்கேசென்றிரங்கும் *
வான்மடவாள்வாவெனவே வாழ்த்திநடந்தண்டினனே (கூஅ)

தேவுலகின்மங்கையெனத் தேடவந்தவந்தகனும் *
பூவுலகிற்காணுமற். போவேனோவென்றதுபோல் (கூகூ)

மிகைகாட்டிக்கண்டுடைத்தான் மென்மொழியாட்கண்டிரங்கி *
நகைகாட்டினளவனு நங்கைகைக்கண்டுவந்தான் (க00)

நோய்நீங்கக்கண்டெளிய நொண்டிசெலக்காதுணரப் *
பேய்நீங்கநீங்காப் பெருந்திறத்தாட்செய்புதுமை (க0க)

கண்டவருங்கேட்டவருங் கைவிரித்தோவென்றுவப்ப *
உண்டவருந்தேவமறை யொத்தொழுகப்பற்பலரே (க0௨)

அச்சிறையிலம்மடவா ரன்றிருந்தமுப்பகலுள் *
மைச்சிறையினீங்கினர் வாழ்ந்துயர்ந்ததம்மானை. (க0ங)

ஆயவற்றைக்கேட்டரச னன்னவெலாங்கண்மருட்டும் *
மாயவித்தையென்றனன்பின் மாசொழித்தமெய்ச்சருதி. (க0ச)

அவ்வழியேயார்ந்ததென வார்த்தலறியம்மடவார் *
மெய்வழியேசோரிசிந்த வெட்டுவனோனாயென்றான். (க0ரு)

தகைத்தறுக்குமைந்தனையுந் தானிழற்றுங்கொம்பனையார் *
பகைத்தறுக்குமன்னனெனப் பாராமலாண்டவனை. (க0சு)

தயைசெய்தவர்க்கிரங்கத் தாமேயகத்திரங்கி *
இயைவியவ்விராவுமேலா மீறிலவேவேண்டிநிற்ப. (க0எ)

காத்தபலசேவகருங் காணாதுச்சாமவிருள் *
நீத்தபலசெங்கதிர்வா னின்றிறங்கினன்பகலாய். (க0அ)

பூமாரிபெய்துகதிர்ப் பொன்மாரிமேனியுடன் *
பாமாரிபெய்தினிதிற் பாடினவானேரிறங்கி. (க0கூ)

ஊன்விரும்பும்வேற்பகைநீத் தும்மலையைச்செல்கவினி *
வான்விரும்புமாட்சிரவீர் வம்மீனெனத்தாமழைப்ப. (கக0)

அவன்மீளலொன்றே யவன்கையினுன்சாதலொன்றே *
இவையிரண்டிலொன்றொழியே னென்றுரைப்பக்சித்தேரி. (ககக)

வானவருண்மீண்டொருவன் வானிறையோன்சித்தமிதே *
ஈனவருண்மாண்புடையா யிங்கிரங்கிக்கேட்டவரம். (ககஉ)

பொம்பேரிடத்தேறிப் போயினபின்றுகுமெனத் *
தம்பேருளத்திணங்கிச் சாய்ந்தொருங்கேபோயகன்றார். (ககங)

அன்னவெலாமன்றுகண்ட வையாறுசேவகரும் *
இன்னலவேதமலா லீங்கிலையீடேற்றமென. (ககச)

தேறிமூன்றுமேத்தியபொய்த் தேவொலாநீக்கிமுறை *
மாறிமூன்றுங்கொண்டவுயிர் மாசொழிந்தாரம்மானை. (ககரு)

செஞ்சுடரோனேட்டமிருட் சேர்ந்தொளித்தாற்போலிருண்ட *
நெஞ்சுடையோன்கேட்டவையுண் ணீங்காச்சினத்தெழுந்து. (ககசு)

வலைநீங்கியோடியமான் வந்துதொடர்வேடனைக் *
கொலைநீங்கிப்போனநங்கைக் கொல்வனெனத்தான்றொடர. (ககஎ)

வானிறையோனேர்ந்தவைதான் வந்துணராக்காற்றெனப்போய்க் *
கானிறையோர்வெள்ளமெனக் காய்ச்சினஞ்சூழ்தானைவர. (ககஅ)

ஓடிவந்துபொம்பே ருயர்மலையைக்கண்டனனே *
நாடிவந்துகண்டனகண் ணைந்துகெடவந்தகனய். (கககூ)

காலிரண்டுங்கையிரண்டுங் கந்துகெடப்பின்வழுங்கா *
வேலிரண்டுந்தைத்துருவ வீழ்புலிபோல்வீழ்ந்தனனே. (கஉ0)

எண்கெடவேவீழ்ந்தனக்கா லேந்துமனத்துள்ளெழுந்தான் *
கண்கெடவேகர்த்தர்நிலைக் கண்டுணரவுட்டெளிந்தான். (கஉக)

வானிறையோனீதிநிலை வாழ்த்திமனத்துள்ளிறைஞ்சித் *
தானிறையோனல்லனெனத் தாழ்ந்துசெய்ததோர்ந்தழுதான். (கஉஉ)

வேதநங்கைத்தாண்மலர்முன் வேண்டியெனைக்கொண்டுவிட *
போதநங்கைமேற்படவென் புன்மையொழிந்தோங்குவனன். (கஉங)

தனிவாழ்ந்தாண்மெய்க்கடவு டாளடையச்சார்பவனே *
இனிவாழ்ந்தாற்செற்ற லெனக்கவடன்பாதமென்றான். (கஉச)

பொம்பேருயரமைந்த பொற்கோயின்முன்னிறைஞ்சி *
எம்பேரிறையோ னிவற்கிரங்கத்தானிரங்கி. (கஉரு)



மாட்சியினுனிற்பவர் வந்தவனைத்தாளில்வைக்கக் *
காட்சியினனேராக் கடவுடிநம்வாழ்த்தினளால். (கஉசு)

கிளர்பொற்சிறகறவே கீழ்கிடந்தபொன்மலைபோல் *
வளர்பொற்புயத்தோன் வழிகிடந்துசொல்லலுற்றான். (கஉஎ)

நான்பகைத்தநங்காய் நவின்றவுன்சொன்னீத்ததனல் *
வான்பகைத்தநீசனுரு வாய்த்தபடிகாண்கவென்றே. (கஉஅ)

உனைப்பகைத்தேனென்றுபழி யுள்ளுணர்ந்துநீயுமினி *
எனைப்பகைப்பாயென்றெனக்கோ ரெள்ளளவுமச்சமிலை. (கஉகூ)

காணவொருகண்ணுமிலேன் காலிறைஞ்சக்கையுமிலேன் *
மாணவுருக்கோதையனய் வாழ்த்தவுனைவாயுளனன். (கங0)

உனைவாழ்த்தவுன்னைவிட்ட வொப்பிலவோர்மெய்க்கடவுள் *
தனைவாழ்த்தவாயிருக்கச் சாந்துணையும்வாழ்த்துவனே. (கஙக)

நீயோமனத்திரங்கி நின்மலர்க்கைநீண்டிலெனை *
நோயோகுறையோ நொடிப்பினும்போய்முற்றொழியும். (கஙஉ)

நீண்டுவனபூங்கரமென் சென்னியணிகொண்டிறைஞ்சி *
வேண்டுவனவெல்லாம் வெறுப்பவுநீயீய்வனென்றான். (கஙங)

உன்பொருளோமுற்றுனக்கே யுன்றீவினையொழிப்ப *
இன்பொருளோன்வாய்மொழிக்கே ளென்றுரைப்பாட்சித்தேரி. ()

எந்நோய்க்குந்தீவினையே யென்றிவைபோய்நோயொழியும் *
உன்னேய்க்குமுன்வினையே யோர்ந்தழுங்கண்ணீர்மருந்தாம். (கஙரு)

தீய்வருத்தகாயிரும்பின் சீறிநீயாற்றுவன்போல் *
நோய்வருத்தத்தீதொழிந்தா னேயொழிப்பான்வானிறையோன். கஙசு

மருந்துமெலாநோயளவாம் வானரசனேவலினல் *
பொருந்துமலாற்றுன்பமற்றே பொற்புயத்தோய்காண்கவென்றாள். ()

என்றவட்பின்னேதியிரு ளேந்திருகண்டீண்டினளாய் *
நின்றவன்றன் றுன்பமெலா நீத்தெழுந்துதாட்பணிந்தான் (கஙஅ)

உன்கைமருந்தாகவிதோ வுய்ந்தெழுந்தேனினிதற்கே *
பின்கைம்மாறென்னே பெருந்தகவாய்க்கூறவென்றான் (கஙகூ)

சொல்வார்க்கெளியதவந் தோன்றுமதைக்கொண்டொழுகுச் *
செல்வார்க்கரிதாகுஞ் சீர்க்கெளிதாந்தானமொன்றே (கச0)

வினைநீந்தத்தெப்பமென்பார் வேட்கையுடைத்தானமதை *
உனைநீங்காப்பேணுகநீ யொள்ளொளிவேன்மன்னவென்றாள் (கசக)

பாலனையச்சொல்லருந்திப் பார்த்திபனுட்கொண்டாலும் *
வேலனையதைத்ததுயர் வெந்தெரிந்தாற்றுதழுதே. (கசஉ)

பொறுப்பானேநீதிபான் பொங்குசினத்தென்றுமெனை *
வெறுப்பானேனான்முடித்த வெவ்வினையேமட்டிலதால். (கசங)

கண்டறிந்தமெய்ம்மறுத்தேன் கர்த்தாநிந்துட்பகைத்தேன் *
பண்டறிந்தபேய்ப்பணிந்தேன் பாவமறிந்தின்பமென்றேன். (கசச)

பாவிகெடநானடந்தேன் பாவிகளாம்மற்றெவரும் *
ஆவிகெடச்செய்தனனை னாஆபொறுப்பானோ. (கசரு)

அளிப்பானோபாவியென வாங்கெனக்குத்தன்மலர்த்தாள் *
ஒளிப்பானோகாட்சிநலா யொன்றுணாயாயென்றழுதாள். (கசசு)

அழுதாளெனவிரங்கி யாயிழையாடானுமழத் *
தொழுதாளருட்கடலே தோய்ந்தெனப்பேசாதுகின்றாள். (கசஎ)

நீந்திக்கனாப்பிடித்த நீர்மையெனப்பின்புகதிர் *
ஏந்திக்களிமுகத்தா ளிவ்வினைக்கொண்டோதுகின்றாள். (கசஅ)

அன்பனையவான்றிறத்தோ னாற்றுதழுதகண்ணீர் *
இன்பமெனக்கொண்டா ரினிக்கவலைக்கமன்னு. (கசகூ)

மீண்டினியகூறவுங்கேண் மெய்க்கடவுடாளணிமாய் *
பூண்டணியத்தாங்குறித்த போழ்தனுகிவந்ததன்றே. (கருo)

என்னுடிகீபத்தொருநா ளெல்லையினுட்பட்டிறந்து *
மின்னுடுநேர்வானிலங்கி மேல்வீட்டில்வாழ்ந்துவப்பாய். (கருக)

இக்கொடையேதந்தபிரா னேத்திவிளங்தெண்ணியவுன் *
கைக்கொடையேசெய்தினிப்போர்க் காத்துகிற்பாய்மன்னவென்றாள்.

சவையொருங்குங்கண்டுமனஞ் சாற்றிறந்துபோற்றிநிற்ப *
இவையொருங்குங்கூறியகா லெங்குமொளிவீசினளால். (கருங)

ஓயாவதிசயமு முட்களிப்புமாகவங்கண் *
வீயாதெவரும் விமலனடிவாழ்த்தியபின். (கருச)

முகக்காந்திகண்ணருந்த மூதுரைத்தேன்கருகருந்தச் *
சுகக்காட்சிவிட்டயலே தோன்றியவன்மீண்டுரைத்தான். (கருரு)

நீங்கமயற்றேறமன நீதிபரற்கண்டிறைஞ்ச *
ஓங்கநயன்றுயெனக்கே யுன்றுணையாலாயதன்றே. (கருசு)

கண்டநயநீங்காக் கரைகாணளவுமுனைக் *
கொண்டடியேன்முத்திபெறக் கூடவருகென்றழைத்தான். (கருஎ)

போதிமன்னுவீங்கெனக்கே போர்க்களமும்பூண் முடியும் *
ஆதிமன்னனேவலினு லாகுமெனநங்கைதொழ (கருஅ)

கால்வணங்கித்தானுங் கழலினவோர்வான்மணியே *
போல்வணங்கிவானுவப்பப் போய்தன்பதிசேர்ந்தான். (கருகூ)

தேவருளினுசையினச் செய்தியெலாமாய்ந்தனளால் *
மேவருளின்மாதரொடு மிக்குவந்தாளம்மானை. (கசுo)

தேவருளாசைகாதை முற்றும்.

# கொய்ச்சிரத்தெழுச்சிகாதை.

விருத்தம்.

மனம்வழங்கிய மறைநலத்தொளிபெறப் புரோசன் *
தனம்வழங்கிய தன்மையினடந்தவை வழங்கிச் *
சினம்வழங்கிய திறத்தில்வகாயனுங் கேட்டுக் *
கனம்வழங்கிய கடிமுழக்கெழச்சினந் தருவும். (க)

தார்சிரம்பிய தடம்புயப்புரோசனுந் தவமும் *
கார்சிரம்பிய கருமலையுச்சிமேற் றவத்தின் *
சீர்சிரம்பிய தெரிவையர்கூட்டமுஞ் செகுப்பப் *
போர்சிரம்பிய பொருநனாவேந்தன்போக் கினதும். (உ)

மெய்யிலேந்திய வேதநூலேந்துகித் தேரி *
செய்யிலேந்திய நெடியவாள்வெட்டின பின்பு *
கையிலேந்திய கதிர்செயுந்தன்சிரங் கொடுபோய் *
மையிலேந்திய மலைமிசைவைத்ததுஞ் சொல்வாம். (ங)

அம்மானை.

சரோசமென்றாட்கித்தேரி சாற்றியமெய்ஞ்ஞானவுரை *
புரோசனென்பானெஞ்சிலொன்றாய்ப் பூமலருங்காய்கனியும். (க)

காட்டினதுபோல்வழிதான் கண்டதும்பத்தாயறமே *
ஈட்டினதுமொன்றா யிவன்றனதூர்ச்சேர்ந்துடனே. (உ)

பூசைநிறைவேற்றினதும் பொற்கோயிற்பேணினதும் *
ஆசையறச்செய்தவமு மாசையறச்செய்கொடையும். (ங)

வானகத்தோர்கண்டுவெப்ப வையகத்தோர்கொண்டுவப்ப *
தானகத்தோராசையிலாத் தானமிகச்செய்திறத்தால். (ச)

இருட்பொழிகார்பெய்ததனு லெவ்விடமும்பேறுவர்போல் *
பொருட்பொழிவார்நாமமற்றை பூமியெலாம்போற்றுமன்றே. (ரு)

பார்வழங்குந்தானமதாற் பட்டவிவன்செய்தியெலாம் *
சீர்வழங்குங்காய்னென்பான் செப்பவுங்கேட்டேதிதென்றான். (சு)

எனக்கடங்குநாடனஞ்சா வென்றேவர்மீண்டொழித்து *
தனக்கடங்குநாடுகெடத் தாசர்மறைசேர்ந்தனனோ. (எ)

இன்னவெலாமாயவழி யேதெனக்கோனுங்கொருவன் *
மன்ன வெலாமுன்மகட்செய் மாய்கையினுலாயதென்றான். (அ)

என்மகளோவெங்கணவ னென்றரசன்கேட்கவவன் *
உன்மகளேமன்னு வுயர்ந்தபொம்பேருச்சியின்மேல். (கூ)

முன்னரிங்கண்காணுமன் மொய்த்தகன்றபேதையரைத் *
தன்னிலங்கண்சேர்த்திதித் தவமியற்றுந்தன்மையென. (கo)

ஒழுவர்க்குந்தானுணர்ந்த குட்சிமறைகூறினளாய்ப் *
பாழுவர்க்குமாகப் பலமாய்கைசெய்துநிற்ப. (கக)

ஆட்டினங்கட்டுவித்தை யன்றுடனன்னடையிற்போய்க் *
காட்டினளாயன்றன் கருத்தழியவுன்மருட்டி. (கஉ)

இந்நாளில்வந்தமதத் தேய்த்தவனையுட்படுத்தாள் *
அந்நாளிலாங்கிருந்தே னையாநானென்றிறைஞ்ச. (கங)

பொங்குஞ்சினக்காயன் பொற்பழியக்கைக்கடித்தே *
எங்குஞ்சிறுபேதை யென்றிறத்திற்கோர்பழியாய். (கச)

எண்ணுதிருப்பாளோ வென்றவட்கேமுன்குறித்த *
நண்ணுமணத்துணைவ னன்னவெனத்தான்விளித்து. (கரு)

நானிறைஞ்சுந்தேவரிலா நான்விலகுநீசதெய்வந் *
தானிறைஞ்சியென்சொற் றவிர்ந்தடங்காநாடனென. (கசா)

சரோசமலர்நாளையிதழ்த் தான்குவியர்முன்னறுத்த *
புரோசன்சிரத்தையிங்கே போடச்சிலர்ப்போக்கி. (கஎ)

நீயகன்றபொம்பேரு நேடியங்கணென்மகளும் *
போயகன்றமங்கையரும் புல்லரெனக்கொய்தெறிந்து. (கஅ)

தன்னலமுன்னீபருகத் தந்திலளாயின்றவடன் *
இன்னுயிரைநீபருகி யென்பழியுமுன்பழியும். (ககூ)

ஒன்றுயினித்தீர்க்க வொள்ளயிலோயொல்லையிற்போ *
வென்றான்கோன்மற்றவனு மேகினனாலம்மானை. (உ௰)

தீமுகத்திலின்னவையே செல்வவிடத்தாயினக்கால் *
பூமுகத்திற்றேனொழுகும் பொய்பேரிடத்திருந்த. (உக)

நேராத்தவத்தரசா ணீதிபரன்காட்டியமெய்ப் *
போராங்கிலைக்காட்சிப் பேருவகைமற்றவர்க்கே. (உஉ)

கூறிவரும்போர்முகத்துக் கொற்றமடைந்தோங்கவுளம் *
தேறிவருநாளளவுந் தின்னுறுதிச்சொல்லொழியாள். (உங)

வான்கூசப்பார்நடுங்க வானுறநாமெம்மிறையோன் *
தான்கூசாமாய்ந்ததற்கே தந்தைகம்மாறுமிதென்பாள். (உச)

வாள்புடையிற்பொன்மகுடம் வாய்த்திலங்கப்போர்த்துணையாய்த் *
தான்புடையினிற்பச் சயந்தவிராப்போரிதென்பாள். (உரு)

நீர்முகத்துப்புன்னுரைபோ னீங்குதுயர்க்கொண்டெமக்கே *
போர்முகத்துமேற்றிறந்த பொன்னுலகுகாண்மினென்பாள். (உசா)

கோதெனவான்மீன்புறத்துக் கொண்டுயர்விடாங்கடைந்து *
போதெனவென்றுதனடி பூண்டணியுநாளிதென்பாள். (உஎ)

பூவுலகுநீங்கிவிண்மேற் போயடங்காவாழ்வுக்குத் *
தேவுலகுமொவ்வாத் திருமுகங்காண்காலிதென்பாள். (உஅ)



வானோர்க்குமெட்டா வடிவுருவநாங்காண *
ஈனோர்க்குமுள்ளிரங்கு மெந்தைதயைநாளிதென்பாள். (உகூ)

சாலோகமாயடியேஞ் சாமீபஞ்சேர்ந்துவப்ப *
பூலோகநீத்தகலும் போதிதுவோதற்பரனே. (ங௦)

நீரூபங்கொண்டிறந்த நின்றயையாலின்றடியேம் *
சாரூபமாவேமோ தாதாவேவேதாவே. (ஙக)

என்மனமுமுன்மனமு மில்லெனச்சாயுச்சியமாய்ப் *
புன்மனமும்பேருவரி போனிறைந்துவாழ்துமின்றே. (ஙஉ)

அச்சயனேயற்புதனே யாதியந்தமற்றனைத்தே *
இச்சயமேதந்தருள்வா யென்றுருகிக்கூறுவளே. (ஙங)

கங்குன்மதிபாற்கதிருண் காவியெனக்கண்ணிமையா *
மங்கைமதிவாயுரையம் மாதர்தினங்கேட்டுருகி. (ஙச)

ஆயிற்றுறந்தாருடைமெறந்தார் சூழ்ந்தநலஞ்சேருடல் *
உயிர்த்துறந்தாலென்னவன்று ரோர்நிலைகாணுத்திரிவார். (ஙரு)

வெம்போர்வரும்பொழுதை மீளாவிரும்பினராய்த் *
தம்போரல்லாமலொன்றைத் தாமுரையாரம்மானை. (ஙசா)

ஆசைமிகவின்பமிக வன்னபடியையிருநாள் *
பூசைமிகவம்மலைமேற் போயினபின்னன்றிரவில். (ஙஎ)

வானவருட்பற்பலராய் வானமுதூட்டிவந்தே *
ஈனவருமொப்பிலரா யிடிலவான்மாட்சிகலீர். (ஙஅ)

காலைநலந்தோன்றியபின் காதலறாவெற்றி *
மாலைநலஞ்சூடிப்புயர் வானுலகில்வந்துவப்பீர். (ஙகூ)

ஆங்குநம்மோடாதினைக்கண் டாளுதிற்பிர்நாளையென்றே *
ஈங்குநம்மோடின்றனைர யேத்தவர்தோன்காட்சிநீர். (ச௦)

எந்திறத்தாலிச்சயமா மென்றுணராதாண்டவரே *
தந்திறத்தால்வெற்றிநலந் தந்துமுடிதாமிடுவார். (சக)

இந்நிலையேநின்றெளிதா வெப்பகையும்வெல்லலெனு *
அந்நிலையேநின்றமர ரர்ச்சனைபாமுன்றொடங்க. (சஉ)

வானவருள்வானவர்போன் மாதரிசைக்கொத்திசைகள் *
ஈனவருளீடிலதோ ரின்பமிகப்பாடினரால். (சங)

ஒளித்திரளும்பாவிசையு முள்ளுணர்வும்வாழ்த்திறமும் *
களித்திரளுமிவ்வனைத்துங் கண்டனர்வாளுடதென்பார். (சச)

இத்திறத்திலங்கே யிராவனைத்தும் போயினபின் *
மெய்த்திறத்தின்வேதமுன்போய் வீயுமெனாநீக்கவிருள். (சரு)

மங்கையர்தம்போர்க்கானை வாள்விழித்தகண்மணிபோல் ※
அங்குயர்தன்றேர்நடத்தி யன்றெழுந்தான்செங்கதிரோன். (௪௬)

போர்க்கொடியோபோர்முரசோ பொங்கிரவிகாண்மினிதோ ※
சீர்க்கொடியீர்சென்மினெனச் செல்லவவர்சித்தேரி. (௪௭)

முன்னடந்தாடம்பகைக்கு முந்திவிருந்தோம்பினர்போல் ※
பின்னடந்தார்யாருமலைப் பேர்க்கெதிராய்த்தாஞ்செலவே. (௪௮)

நினைமறுத்துக்கிள்ளையழத் தேன்மறுத்துத்தும்பியழ ※
தனைமறுத்துமஞ்ஞையழத் தாய்மறுத்துமான்களழ. (௪௯)

ஓடுபுனலேங்கியழ வொல்லெனவேதென்றலழ ※
ஆடுமிலைவிம்மியழ வாவெனவேயாவுமழ. (௫௦)

கானமெலாமன்றழவே காட்சிகலார்சூழ்ந்துவந்தே ※
வானமெலாமேற்புகழ வந்துமலைகீத்தகன்றார். (௫௧)

பொம்பெருகீத்தகலும் போதெதிரேதம்பகைவர் ※
வெம்போரணியாய் விரைந்துவரக்கண்டுநின்றார். (௫௨)

மீனினங்கடிங்களொடு வேய்ந்தனபோன்மாதர்நிற்ப ※
மானினங்காண்வேட்டொன மண்டியவர்வாள்வீசி. (௫௩)

சென்றமற்றைச்சேவகரோ தேங்கொடிக்காடீர்த்தனபோல் ※
நின்றமற்றைமங்கையரை நீள்வடிவாட்கொண்டுவெட்ட. (௫௪)

மணமாகமுன்குறித்த மைந்தனங்கேகோமகளின் ※
குணமாகநின்றவன்முன் கொல்லெனச்சென்றோர்புலிபோல். (௫௫)

இன்னுயிர்க்குக்காவலனு யென்னையன்றுநீமறுத்தாய் ※
உன்னுயிர்க்குக்காதகனு யுற்றேனினின்றெனவே. (௫௬)

வான்கூசமன்னதிர வானடுங்கமாறுதொழத் ※
தான்கூசாப்பூஞ்சிரத்தைச் சாய்த்தறுத்தானம்மானை. (௫௭)

பரிபாலனென்பான் பவமறநூற்றையாறும் ※
வருடமெனுவைகாசி வந்தெழுமூன்றோர்பகலாய். (௫௮)

காலைச்சுடரிடபங் காய்ந்ததட்டித்தேர்நடத்த ※
மாலைச்சுடரசுவ மாமிசைவந்தேறியகால். (௫௯)

பேதைவயதையிரண்டாய்ப் பேறுபலவாயிரமாய்த் ※
தாதைவனதயேவாண்பன் றுன்கொடிதாயன்றுசெய்தான். (௬௦)

விண்ணகத்தோர்மேற்புகழ வேற்கொடியோர்சூழ்நடுங்க ※
மண்ணகத்தோருள்வியப்ப மாட்சிகலோர்கேட்டுவப்ப. (௬௧)

பூவினமேதேன்றுளிப்பப் புள்ளினமேபாவொலிப்ப ※
காவினமேசூழ்துடிப்பக் கல்லினமேயுள்ளுருக. (௬௨)



கண்டாருளைத்தாற்றார் காணுமைமந்தாற்றார் ※
அண்டாவளைத்துலக மன்றோர்கவங்காண. (௬௩)

வாட்பலத்தால்வீழ்ந்தசிரம் வான்பல்கொள்சித்தேரி ※
தோட்பலத்தாற்றானெடுத்து ஆகாரத்திலேந்திநின்றாள். (௬௪)

வாவிவிரிசெங்கமலம் வான்கூடரையேந்தலெனப் ※
பூவிவிரிகையேந்தும் பூஞ்சிரஞ்சூழ்வில்வீச. (௬௫)

முகக்கமலங்கட்குவளை மூக்குநறுஞ்செண்பகமே ※
நகைத்தளவம்வாயாம்ப னண்ணியொன்றாய்ப்பூத்தனபோல். (௬௬)

அருளான்மலர்ந்தமுக மார்ந்தவின்பத்தேனெழுக ※
மருளாற்றனைத்துணித்தான் வன்முகத்தைநோக்கினளே. (௬௭)

நோக்கியதன்கண்ணொளியே நுண்ணுயிர்புண்ணுழைந்து ※
போக்கியமெய்ஞ்ஞானமுளம் போழ்ந்துருகத்தான்றெளிந்தே. (௬௮)

விழுந்தழுதான்மங்கையடி மேவுதுதிமுற்றெடுத்தான் ※
அழுந்தியமெய்க்காட்சியினு லாண்டவரைக்கண்டறிந்தான். (௬௯)

பொய்ம்மறுத்தான்மெய்யுணர்ந்தான் பொன்னுலகினுற்றடைந்தான் ※
கைம்மறுத்தாங்கொவ்வாக் களிகூர்ந்தேவேறுனன் (௭௦)

தன்னுயிரையுண்டவர்க்குத் தானுயிர்தந்திதெனக்கே ※
என்னுயிரின்மேலினிதென் றேகினளாலம்மானை. (௭௧)

தேவதன்கைவல்லமையுட் செய்தவிறோடாண்டவர்தான் ※
ஏவலங்கைதன்சிரங்கை யேந்திமெல்லமுன்னடந்தாள். (௭௨)

ஒளியேந்தும்பொற்றேருதையகிரியேறவெனை ※
களியேந்துந்தன்மலைமேற் கைச்சிரத்தாண்மேனடந்தாள். (௭௩)

திங்களிரண்டொன்றியொரு செங்கதிரையேந்தலென ※
அங்கையிரண்டேந்துசிர மாங்கொளிசெய்தேநடந்தாள். (௭௪)

மென்கொடிகட்பூத்துவிரி வென்கொடிகண்முன்னேந்த ※
பின்குயில்கட்கூவிப் பெரும்பறைகளார்ந்தொலிப்ப. (௭௫)

பூவுளபல்வண்டினங்கட் பொற்குழல்களூதிவர ※
காவுளபற்புள்ளினங்கட் கட்டியமேகூறிமுன்ன. (௭௬)

கிளர்வடிவின்றோகையயிற் கேளிக்கைமுன்னுடிவர ※
வளர்வடிவின்சேவகர்போன் மான்மரைகட்சூழ்ந்தணுக. (௭௭)

பூமணவாய்த்தென்றனறும் பூங்கவரிவீசிவரத் ※
தேமணவாய்காவியினந் தீம்புகைபோல்வாசமிட. (௭௮)

பூத்தமலர்தேங்கமழ்கீர் போழ்சிரத்தின்மேற்றுளிப்ப ※
பூத்தமரந்தாங்கியபற் பூங்குடைக்கீழ்த்தானடந்தாள். (௭௯)

சலசலெனப்பெய்துளிதேன் றன்புழுதிமுற்றடக்க *
கலகலெனமுன் னுதிர்ப்பூக் காலணையாய்மேனடந்தாள். (௮௦)

அலையுவப்பமேலெழுமோ ராழியின்நேர்வேந்தனென *
மலையுவப்பவன்றே மலைமடந்தைமேனடந்தாள். (௮௧)

வான்குடி யாளென் றுவந்து வான்குடிகண்மண்டிவர *
கோன்குடியாட்கொண்டசயங் கூர்களிப்பாற்கொண்டாட. (௮௨)

வான்வழங்கும்ராகஙிலை வான்வழங்குமியாழிலெழத் *
தேன்வழங்குமின்னிசைக ளேறியெங்கும்பாவழங்க. (௮௩)

வாடாமதுப்பொழிபூ மாலையிடவந்தசிலர் *
சூடாவொளிப்பொழிபூண் சூடியிடமொய்த்தசிலர். (௮௪)

பூமழையேபெய்துசிலர் பூவைதவம்வாழ்த்திவரப் *
பாமழையேபெய்துசிலர் பாவிசையம்பாடிவர. (௮௫)

காமமறவைம்பொறிகட் காத்தசயமென்பசிலர் *
நாமமறவாழ்வொழித்த ஞானசயமென்பசிலர். (௮௬)

தாட்சிமிகப்பேயினங்கட் சாய்த்தசயமென்பசிலர் *
ஆட்சிமிகமுப்பகைவென் றுயசயமென்பசிலர். (௮௭)

சயஞ்சயமென்றார்ப்பமுகிற் றாரணிமேலொப்பிலதாய்ச் *
சயஞ்சயமென்றார்ப்பமலைத் தான்சயங்கொண்டேநடந்தாள். (௮௮)

இன்பமிகக்கண்மலர்ந்தா ளிட்டமிகவாய்மலர்ந்தாள் *
அன்பமறயார்க்குமின்சொற் சொல்லினளாய்மேனடந்தாள். (௮௯)

ஐந்நாழிகைவழியே யச்சிறப்பிற்குன்றினுச்சி *
இந்நாரிதன்கரமே லேந்துதலைக்கொண்டுவந்தாள். (௯௦)

வந்துளியக்கோயிலின்முன் வாழ்த்தியிதுபூசையெனச் *
செந்துளிபெய்ப்பூஞ்சிரமுன் றெண்டனிடுவைத்தனளால். (௯௧)

கொய்தமலரோடே கொடிவீழ்ந்தாற்போலுடலும் *
பெய்ததலையோடுவிழப் பேருயிர்மேலேறினதே. (௯௨)

வானவர்கையேந்தமற்றை மாதருமையாறணுக *
ஈனவருணின்றுவிண்மே லேறினள்இத்தேரியன்றே. (௯௩)

புரோசனென்பான்றானும் பொருவிலமெய்வேதபிரான் *
சரோசமென்றுணியகாமற் றன்றலைதந்தன்றெருங்கே. (௯௪)

தன்சொற்றிறத்திவின்ன தன்மைநலந்தந்தவனை *
இன்சொற்றிறத்திறைஞ்ச வேறினளாலம்மானை. (௯௫)

தாங்கியவான்கோபமிவ டாரணிவிட்டேறியபின் *
ஓங்கியதேபோலவெங்கு மும்பரமேன்மொய்த்தமுகில். (௯௬)



இருட்பரப்பிக்கண்கூச வீறிலமின்வாள்வீசி *
வெருட்பரப்பிச்சூழ்முழங்க வெஞ்சினவேறிட்டிடிப்ப. (௯௭)

கொடுங்கொலைக்கன்றுங்கமைந்து கூடினவச்சேவகரும் *
படுங்கொலைக்குளஞ்சியெங்கும் பாய்ந்தலறியோடினுஞ்சூழ். (௯௮)

வீழ்ந்தவிடிபட்டெரிந்து வெண்பஸியாய்வெந்திறப்ப *
தாழ்ந்தவிடிபேரொலியாற் றற்பரன்றன்கைத்திறத்தை. (௯௯)

கண்டறிந்தார்கண்டநலோர் கன்னியஙிந்தேரிநலம் *
உண்டறிந்தாரோர்ந்தபுக ழோதின்றாரம்மானை. (௧௦௦)

வானிலின்றோர்வானவனோ வந்துரைத்தவேவலினால் *
கானினின்றோர்மாதவத்தோன் கான்கிடந்தவவ்வுடல்கள். (௧௦௧)

தேடியெடுத்தன்புமிகச் செய்முறைசெய்தாய்ந்தபுகழ்ப் *
பாடியெடுத்தன்றெருங்கும் பார்கிழட்கிலனால். (௧௦௨)

கார்தவழுங்குன்றினுச்சி கற்கோயில்வாயிலின்முன் *
நீர்தவழுந்தாமரைநீர் நீங்கியதுப்புண்டதென. (௧௦௩)

சிரம்வேறுடல்வேறாய்ச் செய்ததிருமேனிகண்டு *
வரமேந்துங்கித்தேரி மாண்புடலீதென்றிறைஞ்சி. (௧௦௪)

சிரமேந்தியகரமுஞ் சென்றடைந்ததாளிரண்டும் *
சரமேந்தியமுறையாற் றன்றலைமேற்கொண்டணிந்தே. (௧௦௫)

ஆசைமிகவவ்விடத்தோ ராழ்ந்தகுழிசெய்ததிலே *
பூசைமிகக்கையெடுத்து பூவுடலைவைத்தனபின். (௧௦௬)

பல்வரமேகொண்டதெனப் பன்னிறப்பூமேற்பரப்பி *
நல்வரமேகாய்க்கவென நாட்புடைமண்மூடினனால். (௧௦௭)

வான்வாழுங்கித்தேரி வானயனிங்கீவெளனுந *
தான்வாழ்ந்தபூவுடலைத் தாரணிமேலோர்பிணையாய். (௧௦௮)

தந்தனனென்றம்புவிகொள் சாலவின்பமுள்ளடங்கா *
அந்தநிலத்தன்றுமது வார்ந்தமலர்பூத்தனவே. (௧௦௯)

விண்வாழநல்லுயிரோ மேலேறித்தன்றயையால் *
மண்வாழத்தன்னுடலை வைத்தனளிங்கம்மானை. (௧௧௦)

கொய்ச்சிரத்தெழுச்சிகாதை முற்றும்.

# என்மர்காதை.

## விருத்தம்.

செங்கரமேந்திய தன்சிரமேந்தொளி சிந்தியவான்றரு மாட்சிகலாள் *
வெங்கரமேந்திய காதலனூர்ந்தொளி வீசுவிசும்புக டந்துயிர்போய் *
அங்கரமேந்திய வன்பொடுமின்றரு ளாண்டவராசன மண்டினளாய்ப் *
பைங்கரமேந்திய பங்கயநேரொளி பாயமகிழ்ந்து மலர்ந்தனளே. (௧)

சோடுகடந்த சுகந்நுமடந்தை நுதிப்பவனந்த னவேனைத்திறுகப் *
பாடுகடந்த சயந்தின்வரங்கள் பணிப்பவணிந்த முடிக்கதிரால் *
ஈடுகடந்த நலத்திலிலங்க வெதிர்த்துவரும்பல பற்பொழுதே *
நீடுகடந்த நவத்வைதயறிந்து நிலத்திணையின்றி யுலப்புளதால். (௨)

ஓர்வயதோர்சுர மோர்பொழுதென்றுதன் ஞேடுபிறந்தன வெண்மரெ *
பார்வழிபற்பல சென்றுதனித்தனர் பாசறைகொண்டு பிரிந்தனரே *
சீர்வழிமேற்கதி சென்றிவளன்பொடு செய்துவிடர்தன வேண்டுதலால் *
சூர்வழியேமறை வேண்டியிறந்து துளங்கிலவன்னவர் காதைசொல்வாம். (௩)

## அம்மானை.

விண்கடந்துவானிலுயர் வீடுசென்றதித்தேரி *
கண்கடந்துமுட்கடந்துங் காந்திவிரிபாசனமேல். (௧)

மூவுலகுமூவிரலான் முத்தொழிற்செய்தேந்தினனாய்த் *
தேவுலகுமேத்தியகோன் சேவடிமுன்சேர்ந்தனளே. (௨)

செங்கதிர்முன்கஞ்சனமோ செங்கதிர்முன்கஞ்சமதோ *
அங்கதிர்மின்றுண்ணொளியா லன்புமிகவின்பமிக. (௩)

பகாப்பொருளாந்தேவநலம் பார்த்துமுழுதுண்டுளமாற் *
றெகாப்பொருளாங்காட்சியினாற் சொல்லரியவாழ்வடைந்தே. (௪)

எப்பொருளுமுற்றுணர்ந்த வீடிலவோர்ஞானமுமாய் *
அப்பொருளும்வேண்டுமுனி யாங்குணர்ந்துமகத்துமாய். (௫)

வானிறையோன்றன்முகத்தை மாசொழியக்கண்டனளால் *
தானிறையோர்மாசுமிலா சால்புணர்ந்ததாருமைப்பார். (௬)

ஒன்ளொளியுமுள்ளுலவப்ப முள்ளடங்காத்தானிலங்கித் *
தெள்ளொளிசெய்தேவதிருச் செந்தாட்பணிந்துமிறப. (௭)

அருட்கடலோன்றுணவனை யாங்கினிதாய்த்தூக்கியரும் *
பொருட்கடலாமார்பொடுதன் பொற்கரத்தாற்சேர்த்தினரால். (௮)

கனாகாணுதங்கே களித்தனளாய்வாழ்த்திடவோர் *
உனாகாணுதின்பநன்னீ ருண்டுண்டமிழ்ந்தினளே. (௯)

மண்ணரசாங்கென்னுன் மறுத்தனைநீயின்றழியா *
விண்ணரசிங்கார்குமென மின்னார்முடிபுனைந்தார். (௧௦)



நீவக்காவின்கன்னிமுகைத் தாளணியாய்ச்சூடினைநீ *
சிவக்காவின்பூவிதெனத் தேன்றொடையைச்சூடினன்றான். (௧௧)

தாய்தாதையென்றுற் றவிர்ந்தனைநீயென்மகளே *
தாய்தாதையாயினனான் றுனக்கேயென்றணைத்தார். (௧௨)

வான்சுரக்குமின்பநிறை மங்கைதுதிவாழ்த்தெடுத்து *
தேன்சுரக்குமென்மொழியாற் செப்பியபின்னுள்ளிரங்கி. (௧௩)

பன்னாட்படர்ந்தவிருட் பட்டொழியவுன்றயையால் *
என்னுடன்னுடாக வென்றுமருட்செய்யாயோ. (௧௪)

ஈங்குவப்பநானுமென்னை யீன்றதந்தைதாய்நாடில் *
ஆங்கெரியவென்றுமுன்னை யாங்கிகழத்தாங்குவனே. (௧௫)

என்றிவையும்பற்பலவு மேத்தியுளாத்தாங்கிறைஞ்ச *
அன்றிவையும்பற்பலவு மாண்டவர்தாஞ்செப்பினரால். (௧௬)

எனைவேண்டித்தாய்தந்தை யென்றிகழ்ந்தாய்நானுமினி *
உனைவேண்டியார்க்கவர்க்கே புள்ளிரங்கிச்செய்தயையால். (௧௭)

அஞ்சாமுன்றூன்தெளிந்து தூயவென்வாய்வேதவழி *
அஞ்சானுன்பின்னடப்ப வரிநெழயாய்க்காண்பையென்றூர். (௧௮)

மீண்டேதிருவுளத்தின் மெய்ப்பலவுங்காட்டவங்காள் *
ஆண்டேயறிந்தலற்றை யாய்தலரிதம்மானை. (௧௯)

காலமெலாம்பின்றமுன்னுங் காட்சிவல்லோன்பின்னெடுநாள் *
கோலமெலாங்காட்டியபின் கூருவப்பிற்கூறலுற்றூர். (௨௦)

பிறைசுமந்தபொன்மகுடம் பெற்றமன்னரைவரையும் *
கறைசுமந்தவாளாற் கடிந்தொருநாள்வெட்டிவெல்லும். (௨௧)

ஆங்கொருவனென்னருளா லன்றுலுசித்தானியனு *
டோங்கவொருங்கென்மறையி னுட்படுத்துந்தன்மையினுல். (௨௨)

அன்னுடென்னுடாக வாருமுதற்கோனவனே *
என்னுடென்னுடெனநா னியந்தனவென்காயமைந்தும். (௨௩)

பூங்கொடியாயேந்தியன்னூர் பூவுலகத்தெல்லையொடு *
தாங்கொடியைப்பின்விரித்துத் தாழ்விலவுன்னுட்டரசர். (௨௪)

தமையிறைஞ்சநாடனைத்துந் தாமனுப்பும்வேதியரால் *
நமையிறைஞ்சநாடாக நாளுமவர்செய்வரெனு. (௨௫)

செங்கதிர்க்கோன்றன்சுடர்க்கை செல்லுமெல்லைக்கவ்வரசர் *
தங்கதிர்க்கோனிட்டவரு டந்திடுவேனுவுமன்றே. (௨௬)

தம்படைமுன்னென்சிலுவைத் தார்கொடியாய்வந்திலங்க *
வெம்படைமுன்றம்பகைவர் வெள்ளமெலிவுற்றொழிய. (௨௭)

நீரோடுந்தங்கலமு நீண்சிலுவையேந்திவர *
தாரோடுமென்மறையுந் தம்மரசுகாட்டினராய். (௨௮)

முறைமாறுதன்னவர்நான் முற்றுவப்பத்தானடந்து *
மறைமாறுகாட்டியின்ன மாட்சிவளர்ந்தாயினக்கால். (௨௯)

அருளொழியாவெண்குடையா னன்பொழியாவண்கொடையான் *
தெருளொழியாக்கேள்வியினன் சீரொழியாமேன்மையினன். (௩௦)

ஓடாப்படைக்கடலா னேயர்த்தருமாலான் *
வாடாமறையணியான் வானுவப்பமன்னனிறைஞ்ச. (௩௧)

பொருளேந்துஞ்செல்வமிகப் பூவுலகினேனிலனைப் *
அருளேந்துநாமமுடை யைந்தாங்கோனுக்குறிப்பான். (௩௨)

தானுளுமந்நாளிற் சால்பருளாரென்மகளே *
வானுளுமென்றிறந்தால் வையமெங்குமாளவுநீ. (௩௩)

நான்குறித்தநாளாகி நானருளும்வல்லமையால் *
யான்குறித்தகீர்த்தியெழ யாவுலகும்யாவுயிரும். (௩௪)

உனைப்புகழவுன்று ளுதவியபல்லற்புதத்தால் *
எனைப்புகழ்ந்துபொய்யே ரிடத்தாள்வாயென்னவல்லோன். (௩௫)

சாற்றரியமாட்சிலா டாளிறைஞ்சியுள்ளுருகித் *
தேற்றரியவாய்ந்தபுகழ் செப்பிகின்றாளம்மானை. (௩௬)

மனத்தடங்காப்பேருவகை மண்டிமிகவாழினுந்தான் *
தினத்தடங்காச்சிந்தையுளஞ் சென்றுறுத்தமீண்டுரைப்பாள். (௩௭)

தாதாவேயென்மேற் றயைபுணர்ந்ததன்மையினல் *
வேதாவேயங்கனென்னை விட்டகன்றவெண்மரின்மேல். (௩௮)

ஓர்ந்தருணீசெய்யவவா வொப்பவென்றேடாளவிங்கே *
சேர்ந்தருளிவாழ்ந்துவப்பச் செய்வாயேயென்றிறைஞ்ச. (௩௯)

இன்னபடியாகுமென வெந்தையருட்கொண்டுரைப்பச் *
சொன்னபடியாயவைநான் சொல்லுகிற்பேனம்மானை. (௪௦)

பலசிலைவாய்த்தீபமெனப் பார்விளக்கச்சூழ்பரவிச் *
செலசிலைவாய்விட்டகன்ற தேமொழியார்தம்மொடுதாம். (௪௧)

பிரிந்தேகவேவியவெம் பேரிறையோன்காட்டியவாய்த் *
திரிந்தேகவன்னவரே சேரிடமெல்லாம்விளங்க. (௪௨)

சோதிபொருளோயுடைக்கண் சோருமெனக்காட்டியதன் *
நீதிபொருநீயுணர்வோர் நீங்காப்பகைத்துலைப்ப. (௪௩)

வேறிடத்துள்ளோர் துணிவாய் வேதநலம்வேண்டியுயிர் *
ஈறிடத்தங்கெண்மரொருங் கிடிலதோர்வெற்றிகொண்டார். (௪௪)



வேரியபூஞ்சோலைநிழல் வேண்டியடைசெல்வமிகுந் *
சீரியநன்னாட்டிடத்தே சென்றாட்பாசீலியென்பாள். (௪௫)

ஆசைமுழுதீர்த்தனளா யன்புடனேர்மெய்க்கடவுள் *
பூசைமுழுதேத்தினளாய்ப் பொய்ச்சினந்திக்காமமற்ற. (௪௬)

திங்குமுழுதற்றனளாய்ச் செய்தவத்தின்மேன்மையினல் *
ஆங்குமுழுதொப்பிலளா யன்னவர்செய்திதுபொருு. (௪௭)

வாதுமுகத்தோதியமெய் வாய்ந்தபலஞானமவர் *
தீதுமுகத்தோங்கியதந் திச்சினத்திற்காய்ந்துபொரு. (௪௮)

காய்ந்தொருமான்பாய்புலிபோற் கார்த்திகையின்மாதமுதல் *
பாய்ந்தொருமாதின்றிநெடும் பாடவளைத்தான்படுத்தி. (௪௯)

வானுவந்துசெய்திறந்தால் வான்முகத்திலஞ்சிலனாய்த் *
தானுவந்துதன்னுயிரைத் தந்தனளாலம்மானை. (௫௦)

கார்பூண்டமாளிகைப்பூண் கார்த்தாருமாநகரில் *
சீர்பூண்டுசென்றாட் செருமானியென்பவளே. (௫௧)

உண்டதண்ணீர்க்காடுவப்ப வோடவுமிழ்ப்பொன்மலைபோல் *
கண்டவுண்மைதானெவர்க்குங் காதுவப்பவோதினளாய். (௫௨)

ஓடியநீருண்டுலரு மோர்வனம்போலாங்குபலர் *
நாடியசொற்கேட்டுயர்மெய்ந் நாதனறிந்துட்பணிய. (௫௩)

கார்ப்பருவம்பூத்தமுல்லைக் காட்டிடைநித்தோகைமயில் *
சீர்ப்பருவத்தன்னவருட் சீர்த்தெழுந்தாளம்மடவாள். (௫௪)

தீய்முகமாய்க்கோடைவந்து தேன்மலர்க்காடய்த்தகெறு *
காய்முகமாய்த்தீயோர்முன் கற்றவளுமற்றவரும். (௫௫)

பைங்கொடிபோற்றைமாதம் பத்தொன்பானுமொருங்கே *
வெங்கொடியோர்வாளால் விழுந்திறந்தாளம்மானை. (௫௬)

பனிக்குமந்துநீர்ப்பொழிந்த பன்மலைச்சூழ்வாழ்வுகுப்பக் *
கனிக்குமந்துதேன்பொழிந்த காலிசநாடணுகி. (௫௭)

வெம்புனல்வீழ்குன்றுமிசை மேவிமறைவேண்டியங்கண் *
செம்புனற்றந்தாண்டவர்தாட் சென்றனளெப்பேமியென்பாள். (௫௮)

மலையொளித்தவோர்மணிபோன் மாண்டவட்பூமேனியிற்றன் *
நிலையொளித்தநாட்பலவாய் நேடியபூக்கொய்தொருநாள். (௫௯)

இடைச்சியருளோர்சிறுமி யேந்தியகைகண்டுவிரல் *
உடைச்சிறிதோராழியெடுத் துள்வெருவியூமையின்றான். (௬௦)

கையாலுணாத்தவற்றைக் காணவந்தார்காதுணரா *
மெய்யாவிறப்பவிங்கே விட்டனவெப்பேமியுடல். (௬௧)

அதியாகக்கொள்ளவொரு சொல்லாய்ப்புரட்டாசி *
பதிஞறுநாளெடுத்தார் பத்தியுள்ளோரம்மானை. (௬௨)

மற்றவருண்முன்பிறந்த மாதெனச்சேனைவுரியே *
முற்றவருட்சங்கைமிக முன்னொருதாய்ப்போலிருந்தாள். (௬௩)

அன்னார்பிரிந்தனபின் னம்பரமேற்பாய்ந்தமதிள் *
துன்னார்பகைக்கழியாத் தூவிநகர்வந்தனடான். (௬௪)

பகைவேடர்க்கஞ்சியன்னம் பாலைநிலஞ்சேர்ந்ததென *
மிகைவேந்தர்க்கஞ்சியநாண் மெய்ப்பகைத்தபாவிகளுள். (௬௫)

வேங்கையினத்துள்ளொதுங்கி மேய்ந்திருக்குமானெனவே *
தீங்கினத்துன்னெடுஞட் சேர்ந்திருந்தபின்னவளை. (௬௬)

கைப்பிடித்தவேற்கொடியார் கார்த்திகைமுதற்பகலே *
மெய்ப்பிடித்தகாரணத்தால் வெட்டினாலம்மானை. (௬௭)

முடியாடுமேகமென மொய்த்தபுகைமேற்கமழக் *
கொடியாடுமாடமணி கோர்துவமாபட்டணமே. (௬௮)

அன்றுசெய்தவெம்பகையா லம்புவிமேனிந்தைபெற *
இன்றுசெய்தவர்ச்சனையா லெங்குமருங்கீர்த்திபெற. (௬௯)

விற்றேரியென்பாள் விரும்பியங்கட்சேர்ந்தனளால் *
கற்றோரின்வாய்ப்புகழ்மேற் காட்சிவரம்பெற்றநங்கை. (௭0)

ஆங்காட்கொடுங்கோலா ஞராயாக்கோபவல்லான் *
தீங்கார்த்தீயோனெனுங்கோன் செய்தகொடும்பாடளவோ. (௭௧)

உடன்முழுதுஞ்செங்குருதி யோடவடித்தஞ்சிலனாய்க் *
கடன்முழுதுஞ்சேர்ந்தவியாக் காய்ந்தெரியோர்சூளையிலே. (௭௨)

போட்டெரிப்பவங்கணவட் பூவிரித்தசோலையைப்போல் *
மீட்டுவெப்பமொய்த்திருட்செய் வெஞ்சினத்தில்வேகுநெஞ்சான். ௭௩

கற்காவிற்கட்டிக் கசத்தாழ்ந்தநீரில்விட *
பற்காலநீர்மிதந்த பங்கயம்போன்மேன்மிதந்து. (௭௪)

தனைப்புகழவாங்கெவருந் தற்பரனைத்தான்புகழ *
வினைப்பகலன்சிறவிரி மேற்கரைசேர்ந்தப்பொழுதே. (௭௫)

செம்புனலாங்கோடாமற் செல்வர்வியந்தேத்திசிற்ப *
வெம்புனலாய்ப்பாலோட மென்முலையைக்கொய்தனபின். (௭௬)

காய்ந்தெறிந்தவம்புநவக் கார்த்திகைபத்தேழாநாள் *
வாய்ந்தவுயிர்வான்மிசைபோய் வாழ்வடைந்தாளம்மானை. (௭௭)

தேறியமெய்ஞ்ஞானமிகச் செய்ததவமேன்மையினால் *
கூறியசொன்மேற்பெருமை கொண்டவிபிராத்தையென்பாள். (௭௮)



பெற்றவருங்கூடப் பிறந்தவருநீங்கினபின் *
மற்றவருமண்டா வனம்புகுந்தங்கேநெடுநாள். (௭௯)

கண்முதலாய்வாசலைந்துங் காத்தகவவீட்டிலவள் *
விண்முதலாய்நோக்காது வெவ்வினைவென்றேங்கினின்றாள். (௮0)

எண்ணுண்டுமவ்விடத்தி லிப்படிதானின்றனபின் *
மண்ணுண்டதன்முதை வன்கையிலேமீண்டுபட. (௮௧)

வெஞ்சினத்திலீண்சிலுவை மேலறையுண்டங்கவள் *
அஞ்சிலனாய்ச்சூழெழவர்க்கு மாரணநாலாய்த்துணைப். (௮௨)

வேலியெனுநீண்மதிள்வாய் வெம்பகைக்குச்சூழடைத்த *
காலியெனுமாநகரிற் காயாடியைந்நான்கு. (௮௩)

நாளாகிவாழ்வபதே நன்மடந்தைக்கைம்முன்றாய் *
வாளாற்சிரம்விழத்தான் வான்புகுந்தாளம்மானை. (௮௪)

கள்ளவிழ்பூஞ்சோலையணி காலிசநாட்டிடத்தில் *
உள்ளவம்பிலோக்கியமூ தூருகேசென்றிருந்த. (௮௫)

மண்ணுலகிலொப்பிறந்த மாரினையென்பவளே *
விண்ணுலகில்வந்தமறை விட்டொழிப்பவைத்தசெல்வம். (௮௬)

அறந்தனைஎன்றுங்கெரித்த சூளையிலேபோட்டெரியாச் *
சிறந்தனளென்றன்றுசிரஞ் சென்றுகொய்தார்கொய்தசிரம். ௮௭)

மும்முறையேதாண்டிவிழ மூவிடத்துமற்புதமாய் *
அம்முறையேயூற்றெருமூன் றுகியுயிர்நல்கியநீர். (௮௮)

அன்றெழுகக்காணவவ ராடியினுண்மூவாறுஞ் *
சென்றெழுகத்தான்கதியிற் சேர்ந்துவந்தாளம்மானை. (௮௯)

அடைவாகைமுற்றியின்ன லம்புவிமேன்மிக்கொளிரக் *
கடைவாகைக்கொண்டாட் களிமாற்சியாளெனவே. (௯0)

சொல்லரியசெல்வமுடைத் தோலேறுமாநகரில் *
நல்லரியதன்வயது நாற்பதினைந்தாமளவும். (௯௧)

மெய்யிறையோன்மாட்சிமைதான் மேன்மொழியாலோதிவர *
பொய்யிறையோர்பூசையவர் போக்கிவிடாரென்றுபொறு. (௯௨)

ஆங்கொருநாளன்னவர்தா மர்ச்சனைசெய்பொய்யுருவம் *
ஈங்குருவாமென்னலவட் செக்காத்தாற்சாய்த்தழித்தாள். (௯௩)

வதிதெனத்தேவபழி யென்றலறியாங்கள்பொறுத் *
நீதிதெனக்கீழ்மிதித்துத் தேய்த்தடித்தபின்னவளை. (௯௪)

அன்றிரையாய்ச்சிங்கமுண வாடியினீராறுநாள் *
என்றெறிபவாறுயர்தா னேறினாலம்மானை. (௯௫)

இன்னபடிசித்தேரி யின்பமிகவாசையறச் *
சொன்னபடியென்மருமவான் றன்னிமுடிசூடினராய். (௬௬)

ஒருணர்வுமோர்பிறப்பு மொன்றிவந்தவொன்பதும்பர் *
சேரிடமுமொன்றெனவே சீர்த்தினிமேற்றும்பிரியார். (௬௭)

பிரியாதவன்புடையார் பேரிறையோன்றனணியாய் *
விரியாதபூமுகையார் வீட்டிலொருகோவையென. (௬௮)

காட்சிலங்தோங்கிவ கன்னிகள்வாழ்ந்தங்கடைந்த *
மாட்சிலங்கண்டுனாப்ப வல்லவராரம்மானே. (௬௯)

எண்மர்காதைமுற்றும்.

---

# புதுமைகாதை.

## விருத்தம்.

மெய்யேர்திய மறைமாதென விதிவேதியர்புகழ *
மையேந்திய மலைமாதென மலிதாபதர்பணிய *
மொய்யேந்திய சயமாதென முழுதேபுவி பரவக் *
கையேந்திய சிரமாதென கடிவாழுவள் கதியே. (௧)

கதியண்டின பொழுதுண்டென கரையொன்றில கனியாய் *
நிதியண்டின மணியொன்றொளி நிகர்சின்றனள் புவியின் *
பதியண்டின விடையும்புகழ் பலவண்டின புதுமைத் *
துதியண்டின நவமண்டின தொகையொன்றில செயவே. (௨)

துறைகாட்டின யோராற்றினட் சராமாற்றின டுணையாய் *
சிறைநீக்கினட் கறையேற்றினட் சினையொத்தன விலையும் *
முறையெத்துணை யிடமெத்துணை மொழியத்துணை யெவரோ *
நிறையற்புத சிலபிற்சில நியமித்தினி மொழிவாம். (௩)

## அம்மானை.

மாறுத்திருவுளத்தில் வாய்ந்தபொழுதெய்தியபின் *
ஆறுத்திருமடந்தை யற்புதசித்தேரியம்மாள். (௧)

பூவுலகிலெங்குமொளி பூண்டபுகழ்பெற்றுயர *
தேவுலகிலாளிறையோன் செய்புதுமையோராளவோ. (௨)

மாயிரவிற்செங்கதிர்போல் வந்திறையோனீய்குதித்த *
ஆயிரத்தேழ் நூற்றொருபத் தாறுமாண்டேகையிலே. (௩)

பூங்கமழ்நீட்சோலையணி பொந்தைநல்லூர்வைகியவோர் *
தேங்கமழ்நீட்கூந்தனலா டதருந்திநீடுனைய. (௪)

வாடாமுலைச்சிலந்தி வந்துசிலையோடினதால் *
நாடாமருத்தனைத்து நாடிசெடுநாளாறு. (௫)



அயிலுமிலாவூனுமிலாத் துன்பமிகச்செய்மருந்து *
பயனுமிலாக்கண்டபல பண்டிதர்கைவிட்டகன்றார். (௬)

நீங்குறநோய்நாளுமிகத் தேய்ந்துயிர்போய்ச்சாதலன்றி *
ஈங்குறுநியொன்றிலையென் றேங்கியவளெந்தழுவாள். (௭)

உயர்முகத்தாங்கோர்குருவந் துள்ளிரங்குந்தன்மையினால் *
துயர்முகத்தாட்கண்டழுந்தன் றுன்பமறிந்தாதரித்தே. (௮)

மண்ணிடத்திலோர்மருந்தும் வாய்த்தபயனில்லதெனில் *
விண்ணிடத்தில்வாழ்பவரை வேண்டிலருட்செய்வரென்றான். (௯)

அய்யாபெரும்பாவி யாகியநானன்மைபெறச் *
செய்யாதவேண்டுதன்முன் செய்தனனோவென்றழுதாள். (௧௦)

அன்றறியவன்பினவ னங்குரைந்துவானுலகில் *
நின்றறியவல்லமையி னோருட்கொண்டொப்பிலளாய். (௧௧)

பொம்பேரிடத்தாட் புகழ்மிகுஞ்சித்தேரியைநீ *
வெம்பேரிடரொழிய வேண்டிகவென்றுங்கொளித்தான். (௧௨)

குருவுருவாய்ச்சம்மனசு கூறினனென்றெண்ணினளாய் *
அருளுருவாஞ்சித்தேரி யன்புமிகவேண்டினளே. (௧௩)

ஆங்கிரவில்வேண்டினபி னன்றசதிகொண்டுறங்கி *
ஓங்கிரவிதோன்றினபி னேர்குறையில்லாதெழுந்து. (௧௪)

புண்டாலும்புண்வடுவும் போய்முழுதாங்கினதும் *
கண்டாட்களித்திரண்டு கைக்கூப்பிவாழ்த்தினளாய். (௧௫)

கண்டாரதிசயிப்பக் காட்டினளாவாய்த்தபுகழ் *
கொண்டாரெவருமுயர் குன்றாசித்தாடொழுதார். (௧௬)

தான்விரைந்துபோயரிதிற் றந்தநயைக்கொண்டிறைஞ்ச *
தேன்விரைந்தபொம்பேரு சென்றதின்மேலேறினளாய். (௧௭)

இங்குதவஞ்செய்துயிரீங் கீந்தளித்தாட்சித்தேரி *
எங்கெனத்தானுங்கெவரு மேதறியோமென்றதனால். (௧௮)

வானவனேவோர்குருவோ வந்துரைத்தசெய்திகளும் *
தானவனேசொன்னபடி தாளிறைஞ்சிவேண்டினதும். (௧௯)

வேண்டினபின் றூங்கினதும் வெங்கதிர்முன்னீங்கிருட்போல் *
நீண்டினதன்னோயொழிந்த செய்தியுந்தான்முற்றுகாப்ப. (௨௦)

அன்றொழியாக்கீர்த்தியெழ வம்மலைமேலெண்ணிலரோ *
சென்றொழியாவாழ்த்திசைப்ப செங்கதிரோன்வந்துதிக்கும். (௨௧)

கிருணாசலமனையாக் சித்தேரிசெதசனையால் *
கருணாசலமென்னும்பேர் காசிலபொம்பேருடைத்தே. (௨௨)

முன்மலைமேல்வென்றனளாய் முற்றுலகங்காத்தளித்து *
பின்மலைமேலாளவென்றே பேரடைந்தாளம்மானை. (௨௩)

மீண்டொருவன்றுங்கரிய வேதனையால்நொந்துருக *
நீண்டொருபன்றுடலைநோய் நிற்பமருந்தொன்றுதவா. (௨௪)

போதவிளியித்துயர்க்குப் பூவுலகிலாறிலதால் *
வீதவினிதாகுமென விப்பிரமங்கொண்டுளைய. (௨௫)

மீதுரைத்தமாதிடத்து வேய்ந்தவற்றைக்கேட்டதனால் *
நீதுரைத்ததன்றலைநோய்த் தீருமெனநம்பியவன். (௨௬)

தன்சிரத்தைத்தன்கரத்தாற் றுங்கிடந்தாளிரங்கி *
என்சிரத்திநோயொழிய வின்றுதயைச்செய்யாளோ. (௨௭)

என்றானென்றப்பொழுதே யிற்றெனவோர்நோயுமின்றி *
நின்றான்றொழுதா னெடிதுனைத்துவாழ்த்தினனால். (௨௮)

பின்னையிவட்கர்ச்சனையிப் பேருலகின்மேல்வளர *
பொன்னையிழைத்தோர்சுருபம் பொற்புமிகப்பண்ணிவித்தான். (௨௯)

செய்தவுருக்குன்றினுச்சி சேர்த்திவைக்கச்சூழவெங்கும் *
பெய்தமுகிலார்ப்பனைய பேரிகையுங்கோமுரசும். (௩௦)

பற்பறையுமார்த்தொலிப்பப் பாடியபற்பாப்புகழும் *
வெற்புறையும்புட்குரலும் வேறுபடாசேர்ந்தொலிப்ப. (௩௧)

வானுவப்பப்பார்புகழ மன்னுயிர்கணிதொழிப்ப *
தானுவந்துமீண்டொருகாற் றன்மலைவந்தாண்டிருக்க. (௩௨)

கிரணாசலத்தெழுந்த கேழொளிவாய்ச்சூரியன்போல் *
கருணாசலத்தெழுந்தாட் காசறுசித்தேரியன்றே. (௩௩)

அன்னபடிகீர்த்திமிக வார்வமிகுநங்கையெங்கும் *
இன்னபடிசெய்புதுமை யெண்ணுவராரம்மானை. (௩௪)

பற்பலரேபற்பலநாட் பற்றியருமண்டையினோய் *
முற்பலரேசெய்மருந்தா முற்றுதவாநீடுளைய. (௩௫)

செவ்வறிவுமாறுமெனத் தீர்ந்துயிரும்போகுமென *
எவ்வறிவுங்குன்றநனி யேங்கியழவாங்கெவரும். (௩௬)

கைச்சிரத்தாட்செய்புதுமைக் கண்டவனைநம்பிநொந்த *
அச்சிரத்தார்வேண்டவுநோ யற்றொழிதருணமொன்றாய். (௩௭)

மீளவுமந்நோயுறா மிக்ககருணாசலத்தி *
நீளவுமெலாருமின்ப நீங்கிலராய்வாழ்த்தினரே. (௩௮)

இத்திறத்தான்சேர்கொழுகொம் பின்றியொருசெல்வக்கொடி *
ஒத்திருந்தோர்கன்னிதலை யுச்சியினோர்கல்லுருவாய். (௩௯)



நொய்யெனினுந்தோன்றியிடு நோய்பெரிதாவாங்கவடன் *
கய்யெனினும்பூந்துகிலுங் கார்குழலுந்தீண்டல்பொறா. (௪௦)

தாங்கரிதாநோய்தணியாத் தன்னொடுதாய்தாதையழ *
ஆங்கரிதாயின்னபடி யையவருடனொந்தனபின். (௪௧)

நாற்றிசையிற்கூடிவந்த நான்மருந்துமுற்றுதவா *
மேற்றிசையின்கையுதவி வேண்டுமெனச்சித்தேரி. (௪௨)

தேனுதிர்ந்தபூவடியைத் தெண்டனிடநோக்கலிலே *
தானுதிர்ந்துநோய்முழுதுஞ் சற்றுமிலாநீங்கினதே. (௪௩)

அங்கமெலாந்தம்முறையே யாய்ந்துரைப்பமற்றுமொரு *
நங்கையின்முன்வீழ்ந்தவிடி நல்லுயிருண்டானெனினும். (௪௪)

கண்மணியையுண்டதனாற் கட்குருடியாகியவள் *
உண்மணியைநீந்திழந்த வோர்பதங்கம்போலநின்றாள். (௪௫)

வற்றியகண்கூடாது வாழ்விழந்தாளென்றெவரும் *
முற்றியநோய்க்கண்டிரங்க முற்றுருகித்தான்புலம்ப. (௪௬)

அன்றுணர்விற்றேறியவோ ரங்கனைவந்தேனுளைவாய் *
இன்றுணர்விற்றேறியரு ளேந்தியசித்தேரியினால். (௪௭)

ஈங்கரியதொன்றுளதோ வென்றெவரும்வேண்டிநிற்ப *
ஓங்கரியவின்பமிக வோரொளிமீன்றோன்றுதல்போல். (௪௮)

கண்டிருகண்ணூனமிலாக் கண்டுகளித்தாய்ந்தபுகழ்க் *
கொண்டிருக்கைகூப்பியருட் கொண்டளித்தசித்தேரி. (௪௯)

பூமலர்த்தாட் பூத்தொடையார் போற்றினளாய்மீண்டொருகால் *
தேமலர்க்கண்ணோகாது செல்வியெனவாழ்ந்தனளே. (௫௦)

அன்னபடிகட்குருட ளைவரிருகண்ணடைந்து *
சொன்னபடியானறியத் தோன்றியரிதுள்ளுவந்தார். (௫௧)

கட்குருடுமன்றிக் கணக்கிலவாங்கண்ணோவு *
பட்டவுங்கண்மேற் படர்ந்தனமாசற்றதுவும். (௫௨)

கண்டாரோரெண்ணுமிலார் கண்டருட்சித்தேரியின்மேல் *
கொண்டார்புகழ்மாலை கூவுலகிலம்மானை. (௫௩)

கண்ணளவிற்கண்ணெதிர்நேர் காதுமிவள்செய்புதுமை *
எண்ணளவிற்கொண்டுவைப்ப வேந்துமகளாயொருத்தி. (௫௪)

ஒத்தவயதுள்ளவரோ டோர்ந்துவிளையாடினக்கால் *
வைத்தபெரிதோர்மணியை வல்லிதொருகாதினுள்ளே. (௫௫)

புகுந்தெடுக்கச்செய்ததெல்லாம் பூங்குழலாட்கொன்றுதவா *
மிகுந்தெடுத்தநோவுபொறா விம்மிநெடுநாளழுதாள். (௫௬)

நொந்தசெவிகோளாம ஞெந்துபன்னீராண்டுளைய
வந்தவிடத்தெல்லாரும் வாழ்த்தவிவள்செய்புதுமை. (௫௭)

கேட்டனளாய்த்தானுநம்பி இத்தேரிசிறடியை
வேட்டனளாயாசையொடு வீழ்ந்திறைஞ்சிவேண்டினளால். (௫௮)

தானுகவம்மணியே தன்செவியின்வீழ்ந்துதிர
ஊனுகவொன்றுமிலா துற்றதவைக்காணுர. (௫௯)

கொண்டாடிருப்புகழ்தான் கொய்தமணிகாட்டியதை
கண்டாரதிசயிப்ப காதலராய்வாழ்த்தினரால். (௬௦)

அன்னபடிபல்வலியே யற்றதுவும்பல்லரணை
இன்னபடிதீர்ந்ததுவு மெண்ணிலரேகண்டுவந்தார். (௬௧)

கொய்தசிரங்கையிருக்கக் கூறியுரைப்பேசினடான்
செய்தயையாலுமைகளுஞ் செப்பவலந்தந்தனளே. (௬௨)

பட்டநெடுநாட்பிணியாற் பண்டிவிதிற்பேசினனு
கட்டினதுபோலொருசொற் கட்டுரைக்கமாட்டாமல். (௬௩)

பன்னூறுமையெனுப் பாணியினுற்பேசினபின்
அந்நாளிற்இத்தேரி யற்புதங்கள்கேட்டதனுல். (௬௪)

நம்பியுள்த்தாசையொரு நாக்கெனத்தான்வேண்டினக்கால்
வம்பிலுளஞ்சொல்துவக்க வாய்முடித்துப்பேசினனுல். (௬௫)

கந்தரத்துட்டோன்றிக் கடுக்குமெழுநோயுரத்தால்
சுந்தரத்துட்கண்பலரோ சுற்றமழத்துஞ்சினரால். (௬௬)

அன்னபடியோர்குமரி யப்பிணிகொண்டாங்கிருக்கச்
சொன்னபடியொன்றுதவாத் தொண்டையுணீர்தாவிறங்கா. (௬௭)

சாதலினிதிட்டமெனத் தந்தைதனக்கோர்மகளாம்
பேதையினிபோவளெனப் பேருயிர்ப்போடார்த்துளைய. (௬௮)

செப்பரிதாய்கைச்சிரத்தாள் செய்புதுமைதானினைத்துத்
தப்பரிதாம்வல்லமையைத் தானுநம்பிவேண்டினளால். (௬௯)

தானையன்னசொன்முடிப்பச் சாதமவள்கேட்டெளிதாய்
பேதையன்னமுண்டனபின் பேருவகைகொண்டுரைத்து. (௭௦)

தாதாவெனக்கொருநோய் தானுமில்லையென்றெழுந்தாள்
மாதாபிதாவுடனே மற்றெவருமுள்வியப்ப. (௭௧)

எண்ணாடங்காவற்புதங்க ளிதிலசெய்இத்தேரி
மண்ணடங்காக்கீர்த்திநலம் வாழ்த்தினரேயம்மானை. (௭௨)

சொன்னபடிமற்றொருவன் ருெண்டையிற்னுய்க்கொண்டுருகி
அன்னபடிநாக்கருகி யங்குருதவியொன்றுமிலா. (௭௩)



வெள்ளியினுனுக்கிடவும் வெண்மெழுகுசாத்திடவும்
உள்ளினனுய்க்இத்தேரி யொண்பதத்தைவேண்டினனே. (௭௪)

வேண்டினதுமெல்லானேய் விட்டதுமொன்றுமியுளந்
தாண்டினதோரின்பமிகச் சாற்றியிவைநந்துவந்நாள். (௭௫)

பேதமிலாபற்பலரே பெற்றகண்டமாலையென
ஏதமிலாதீர்ந்தொழிய வீங்கிவளாற்கண்டறிவோம். (௭௬)

உள்ளவெழுமாதமக வுண்டகக்குவானுெழியாக்
கொள்ளினியபாலுமிழ்ந்து குட்டனினிச்சாகுமெனு. (௭௭)

பெற்றவரோடாங்கெவரும் பேருலைப்பினெந்தழவே
மற்றவரோடன்னவரும் வாழவிவள்செய்தயையால். (௭௮)

பிள்ளையினேப்த்தீர்த்தனைப் பெற்றவர்நோய்த்தீர்ந்தெவரும்
உள்ளியவோரிதிலவாழ்த் தோதினதுங்கண்டறிவோம். (௭௯)

மார்வலியுமின்னபடி மங்கையர்தங்கொங்கையிடை
சேர்வலியும்புண்ணுமெலாந் தீர்ந்தபலர்வாழ்த்திடவும். (௮௦)

உயிர்ப்பரிதாய்நெஞ்சடைப்பு முள்ளபலகாசைகளும்
அயிர்ப்புமிலாத்தீர்ந்தனவு மற்புதமாய்க்கண்டறிவோம். (௮௧)

பற்றியதீயுள்ளெரிந்த பாண்மைவயிறுள்ளெரிய
முற்றியநோயோர்மாத முற்றொழியாதோர்மடவாள். (௮௨)

தாங்கரியபீடைபொருச் சாதலினிதாகுமெனு
ஆங்கரியவோசையுட னுர்த்தலறிச்சுழந்துளைய. (௮௩)

ஆங்கெவரோஇத்தேரி யாய்ந்தடிமேற்சாயத்திடு
வாங்கியதையுந்தியின்மேல் வைத்துடனே தாங்கினளால். (௮௪)

ஆக்கமொழிந்தப்பொழுதே தோன்றியநோய்முற்றொழிந்து
வீக்கமொழிந்தெக்குறையு மீண்டிலளாய்த்தானெழுந்தாள். (௮௫)

குன்மவலியாற்பலரே கூர்ந்துளையச்இத்தேரி
தன்மவலியாற்குணமே தந்தபடிகண்டறிவோம். (௮௬)

கய்யிரண்டுங்காலிரண்டுங் கண்டனனோயின்னபடி
துய்யிரண்டுவான்சுடர்முன் ருெற்றவிருட்போலொழிய. (௮௭)

கட்டவிழ்ந்தாற்போலொருத்தி காலொடுகைமுற்றசையா
உட்டளர்ந்தேயாறுண்டு மூட்டியதோருண்டனளால். (௮௮)

நன்றுவிளைகாலமெனு நண்ணியவூர்க்இத்தேரி
என்றுவிளைபொற்சுருப மேந்தியங்கேகொண்டுவைத்தார். (௮௯)

கண்டமகள்வேண்டினபின் கையுதவத்தாய்க்குறைத்துக்
கொண்டமகட்கேட்டாசை கூர்ந்தவளும்வேண்டினக்கால். (௯௦)

கைவிரித்துக்கோல்பிடித்துக் காலினின்றுமுன்னடந்தாள்
மெய்பிடித்துக்கோலெறிந்து மீண்டுதனித்தானடந்தே. (௯௮)

காலுதவக்கையுதவக் கண்டுவந்துசித்தேரி
மேலுதவிசாந்தனையும் மிக்குரைத்துவாழ்த்தினளே. (௯௯)

அன்னபடிகன்னிமடத் தாங்கிருந்தமற்றொருத்தி
சொன்னபடிகாலொடுகை தூக்கவுமாட்டாதிருக்க. (௧௦௦)

ஒன்பதுநாட்கொண்டாட வுள்ளினபின்னெட்டாநாள்
துன்பமிலாத்தானெழுந்து துள்ளிநடந்தன்பொடுபோய் (௧௦௧)

கோமகளைத்தக்கரங் கொண்டுதொழுதற்சனையாய்
மாமகளேசெய்தநன்றி வையமெங்குங்கூறினளால். (௧௦௨)

நுண்ணிடைக்கீழ்சிவலிலா நொய்கொடிபோற்காலுவளா
மண்ணிடைக்கீழோரடியே வைத்திலளாய்மற்றொருத்தி. (௧௦௩)

வண்டியின்மேன்மூவருடம் வாங்காமனின்றனபின்
அண்டினளேசித்தேரி யாதரவைக்கேட்டுநிற்ப. (௧௦௪)

அப்பொழுதேகாலுயிர்க்கொண் டாங்கெழுந்துதானடந்தாள்
முப்பொழுதேகோமகளை மூவுலகும்வாழ்த்திடவே. (௧௦௫)

இப்படியேயோர்சிறுவ னேக்கினுமில்லாது துணி
ஒப்படியேகீழ்துவள வோரெனும்புங்காலிலிலா. (௧௦௬)

மூவாண்டிவ்வாறிருக்க மொய்த்துயர்க்கொட்டாயொருநாள்
பூவாண்டகோமகளை போற்றியருட்செய்கவென்றான். (௧௦௭)

ஆங்கவனுஞ்சித்தேரி யற்புதஞ்செய்தாளெனத்தான்
ஓங்கினின்றோடிவந்தா னுள்விப்பயாவருமே. (௧௦௮)

முன்வழங்காக்கையொடுசால் முற்றுதவச்செய்ததனால்
பின்வழங்கவோர்கணக்கும் பெற்றிலதாலம்மானை. (௧௦௯)

இவ்வாறுமுச்சிமுத லெவ்வுறுப்புஞ்சித்தேரி
ஒவ்வாதுசெய்புதுமை யுற்றனவாந்தான்றனியே. (௧௧௦)

உடலொருங்குமின்னபடி வுற்றபலநோயொழியக்
கடலொருங்குநோகக் கருணைநலாள்காத்தனளே. (௧௧௧)

வெஞ்சுரத்தாற்காய்ந்தவுடல் வேதனையாற்றோறுமூறி
நெஞ்சுரத்தாற்றீபுழுங்க நீங்கியுயிர்ப்போகுமென்று. (௧௧௨)

மூவிடத்திலின்னபடி மூவர்கிடந்தெம்மருந்தும்
பூவிடத்திற்றும்வெறுத்துப் பொம்பெருநங்கையின்மேல். (௧௧௩)

ஓதினநற்றீர்த்தமொன்றை யுண்டனருண்டப்பொழுதே
வேதனையற்றோர்குறையும் மீண்டிலதாய்த்தாமெழுந்தார். (௧௧௪)



நோ முதிர்ந்துமீட்சியிலா நொந்திருந்தமற்றொருத்தி
வாய்வரண்டுகண்களொட்டி வற்றியுடன்மேற்குளிர்ந்து (௧௦௮)

சாவடைந்தாளன்றலறிச் சாவுடையுஞ்சாத்தொடையும்
வீவடைந்தார்க்கப்பொழுதே வேண்டியதும்வந்திருக்க. (௧௦௯)

அன்றவளேதன்னுளத்தி லற்புதமாய்ச்சித்தேரி
என்றவளைவேண்டினளா யின்பமொடுறங்கினவர். (௧௧௦)

விழித்தெழுந்தாற்போலெழுந்து விம்மினளைநோக்கியவள்
பழித்தெழுந்தாளின்றெனக்கோர் பாடிலையென்றோங்கினின்றான். ()

சார்ந்துடனுமுன்னே தனக்கமைத்துவைத்திருந்த
பூந்தொடையும்பூந்துகிலும் பொம்பெருநங்கையின்முன். (௧௧௨)

தாவிடவந்திவ்வுயிரைத் தந்தனைநீயென்றிறைஞ்சி
காவிடவெம்பூம்புகையுங் காட்டியடிவாழ்த்தினளால். (௧௧௩)

முற்றியசூழ்பூண்டொருத்தி முன்பலநோய்க்கொண்டதனால்
பற்றியவோர்வெஞ்சிரத்தாற் பட்டபலவினமிக. (௧௧௪)

பெறுகாலத்துன்பமினி பெற்றனக்காற்றுங்காமல்
இறுகாலமாயிறப்பா ளென்றெவருங்கூறிநிற்ப. (௧௧௫)

நம்பியவள்காவலனே நல்கியசித்தேரியுருப்
பம்பியவளாசையொடு பார்த்திருக்கமார்பணைத்தே. (௧௧௬)

எண்கடந்தவற்புதத்தி யிருயிரைக்காத்தருளி
விண்கடந்தவுன்றயையென் மேலிரங்கவென்றிறைஞ்ச. (௧௧௭)

ஒருநோயுமின்றியினி தோர்மகளைத்தந்துசுரந்
தருநோயுமன்றியுமுன் றானுளபன்றோயுமின்றி. (௧௧௮)

அப்பொழுதேவாழ்ந்திருந்தா ளாங்கெவருஞ்சித்தேரி
எப்பொழுதும்வாழ்த்தியவ ளேந்தருளைநம்பினரோ. (௧௧௯)

சிறையோடுநீண்புனற்கண் ணின்றவிருபாலகரோ
நறையோடுவிண்டமலர் நாடிவிளையாடினக்கால். (௧௨௦)

ஐவயதுள்ளோனொருவ னாற்றினுள்ளேவீழ்ந்தமிழ்ந்தக்
கைவிரவிமற்றொருவன் காற்றெனப்போய்க்கூறினதால். (௧௨௧)

கேட்டனதாயார்த்தலறி சித்தேரிகாக்கவென்றாள்
மீட்டவனைத்தேடுதற்கே விட்டபலரோவினளால். (௧௨௨)

நீண்டவழிபோயவனை நீண்புனலிற்கண்டெடுத்து
மீண்டனதாய்முன்பிணம்போல் விட்டனபின்மீண்டவன்றாய். ()

கேட்டறியாவல்லமைகொள் சித்தேரியுன்றயையால்
நாட்டறியவிக்குழந்தை நல்கவெனக்கென்றழுதாள் (௧௨௪)

தாயழுவேயற்புதமாய்த் தான்சிரித்துக்கண்டிறந்து *
சேயெழுவேகித்தேரி சீர்த்திமிகுமிப்புதுமை. (௧௨௫)

கண்டவருங்கேட்டவருங் கைவிரித்தேயொத்துளதோ *
பண்டவருங்கூறவெனப் பற்புகழ்கொண்டேத்தினரோ. (௧௨௬)

ஓர்முறையோர்மீன்விழுங்கி யுண்டவனைகக்கினனும் *
நேர்முறையாற்பன்முறையே நேரிலகித்தேரியினால். (௧௨௭)

விழுங்கினபின்பல்லுயிரை மீண்டரிதிற்சாவுமிழ *
அழுங்கினபின்பற்பலரோ யன்றுவந்தாரம்மானை. (௧௨௮)

இவ்வாறவள்புதுமை யெண்ணிடவுங்கூறிடவும் *
செவ்வாறருந்தமிழோர் செய்தடையுந்தன்மையன்றே. (௧௨௯)

பட்டசிறைநீக்கினளும் பட்டபிணிதைமாற்றினளும் *
கெட்டபொருட்காட்டினளுங் கேட்டதெலாநீட்டினளும். (௧௩௦)

கூனியமும்பல்வலிப்புஞ் சூல்வலியும்விச்சிரிப்பும் *
தானிவையும்பற்பலவுந் தாங்கியொழிந்தற்புதமாய். (௧௩௧)

தான்பிறந்தநாட்டிடத்து தன்றனைக்கொண்டாண்டனளே *
வான்பிறந்தவல்லமையான் மாண்புடைகித்தேரியென்பாள். (௧௩௨)

சாலாயகன்றவற்றைச் சாற்றிலென்னேவிந்நாட்டில் *
ஏலாக்குறிச்சிவடக் கேந்துகிழற்காட்டருசே. (௧௩௩)

அருட்காவனீங்கா வடைக்கலத்தாய்க்கோயிலிடைத் *
திருக்காவலூர்வணங்குஞ் செல்வமிகுங்கித்தேரி. (௧௩௪)

ஆளுமிடமாகவிங்க ணன்புமிகவுள்ளிரங்கி *
நாளுநனிசெய்புதுமை நாட்டிலறியாருமுண்டோ. (௧௩௫)

ஈங்கவளேதந்தபிள்ளை யென்றவட்பேருள்ளவரும் *
ஆங்கவளேகாத்தனளென் றர்ச்சனையாய்வாழ்த்தினரும். (௧௩௬)

ஓர்புதுசஞ்சீவியென வொப்பவுணாத்தேத்தினரும் *
ஆர்புதுக்கைதாயிவளென் றர்ச்சனையாய்வாழ்த்தினரும். (௧௩௭)

அன்றியிவள்செய்யரிய வற்புதங்கட்கூறுதார் *
இன்றியிவளாருவளோ வெங்கணன்றேவம்மானை. (௧௩௮)

பூங்காத்திகைச்சிரத்தி பூத்தகருணைசலத்தி *
ஓங்குரத்திவாண்புகழு மொண்டவத்தியிரறத்தி. (௧௩௯)

கோமகளேநிபமெனக் குன்றினுச்சியாண்மகளே *
மாமசளேவேதமணி மாண்புடைகித்தேரியம்மாள். (௧௪௦)

எந்நாளும்பொய்யினிரா யிங்கொழியாதென்றிரங்கி *
இந்நாடுமுட்டேனிய வீங்கருளிவந்தனையே. (௧௪௧)



வேதாலம்வேண்டிநெடும் வேதனையாய்முச்சிறையுள் *
ஏதமிலநின்றுதலை யீர்த்துவிழத்தந்தனை நீ. (௧௪௨)

அம்மறையைநாமுளத்தி லஞ்சிலராய்விட்டொழியா *
மெய்ம்மறையையெம்முளத்தில் வேரூன்றச்செய்வாயே. (௧௪௩)

கன்னிநலமாறுமற் காப்பநெடுநாட்டுயரும் *
பின்னியபல்வேண்டுளவும் பெற்றசையாநின்றனை நீ. (௧௪௪)

காமமுதலுண்மருட்டுங் காதலிடுந்தீவினையின் *
நாமமுதற்சாந்தனையு நாம்வெறுப்புக்காத்தருள்வாய். (௧௪௫)

மண்ணரசுசெல்வமெலாம் வாரினுரையொத்தசென *
விண்ணரசுசென்றடைய விட்டனைத்துநீக்கினை நீ. (௧௪௬)

இவ்வுலகின்வாழ்வனைத்து மெண்ணுமனுமறஞ்சேர் *
அவ்வுலகின்வாழ்வடைய வாய்ந்தொழுகச்செய்வாயே. (௧௪௭)

வான்விரும்பித்தாய்தாதை மற்றினமும்பாராமல் *
கான்விரும்பிநற்றவத்தைக் காத்துமலையண்டினை நீ. (௧௪௮)

இனம்வேண்டியாண்டவனை யீங்கிழவாதோர்நிலையாய்த் *
தினம்வேண்டிகொண்டிருக்கத் திண்ணுறுதித்தந்தருள்வாய். (௧௪௯)

பாயிரத்தோடுன்னடிமை பாடியபுற்பாவிசைத்த *
ஆயிரத்தோர்நூறுதொடை யம்புயத்தாண்மேலணிந்தே. (௧௫௦)

உன்னுமங்கீர்த்திபெற வுள்ளினனென்றன்பொடுநீ *
தன்னுமம்வானுலகிற் றுன்காணத்தந்தருள்வாய். (௧௫௧)

வான்விளைந்தநல்லமுது மட்கலத்திருந்தெனத் *
தேன்விளைந்தகாதைநலஞ் செப்பியசொற்றீதெனினும். (௧௫௨)

உயிர்தருமென்றின்னமிர்த முண்டுயிர்தாம்வாழ்ந்துவந்து *
செயிர்தருமென்சொல்வெறுக்கத் தேர்ந்தநலோரம்மானை. (௧௫௩)

புதுமைகாதை முற்றும்.

---

ஆர்ச்சியசிஷ்ட

கித்தேரியம்மாளம்மானை

முற்றிற்று.

---

அர்ச்சியசிஷ்ட

# கித்தேரியம்மாள்பேரில் புகழ்ச்சி.

## வெண்பா.

பொன்மலையும் வெண்மலையும் பொற்றே ரெழுமலையுஞ் *
சொன்மலையுந் தாமலைந்தே தோற்றிளையா—நன்மலையாம் *
பேயானாத் திதொழியப் பீடையறக் கித்தேரி *
பேர்யாளா னின்றனபோம் பேர். *

## சிந்து.

பொம்பேரிட்டதாளுங் கித்தேரியே புரந்திங்கருள்புரியே.

வெம்பேயுலகுடனு டோறும்பகைத்திடும் *
வெவ்வினைநீத்தெம்மைக் காப்பாயே. பொ (௧)

புகைநேருலகுள செல்வமேகெடுமெனப் *
போயுயர் குன்றி லொளித்தாயே *
பகைநேருறவெலா மென்றுதாய் தந்தையின் *
பாசமிழந்துகளித்தாயே *
முகைநேரிளமையின் மாதவப்படைகொடு *
முப்பகைமுழுதும் வென்றாயே *
நகைநேருடைமையைப் பூண்டிடுவாயுனை *
நண்ணியயாவர்க்குமின்றுயே. பொ (௨)

துயினேருலகுளவாழ் வெனமணவினைத் *
*துன்பமேயென்று துறந்தாயே *
குயினேர்மொழியினை யெண்ணிலார்கதிபெறக் *
கூறிவோன்வழிதிறந்தாயே *
வெயினேர்வடிவினை யின்றலைதறித்திடும் *
வேன்முகத்தஞ்சில நடந்தாயே *
மயினேர்நடையினை தலைகரத்தெடுத்துயர் *
மலைமேலேறிநடந்தாயே. பொ (௩)

கானேர்பிழற்றியெங் காடுவந்தலாவுங் *
காரெனவிங்கெழுந் தாற்றுயே *
பானேரமுறுநோர் வந்தெலைவருத்திடும் *
பண்டுநோய்க்கோர் மருந்தொத்தாயே *
நானேரொருபுகழு னக்கினியுனைப்பவோ *
நயந்துநீயிவ்வுரைக் கொள்வாயே *
வானேரழகினை வாரிநேருளினை *
வான்கதியான்பெறச் செய்வாயே. பொ (௪)

116950
3471